REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 ஒக்டோபர் 3 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN 92 தினகரன்
வரு. 92 இல. 236 | Thursday 03, October, 2024 | 20பக்கங்கள் | 50/-




## 2025 ஏப்ரல் மாதம் வரை எரிபொருள் கையிருப்பில்

### சிபெற்கோ தலைவர் விளக்கம்



இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான சாத்தியம் இல்லையென, இலங்கை பெற்றொலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே.கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

தற்போது நாட்டிலுள்ள எரிபொருள் கையிருப்பு எதிர்வரும் 2025 ஏப்ரல் வரையிலும் போதுமானதாகும்.

அத்துடன் அடுத்தகட்ட எரிபொருள் கையிருப்புக்கான ஆணைகள், முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் 06

### அமெரிக்க கிரீன் கார்ட் 2026

## நவ. 05 வரை Online விண்ணப்பங்கள்



அமெரிக்க கிரீன் கார்ட் (2026) விசாவுக்கான விண்ணப்பங்களை கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் கோரியுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் நேற்று (02), மதியம் 12 மணி தொடக்கம் நவம்பர் 5, வரை ஒன்லைன் பதிவுகளில் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஆண்டு தோறும் 55,000 நபர்களுக்கு அமெரிக்காவில் வசிக்க இந்த விசா வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் மூலம் குறைந்த குடியேற்ற விகிதங்களைக் கொண்ட நாடுகளிலிருந்து தகுதித் தேவைகளைப் பூர்த்தி செய்து, அமெரிக்க குடியேற்ற விசாவைப் பெறுவதற்கான வாய்ப்புக்கு விண்ணப்பிக்க அனுமதிக்கிறது.

இந்த விண்ணப்பத்திற்காக http://dvprogram.state.gov என்ற இணையத்தளத்துக்குள் நுழைய முடியும் என்று தூதரகம் தெரிவித்துள்ளது.

## இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல்; இலங்கையருக்கு எச்சரிக்கை



இஸ்ரேல் மீது ஈரான் தொடர் ஏவுகணை தாக்குதலை நடத்தி வருவதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. அதன்படி, இஸ்ரேல் மீது சுமார் 400 ஏவுகணைகளை ஈரான் ஏவியுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

லெபனான் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்திய இஸ்ரேலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில், ஈரான் இந்த தாக்குதலை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால், இஸ்ரேலியர்களை எச்சரிக்கையாக இருக்கவும், பாதுகாப்பு படை வீரர்களின் அறிவுறுத்தல்களின் படி நடக்குமாறும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இஸ்ரேலிலுள்ள இலங்கை பிரஜைகள் அனைவரும் மறு அறிவிப்பு வரும் வரை, பாதுகாப்பான இடங்களில் இருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமால் பண்டார விசேட அறிவிப்பில் இதனை தெரிவித்துள்ளார்.

தேவையற்ற பயணங்களிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளுமாறும், பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் PIBA வழங்கும் வழிமுறைகளை பின்பற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல், அத்தியாவசிய உணவு, மருந்து, தண்ணீர் ஆகியவற்றை அருகில் வைத்துக் கொள்ளுமாறும் இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

## அதிக பஸ் கட்டணம் அறவீடு; முறையிட தொ.பேசி இலக்கம்



பயணிகளிடமிருந்து அதிக கட்டணம் அறவிடும் பஸ்கள் தொடர்பில் முறையிட தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் 4.24 சதவீதமாக பஸ் கட்டணம் குறைக்கப்பட்டிருந்த நிலையில் ஆரம்ப கட்டணம் 27 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டது.

, நிர்ணயிக்கப்பட்ட பஸ் கட்டணத்தை விட அதிக கட்டணம் அறவிடும் பஸ்கள் தொடர்பில் 06

### இலங்கையில் தொழில்நுட்பத்துறை அபிவிருத்தியுடன்

# டிஜிட்டல் மயமாக்கல்; இந்தியா பூரண ஆதரவு

### ஜனாதிபதியிடம் உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா உறுதியளிப்பு



டிஜிட்டல் மயமாக்கல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில், இலங்கைக்கு ஆதரவளிக்க இந்தியா தயாராக இருப்பதாக இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, நேற்று ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவிடம் உறுதியளித்தார்.

ஊழலுக்கு எதிராக திறம்பட போராடுவதற்கு அரசாங்க கட்டமைப்புகளை, டிஜிட்டல் மயமாக்குவதன் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டிய இந்திய உயர்ஸ்தானிகர், ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள ஊழல் எதிர்ப்பு திட்டத்தையும் அவர் பாராட்டினார். ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் 06

## ஊழலுக்கு எதிராக போராடும் புதிய அரசுக்கு தூதுவர் வாழ்த்து

## விமர்சனங்களை விடுத்து ஒன்றிணைந்து நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவோம்



விமர்சனங்களை விடுத்து, அனைவரும் ஒன்றிணைந்து நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டும். மக்களின் பிரச்சினைகளுக்கு பதிலளிக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாட்டு மக்கள் இன்று இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்த மக்களுக்கும் இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான பயணத்துக்கும் முழு பலமும் ஆதரவும் வழங்கப்பட வேண்டும். பொறாமைத்தன அரசியல் கலாசாரம் கைவிடப்பட வேண்டும். அதிக முயற்சியுடன் நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு நடைமுறை தீர்வுகளை வழங்கும் வேலைத் திட்டத்துக்கு பங்களிப்பும் தலைமைத்துவமும் வழங்கப்பட வேண்டுமெனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். 06

### கட்சி செயற்குழுவிலும் இணக்கம்

## யானை, சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட ஐ.தே.க.முடிவு



எரிவாயு சிலிண்டர் அல்லது யானையை தெரிவு செய்து அடுத்த பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

செயற்குழுவின் பிரேரணை தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஏனைய கட்சிகளுடன் கலந்துரையாடி, இறுதித் தீர்மானம் எடுக்கப்படுமென ருவன் விஜேவர்தன 06

## மதுபான உற்பத்தி நிறுவனங்களின் வரி நிலுவை 1,800 கோடி ரூபா

### நவ. 30 க்கு முன்னர் செலுத்துமாறு அறிவுறுத்து

**லோரன்ஸ் செல்வநாயகம்**

2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுக்கான வரி நிலுவையை இந்த வருடம் நவம்பர் மாதம் 30 க்கு முன்பதாக செலுத்தாத மதுபான உற்பத்தியாளர்களுக்கு, அடுத்த வருடத்துக்கான அனுமதிப் பத்திரத்தை வழங்குவதில்லை என, கலால் திணைக்களம் தீர்மானித்துள்ளது. 1,800 கோடி ரூபா நிதி இவ்வாறு வரி நிலுவையாக அறவிடப்பட வேண்டியுள்ளதாகவும் அந்த வரி நிலுவையை செலுத்தாதவர்களுக்கு அடுத்த வருடத்திற்கான அனுமதிப் பத்திரம் வழங்கப்படமாட்டாது என்றும் கலால் திணைக்கள ஆணையாளர் நாயகம் எம். ஜே. குணசிறி தெரிவித்துள்ளார்.



கலால் வரி திணைக்களமானது அதன் வருமான இலக்கு, அதனை அடைவதற்கான வேலைத் திட்டம், அதில் ஏற்படக்கூடிய தடைகள் மற்றும் அதற்கு தீர்வு காணும் வகையிலான செயற்பாடுகள் ஆகியவை தொடர்பில், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மதுபான உற்பத்தி நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தைகளை நடத்தி வருவது சம்பிரதாயமாகும்.

இந்த வருடத்திற்காக மேற்கொள்ளப்படும் நான்காவது மீளாய்வு நேற்றைய தினம் 06

## நவராத்திரி விரதம் இன்று ஆரம்பம்



சக்தியை நோக்கி அனுஷ்டிக்கும் விரதங்களில் மிகவும் முக்கியமானது நவராத்திரி விரதம். நவராத்திரி விரதத்தைப் போன்று எளிமையானதும் அதேநேரம் மிகுந்த பலன்களைத் தரக்கூடியதுமான வேறு விரதங்கள் இல்லை என்கின்றன புராணங்கள்.

நவராத்திரி விரதம் இன்று ஆரம்பமாகிறது. நவராத்தியின் ஒன்பது நாட்களும், சக்தியை, 06

## அமெரிக்க டொலருக்கு நிகராக ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு



நாட்டில் தற்போது அமெரிக்க டொலருக்கு நிகராக ரூபாவின் பெறுமதி அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பு கடந்த ஒரு வருடத்தின் பின்னர் ஏற்பட்ட மாற்றமாகும்.

அமெரிக்க டொலருக்கு நிகராக நேற்று முன்தினம் ரூபாவின் மதிப்பு 300 ரூபாவை விட குறைவடைந்து காணப்பட்டது.

டொலர் ஒன்றின் விற்பனை விலை 299.35 ரூபாவாக சந்தையில் பதிவாகியது. அத்துடன் டொலர் ஒன்றின் கொள்முதல் விலை 290.30 ரூபாவாக காணப்பட்டது.

2023 ஜூன் 08 இல், இறுதியாக டொலர் ஒன்றின் விற்பனை பெறுமதி 300 ரூபாவுக்கும் குறைவாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 50 அரசாங்க பங்களாக்களுள் 03 மட்டுமே மீள் ஒப்படைப்பு

### 47 பேர் ஒப்படைக்கவில்லை

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் 50 பேருள் மூன்று பேர் மாத்திரமே அரசாங்க பங்களாக்களை மீள ஒப்படைத்துள்ளதாக பொது நிர்வாகம், நீதிமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் மற்றும் தொழில் அமைச்சின் உள்ளக தகவல்கள் தெரிவித்துள்ளன.

அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் 10 பேர் வீடுகளை ஒப்படைப்பது தொடர்பில் விசாரித்திருந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு 50 அரசாங்க பங்களாக்கள் வழங்கப்பட்டிருந்தன.

அனைத்து அரசாங்க பங்களாக்களையும் மீள ஒப்படைக்குமாறு பொது நிர்வாகம், நீதிமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றம் மற்றும் தொழிலாளர் அமைச்சுக்களுக்கு அண்மைய தினங்களில் அறிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு பங்களாக்களை மீள ஒப்படைக்காத முன்னாள் அமைச்சர்கள் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சென்னை துணை தூதரகம் அருகில் மீனவர்கள் முற்றுகைப் போராட்டம்

### செவ்வாய்க்கிழமை இடம்பெறும் என்கிறார் இராமதாஸ்



இலங்கை சிறைகளிலுள்ள 162 தமிழக மீனவர்களையும் அவர்களது 192 படகுகளையும் விடுவிக்க வேண்டுமென இலங்கை அரசையும், அதற்கான நடவடிக்கைகளை எடுக்க மத்திய, மாநில அரசுகளையும் வலியுறுத்தி தமிழகத்தில் முற்றுகைப் போராட்டம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் 08 செவ்வாய்க்கிழமை பாட்டாளி மக்கள் கட்சி சார்பில் சென்னையிலுள்ள இலங்கை துணைத்தூதரகத்தின் அருகில்,இந்த முற்றுகைப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக கட்சித் தலைவர் அன்புமணி இராமதாஸ் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாட்டில் இராமேஸ்வரம் முதல் நாகப்பட்டினம் வரையிலான இந்திய எல்லைக்கும், இலங்கை எல்லைக்கும் இடைப்பட்ட கடல் பரப்பு மிகவும் குறுகியது. அதனால், தமிழ்நாட்டு மீனவர்களாக இருந்தாலும், இலங்கை மீனவர்களாக இருந்தாலும் எல்லையைக் கடக்காமல் மீன்பிடிக்க முடியாது. அதே நேரத்தில் அந்தப் பகுதிகளில் தான், இரு நாட்டு 06

## மலையக, ஈழத்தமிழர்களுக்கு அனுதாபமன்றி நியாயமே வேண்டும்

### பொறுப்புடன் ஒத்துழைப்பு வழங்குவோம்



ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று பதவி ஏற்றுள்ள ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு மனப்பூர்வமான வாழ்த்துகள் தெரிவிப்பதுடன் அரசியல் குரோதங்கள், கட்சி வேறுபாடுகற்ற ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு தமிழ் முற்போக்கு கூட்டணி ஆதரவாக செயற்படும் என, 06

## பொதுத் தேர்தலில் ஜனாதிபதியின் கட்சி 113 ஆசனங்களை பெறும்

### துஷ்பிரயோகத்தை மக்கள் நிராகரிப்பு



மிதமிஞ்சிய ஊழல், அதிகார துஷ்பிரயோகம், நீதித்துறையை பொருட்படுத்தாதமை, பிழையான சட்டங்கள் என்பவற்றாலேயே, தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தலில் அபார வெற்றியீட்டியதாகவும், இந்த வெற்றியின் மூலம் பாராளுமன்றத்தில் 113 ஆசனங்களை தேசிய மக்கள் சக்தி இலகுவாகப் பெறும் என்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் தூதுவருமான 06

## பிரிந்து செயற்படின் ஆசனங்களை இழப்போம்: செல்வம் எச்சரிக்கை

### கள நிலவரங்களும் இதையே காட்டுகின்றன



எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாங்கள் பிரிந்து செயல்படுவோமாக இருந்தால் எவருக்கும் ஆசனங்கள் கிடைக்காத நிலையே ஏற்படுமென முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் எச்சரித்துள்ளார்.

ஆசனங்கள் வேறு யாருக்கும் கிடைக்கின்ற வாய்ப்புகள் இருக்கும் என முன்னாள் வன்னி பாராளுமன்ற 06

# நகர்வலம்



# பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் புதிய பாதுகாப்பு செயலருடன் சந்திப்பு

(ஸாதிக் ஷிஹான்)

பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் பஹீம் உல் அஸீஸ் (ஓய்வு), புதிய பாதுகாப்பு செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்தாவை சந்தித்து கலந்துரையாடினார்.

கோட்டே, ஸ்ரீ ஜயவர்தனபுரவிலுள்ள பாதுகாப்பு தலைமையக வளாகத்தில் (01) இந்த சந்திப்பு நடைபெற்றது.

அமைச்சுக்கு வருகை தந்த பாகிஸ்தான் உயர் ஸ்தானிகரை, உத்தியோகபூர்வமாக வரவேற்ற பாதுகாப்பு செயலாளர் பாகிஸ்தான் உயர் ஸ்தானிகருடன் விஷேட கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இருதரப்பு உறவுகள் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த தொடர்ந்து பாகிஸ்தானுடன் நெருக்கமாக பணியாற்ற விரும்புவதாகவும் பாதுகாப்பு செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்தா தெரிவித்தார்.



எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்தா பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக அண்மையில் பொறுப்பேற்ற பின்னர், நடைபெற்ற முதலாவது உத்தியோகபூர்வ சந்திப்பு இதுவாகும்.

பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் தம்மிக்க வெலகெதர மற்றும் பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கேர்ணல் முஹம்மட் பாரூக் ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## கொழும்பு விவேகானந்தா கல்லூரியில்

# மாணவர்களை விழிப்புணர்வூட்டும் 'அபே பிரின்சிபல்' திரைப்படம்

மேல் மாகாணத்தில் முதல் முறையாக தமிழ் மொழியில் 'அபே பிரின்சிபல்' என்ற திரைப் படம் தமிழில் மொழி மாற்றம் செய்து "இனி ஒரு விதி செய்வோம்" என்ற தலைப்பில் பாடசாலைகளில் திரையிட்டு காண்பிக்கப்பட்டமை விஷேட அம்சமாகும். இனிவரும் காலங்களில் ஏனைய பிரதேச பாடசாலைகளிலும் அதிபர்களின் அனுமதி, வழிகாட்டலுடன் திரையிடப்படவுள்ளது.

திரைப்படமானது நாட்டில் போதைவஸ்துகளால் மற்றும் கையடக்க தொலைபேசிகளால் பாடசாலை மாணவர்கள் பாதிக்கப்படுவதை விழிப்புணர்வாக தெளிவூட்டும் திரைப்படம். பாடசாலைகளில் திரையிட கல்வி அமைச்சின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. விரைவில் நாடு முழுவதும் உள்ள பல பாடசாலைகளில் இத்திரைப்படத்தை ஒரு சிறிய கட்டணத்துடன் காண்பிக்க ஏற்பாடுகளை செய்துள்ளோம்.



# ஒக்டோபர் 19ஆம் திகதி 'ஸ்கை' தமிழ் விருது விழா

## புரவலர் ஹாசிம் உமர் பிரதம அதிதி



இலங்கையின் முன்னணி ஆளுமைகளை கௌரவிக்கும் மாபெரும் நிகழ்வான 'ஸ்கை' தமிழ் விருது விழா ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட மண்டபத்தில் இம்மாதம் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இலங்கையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட பல்வேறு துறைகளிலும் தமது ஆளுமையை நிரூபித்துவரும் சாதனையாளர்களை ஒரே மேடையில் கௌரவிக்கும் இந்த மாபெரும் விழாவில் பிரதம அதிதியாக இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஆலோசகர் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் கலந்து சிறப்பிப்பார். முழு நாட்டிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், சமூக சேவையாளர்கள், ஊடகவியலாளர்கள், ஆன்மீகத் தலைவர்கள் என பல்துறை சார்ந்த சாதனையாளர்கள் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

# 167ஆவது திருவள்ளுவர் சிலை திறப்பு



விஜிபி உலகத் தமிழ் சங்கத்தின் 167ஆவது திருவள்ளுவர் சிலையினை பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி வளாகத்தில் விஜிபி உலக தமிழ் சங்கத்தின் தலைவர் டாக்டர் வி ஜி சந்தோசம் முன்னிலையில் தமிழக சட்டப்பேரவையின் தலைவர் மாண்புமிகு அப்பாவு திறந்து வைத்தார். அருகில் அதிபர் தந்தை இன்னாசி முத்து, கல்லூரியின் முதல்வர் அருள் தந்தை காட்வின் ரூபஸ் மற்றும் திருநெல்வேலி மாநகராட்சியின் துணை மேயர் கே ஆர் ராஜு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வட மத்திய மாகாண ஆளுநர் கடமையேற்பு



(அநுராதபுரம் தினகரன் நிருபர்)

வட மத்திய மாகாணத்தின் 13ஆவது புதிய ஆளுநராக முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி வசந்த ஜினதாச சுபவேளையில் கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

இந் நிகழ்வு வடமத்திய மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.நிகழ்வில் வடமத்திய மாகாண பிரதான செயலாளர் வருன சமரதிவாகர உள்ளிட்ட அமைச்சின் செயலாளர்கள் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் முன்னாள் வடமத்திய மாகாண சபை உறுப்பினர் வசந்த சமரசிங்க உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# தில்லையடியில் தே.ம.சவின் திறந்த கலந்துரையாடல்

(புத்தளம் தினகரன் நிருபர்)

ஜனாதிபதி தேர்தலில் திசைகாட்டி சின்னத்துக்கு ஆதரவு திரட்டி ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் வெற்றிக்காக பணியாற்றிய புத்தளம் நகர சபை தில்லையடி வட்டாரத்தின் மக்களை சந்திக்கும் நிகழ்வு அண்மையில் தில்லையடியில் நடைபெற்றது.

தில்லையடியைச் சேர்ந்த மூவின மக்களும் கலந்துகொண்ட இச்சந்திப்பில் துறைசார் பிரமுகர்கள், பெரியவர்கள், வாலிபர்கள் என பலரும் வருகை தந்திருந்தனர்.

இச்சந்திப்பில், தே.ம.ச. புத்தளம் மாவட்ட நிறைவேற்றுச் சபை உறுப்பினர்களான எம்.ஜே.எம். பைசல், ஹிஷாம் ஹுஸைன் மற்றும் புத்தளம் நகர செயற்குழுவின் தலைவர் எம்.ஏ.எம். ரியாஸ், செயலாளர் எம்.எல்.எம். சர்ராஜ் ஆகியோருடன் எம்.



என்.எம். நப்லான் (வட்டாரம் 05 தலைவர்), ஆர்.எம். அஸார்தீன் (வட்டாரம் 03 தலைவர்) உட்பட எம்.எச்.எம். நாஸிக் (வட்டாரம் 07), எம். பஸ்ரின் (வட்டாரம் 05) ஆகியோரும் கலந்துகொண்டனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது, தில்லையடி வட்டாரத்தில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்காக இயக்கக் குழுவொன்றும் இதன் போது அமைக்கப்பட்டது.

ஊழல்வாதிகளினால் சீரழிந்துள்ள பாராளுமன்றத்துக்கு நல்லவர்களை தெரிவு செய்வதற்காகவும், சிறந்ததொரு தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காகவும் தில்லையடியில் வீடு வீடாகச் சென்று மக்களை அறிவூட்டுவதற்கு உறுதி கூறினர்.

# மாவனல்லை ஸாஹிராவில் முன்மாதிரியான சிறுவர் தின வைபம்





உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு மாவனல்லை ஸாஹிரா தேசிய பாடசாலையில் முன்மாதிரியான சிறுவர் தின நிகழ்வுகள் இடம்பெற்றன. சிறுவர் தினத்தை அனுஷ்டிக்கும் நோக்கில் ஏனைய பாடசாலைகளை விட இப்பாடசாலையில் எவரும் நினைக்காதளவு மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் சிறுவர் தின நிகழ்வு நடைபெற்றமை விசேட அம்சமாகும். இதில் மாணவர்கள், அதிபர், ஆசிரியர்களால் அன்பளிப்புகளும் வழங்கப்பட்டு, மாணவர்கள் வரவேற்கப்பட்டனர்.

ஆசிரியர்களால் விஷேட காலை ஆராதனையும் நிகழ்த்தப்பட்டதோடு விஷேட சிறுவர் தின சொற்பொழிவும் நிகழ்த்தப்பட்டது. மேலும் சித்திரக் கண்காட்சி, திறன் மேடை, விழுமியக் குறும்படம், மாணவர்களின் ஆக்கக் கண்காட்சி, மைதான விஷேட நிகழ்ச்சிகள், முதியோர் மட்டும் வசிக்கும் வீடுகளுக்கு சென்று உலர் உணவு பொதி வழங்கியமையோடு "எமக்கு நாமே நிழலாகுவோம்" எனும் தொனிப் பொருளில் உண்டியல் மூலமாக தர்மத்தை ஊக்குவிக்கும் நோக்கில் வேலைத் திட்டமொன்றையும் அறிமுகப்படுத்தி சிறப்பாக சிறுவர் தினத்தை கொண்டாடியமையை அனைவரும் பாராட்டினர்.



# நாச்சியாதீவு அல் ஹிகம் கல்லூரியில் மீலாதுன் நபி தின சிறப்பு நிகழ்வு

(திறப்பனை தினகரன் நிருபர்)

நாச்சியாதீவு அல் ஹிகம் அரபுக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட மீலாதுன் நபி சிறப்பு ஒன்று கூடல் நிகழ்வொன்று கல்லூரி மண்டபத்தில் அதிபர் முப்தி உவைசுல் கர்னி (ரஹ்மானி) தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வை கல்லூரி நிருவாகம், கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் ஒத்துழைப்புடன் கல்லூரியின் மாணவர் குழு ஏற்பாடு செய்திருந்தனர். இங்கு நபி (ஸல்) அவர்களின் பிறப்பு, இறப்பு, வாழ்க்கை வரலாறு





நினைவுபடுத்தப்பட்டதோடு, மாணவர் ஆசிரியர்களின் பல்வேறு ஆக்கங்களும் இங்கு வெளிக்கொணரப்பட்டன.பல்வேறு தலைப்புக்களில் மாணவர் உரையும் கவிதை, கட்டுரை, பாடல், கஸீதா, கிராஅத்,பேச்சு என்று முஹம்மத் (ஸல்) அவர்களின் வரலாற்றை தெளிவுபடுத்தும் அரபு, ஆங்கிலம், சிங்களம், தமிழ் மொழிகளில் பல்வேறு நிகழ்வுகளைக் கொண்டு மாணவர் நிகழ்வை அலங்கரித்திருந்தனர்.

பெற்றோர், மாணவர் ஆசிரியர்கள், நிர்வாகிகள் என பலர் இதன் போது ஒன்றிணைந்திருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# அந்நஹ்லா பாடசாலையில் சிறுவர் விளையாட்டு



(அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

மரதன்கடவல இஹலபுளியங்குளம் அந்நஹ்லா பாலர் பாடசாலையின் விளையாட்டு தின நிகழ்வுகள் இஹலபுளியங்குளம் முஸ்லிம் வித்தியாலய மைதானத்தில் பாலர் பாடசாலை ஆசிரியர்களான மலீஹா மற்றும் சாமிலா பானு ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் அந்நஹ்லா அஹதிய்யா பாடசாலையின் தலைவர் தேசமான்ய பீ. ஜாயிஸ், பாடசாலை அதிபரும் புலமை வழிகாட்டி ஆசிரியருமான தேசமான்ய எம்.ஆர்.எம். ரனீஸ் மற்றும் சமூக நலன்விரும்பி எம்.எம்.இஸ்மாயில் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

மாணவர்களுக்கான சான்றிதழ்கள் புலமை வழிகாட்டி குழுமத்தினால் வழங்கி வைக்கப்பட்டதுடன் இஸ்மாயில் குடும்பத்தினரால் பரிசுப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2024 ஒக்டோபர் 3 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.43
லுஹர் - 12.01
அஸர் - 03.16
மஃரிப் - 06.01
இஷா - 07.11

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் புரட்டாதி 17
ராகுகாலம் : பகல் : 1.32 - 3.02வரை
சுபநேரம் : காலை : 7.32 - 9.02வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# பிரதமர் ஹரிணியின் பங்கேற்பில் காந்தி ஜெயந்தி கொண்டாட்டம்

காந்தி ஜெயந்தியின் 155 ஆவது பிறந்த தினத்தை நினைவுகூரும் முகமாக பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவும் நேற்று (02) காலை கொழும்பிலுள்ள பிரதமர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள மகாத்மா காந்தி சிலைக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

நிகழ்வுகளை தொடர்ந்து உயர்ஸ்தானிகர், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை சந்தித்தார்.

மகாத்மா காந்தியின் 150ஆவது பிறந்த தின நிகழ்வை முன்னிட்டு 2019 இல் இந்தச் சிலை, இந்தியாவால் அன்பளிக்கப்பட்டிருந்தது.







தியான நிலையிலிருக்கும் மகாத்மா காந்தியின்,இந்த 42 அங்குல வெண்கல சிலை, பத்மபூசண் விருதுபெற்ற, ராம் வஞ்ஜி சுதர் என்பவரால் வடிவமைக்கப்பட்டதாகும்.

குஜராத்தின் கேவாடியாவிலுள்ள உலகின் மிகவும் உயரமான வெண்கலச் சிலையான, சர்தார்பட்டேலின் சிலையும் சுதர் என்பவரால் வடிவமைக்கப்பட்டதாகும்.

காந்தி ஜெயந்தியை நினைவுகூரும் முகமாக நேற்று மாலை இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் கலாசாரப் பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் ஒத்துழைப்புடன், இலங்கை இந்திய சங்கத்தால் மகாத்மா காந்தி நினைவுப் பேருரை ஒன்றும் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இந்நினைவுப் பேருரை இந்தியாவுக்கான முன்னாள் இலங்கை உயர்ஸ்தானிகர் ஒஸ்டின் பெர்னான்டோவினால் நிகழ்த்தப்பட்டது. இலங்கை இந்திய சங்கத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் இந்நிகழ்வானது மகாத்மா காந்தியின் போதனைகள் மற்றும் இன்றைய உலகிற்கான அவற்றின் பொருத்தப்பாடு குறித்து பிரதிபலிப்பதற்கான ஒரு தளமாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆசிய அபிவிருத்தி வங்கி தலைவர் ஜனாதிபதி அநுரவிற்கு வாழ்த்து

ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) தலைவர் மசட்சுகு அசகாவா, புதிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் வேலை த்திட்டத்தை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்த அவர், இலங்கையில் அமைதியான மற்றும் ஜனநாயக ரீதியிலான தேர்தலை நடத்தியமைக்காக இலங்கை மக்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

1966 முதல் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை சுட்டிக்காட்டிய அசகாவா, பல ஆண்டுகளாக இலங்கையின் பொருளாதார சீர்திருத்தங்களிலும் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதிலும் ஆசிய அபிவிருத்தி வங்கி



உறுதியான பங்காளியாக இருந்து வந்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் தலைமைத்துவம், இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி வலுவாக முன்னோக்கி கொண்டு செல்ல உதவும் எனவும் அந்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பொய்யான தகவல்களை வழங்கி அதிசொகுசு வாகனங்கள் 200 இறக்குமதி

## கோடிக்கணக்கில் மோசடி செய்த சந்தேகநபரை கைது செய்ய உத்தரவு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

சாதாரண கார்கள் எனக் கூறி சுங்க அதிகாரிகளை ஏமாற்றி கோடிக்கணக்கான பெறுமதி வாய்ந்த அதிசொகுசு வாகனங்களை இறக்குமதி செய்த நபரை, உடனடியாக கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.



இவ்வாறு சுமார் 200 அதிசொகுசு காரர்களை மேற்படி நபர் இறக்குமதி செய்துள்ளதால், அவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துமாறு கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் நீதவான் திலின கமகே இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட கார்கள் தொடர்பில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் தரவுத் தொகுதியில் போலி தகவல்கள் உள்ளடக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

06

# ஈ. பி. டி. பி. தனித்துப் போட்டியிட முடிவு கொழும்பு மாவட்டத்திலும் வேட்புமனு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



ஈ.பி. டி. பி கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான கட்சி, எதிர்வரும் பொதுத்தேர்தலில் எந்த கூட்டணியுடனும் இணைவதில்லை என தீர்மானித்துள்ளது.

ஈ.பி. டி.பி கட்சி வீணை சின்னத்தில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தனித்து போட்டியிடவுள்ளதாகவும் அந்த கட்சி தெரிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இக்கட்சி எதிர்வரும் தேர்தலில் போட்டியிட வுள்ளது. இம்முறை கொழும்பு மாவட்டத்திலும் கட்சி போட்டியிட வுள்ளதாகவும் அதற்கான வேட்பு மனுவை தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்த கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

06

# இலங்கையின் முன்னேற்றத்துக்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவு

## தூதுவர் ஜுலி சங்க் அமைச்சர் விஜிதவிடம் உறுதி

இலங்கையின் முன்னேற்றத்துக்குத் அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவு வழங்குமென இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்க், தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்க் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தை நேற்று சந்தித்துபேச்சு நடத்தினார். இதுதொடர்பில் அமெரிக்கத் தூதுவர் தங்களது தூதரகத்தின் எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமிடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கும், பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் மனித உரிமைகள் போன்ற விடயங்களில் இணைந்து பணியாற்றுவதற்கும் எதிர்பார்த்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தேசிய ஒருமைப்பாடு, நீதி மற்றும் வெளிப்படையான நிர்வாகத்தை நோக்கிய இலங்கையின் முன்னேற்றத்துக்கு



ஆதரவளிக்க அமெரிக்கா தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் அமெரிக்க தூதுவர் ஜூலி சங்க் இதன்போது தெரிவித்தார்.

# டெங்கு ஒழிப்புக்கான நிபுணத்துவ அறிவை கியூபாவுடன் பகிர இணக்கம்

## கியூபா தூதுவருடனான சந்திப்பில் ஜனாதிபதி

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் இலங்கைக்கான கியூப தூதுவர் அண்ட்ரஸ் மார்ஷலோ கொன்ஷாலேஸ் கொரிடோ (Andres Marcelo Gonzales Gorrido) ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று (02) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது இரு நாடுகளுக்குமிடையிலான நீண்ட கால இராஜதந்திர தொடர்புகள் மற்றும் நட்புறவுகளை பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.



ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக் கொண்ட வெற்றிக்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு வாழ்த்து தெரிவித்த கியூபா தூதுவர், ஜனாதிபதியின் தலைமைத்துவத்துக்கு பாராட்டு தெரிவித்ததோடு, இலங்கையுடனான

06

# பாட்டலிக்கு எதிரான வழக்கு பெப்ரவரி 28 க்கு ஒத்திவைப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

வாகன விபத்து தொடர்பான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க மீதான வழக்கு பெப்ரவரி 28 க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இராஜகிரிய பகுதியில் 2016 இல்,இடம்பெற்ற வாகன விபத்து தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் 2025 பெப்ரவரி மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேற்படி வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போது பிரதிவாதியான பாட்டலி சம்பிக்க ரணவக்க நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார்.

சம்பிக்க ரணவக்கவின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி அமரசிறி பண்டிதரத்ன, நீதிமன்றத்தில் சில விடயங்களை முன்வைத்தார். இந்த வழக்கின் விசாரணைகளை நிறுத்தி வைத்து உயர் நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்படி, இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு பிறிதொரு திகதியை வழங்குமாறு சட்டத்தரணி நீதிமன்றத்தைக் கேட்டுக்கொண்டார்.

06

# ஏழு நாடுகளின் தூதுவர்களுடன் ஜனாதிபதி அநுர நேற்று சந்திப்பு

ஏழு நாடுகளின் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் உள்ளிட்ட இராஜதந்திரிகளுடன் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று (02) சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

சகல நாடுகளுடனும் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கையின் பிரகாரம், வெளிநாட்டு தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகளை ஜனாதிபதி சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்படி, கியூபா, ஐக்கிய இராச்சியம், அவுஸ்திரேலியா, சீனா, ஜப்பான், கனடா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகள் ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடினார்.

# இந்திய வெளிவிவகார அமைச்சர் நாளை வருகை

## ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடன் சந்திப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்சங்கர், நாளை வெள்ளிக்கிழமை இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

நாட்டில் புதிய ஜனாதிபதியின் கீழ் அரசாங்கம் அமைக்கப்பட்டதன் பின்னர், நாட்டுக்கு வருகை தருகின்ற முதலாவது சர்வதேச இராஜதந்திரி இவராவார்.

இலங்கைக்கு விஜயம் செய்யும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, பிரதமர் ஹறிணி அமரசூரிய மற்றும் அரசாங்கத்தின் முக்கிய உயர்மட்ட அதிகாரிகளையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

இந்த பேச்சு வார்த்தைகளின்போது இலங்கை இந்திய கூட்டு நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில், முக்கிய கவனம் செலுத்தப்படும் என அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வெள்ளிக்கிழமை இடம்பெறும் இச்சந்திப்பு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# சமூக ஆர்வலர் திருச்செல்வம் மறைவு கொழும்பு வர்த்தக சமூகம் அனுதாபம்

தொழிலதிபரும் சமூக சேவையாளருமான சோலைமலைத் தேவரின் மகன் திருச்செல்வம் ஜேபி (59) உடல் நலக்குறைவு காரணமாக நேற்று (2) காலை சென்னை தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி காலமானார்.



கண்டி திருத்துவ கல்லூரி, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், அமெரிக்கா நியூயார்க் New Hampshire Community Technical Colleges இல் MBA Finance வரை உயர்கல்வி பயின்ற இவர் கொழும்பு, சென்னை மற்றும் மதுரையிலும் வர்த்தக செயற்பாடுகளில் நீண்ட காலமாக ஈடுபட்டுள்ளார்.

06

# புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் அடுத்த வாரம் முதல் வெளிவரும்

தரம் 5 வகுப்பு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் நாளைய தினகரனில் பிரசுரமாகாது என்பதை மாணவர்களுக்கு அறியத் தருகின்றோம்.

மாணவர்களுக்கான புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் வாரம் தோறும் தினகரனில் வழமை போல வெளிவரும். மாணவர்களே, உங்கள் பிரதிகளை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.



தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் புரட்டாதி மாதம் 17ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் அவ்வல் பிறை 29

## குறள் தரும் சிந்தனை



படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்

*நடுவுநிலைமை அல்லாதவற்றைக் கண்டு நாணி ஒதுங்குகின்றவர், பிறர் பொருளைக் கவர்வதால் வரும் பயனை விரும்பிப் பழியான செயல்களைச் செய்யார்.*

# மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளிப்பது தமிழ்க்கட்சிகளின் கடமை

சுதந்திர இலங்கையின் பத்தாவது பொதுத் தேர்தலுக்கு அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நாளை 04 ஆம் திகதி முதல் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்து இருக்கின்றது. அந்த வகையில் அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் கட்டுப்பணம் செலுத்த ஆரம்பித்துள்ளன.

அதேநேரம் இத்தேர்தலை எதிர்கொள்வதற்கான ஏற்பாடுகளில் அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் தீவிரமாக ஈடுபட்டுள்ளன. அந்த அடிப்படையில் பேச்சுவார்த்தைகளும் சந்திப்புகளும் கலந்துரையாடல்களும் இடம்பெற்று வருகின்றன. சில கட்சிகள் கூட்டணி அமைத்து தேர்தலை எதிர்கொள்வதற்கான முயற்சிகளில் கூடிய கவனம் செலுத்தியுள்ளன.

இருந்த போதிலும் இற்றைவரையும் இத்தேர்தலை கூட்டணி அமைத்தா அல்லது தனித்தா எதிர்கொள்வது என்பது தொடர்பில் பெரும்பாலான கட்சிகளுக்கு மத்தியில் இணக்கப்பாடு எட்டப்படாத நிலையே நீடிக்கிறது.

இதே நிலைதான் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு மத்தியிலும் காணப்படுகிறது. ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு கட்சியுடன் கூட்டணி சேர விரும்பாத நிலை நிலவுகிறது. கட்சிகளுக்கு இடையில் முரண்பாடுகளும் இணக்கப்பாடுகள் இன்மையும் மலிந்து காணப்படுவதன் வெளிப்பாடே இதுவாகும். ஆனால் இது ஆரோக்கியமான நிலை அல்ல. பெரும்பாலான மக்களின் கருத்து அதுதான்.

பொதுவாக ஜனநாயக நாட்டில் மக்கள் வாக்களித்து தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து கொள்வதானது தங்களது எதிர்பார்ப்புகளையும் விருப்பங்களையும் தங்கள் பிரதிநிதிகள் ஊடாக அரசிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கேயாகும். அவர்கள் மக்களின் குரல்களாக மக்கள் சபையான பாராளுமன்றத்தில் ஒலிக்க வேண்டியவர்கள். மக்களுக்கு சேவையாற்றுவதுதான் மக்கள் பிரதிநிதிகள் என்பவர்களின் பொறுப்பும் கடமையும் ஆகும். மக்களின் எதிர்பார்ப்புகளையும் தேவைகளையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்வதற்கான ஊடகமாக செயற்பட வேண்டியவர்கள் அவர்கள்.

ஆனால் அண்மைக் காலத்தில் நாட்டில் உருவாகியுள்ள அரசியல் கலாசாரத்தில் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொண்டால் போதும் என்ற மனப்பான்மை பெரும்பாலான அரசியல்வாதிகளிடம் உருவாகியுள்ளது. அதாவது 'ஆறு கடக்கும் வரை அண்ணன் தம்பி' என்ற முதுமொழிக்கு ஏற்ப செயற்படுகின்றனர். வாக்கைப் பெற்று மக்கள் பிரதிநிதியானதும் தமக்கு வாக்களித்த மக்களின் எதிர்பார்ப்புக்களை அநேக மக்கள் பிரதிநிதிகள் மறந்து விடக் கூடியவர்களாக உள்ளனர். இந்த நிலைமை மாற வேண்டும் என்பதே மக்களின் விருப்பமாகும்.

தற்போது அரசியல் கட்சிகள் மத்தியில் நிலவும் முரண்பாடுகளும் இணப்பாடுகள் இன்மையும் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க வழிவகுக்காது என்ற கருத்து பரவலாக நிலவுகின்றது.

அதனால் அரசியல் கட்சிகள் ஒற்றுமையாக செயற்பட வேண்டும். அப்போதுதான் மக்கள் தங்கள் பிரதிநிதித்துவங்களை உறுதிப்படுத்திக் கொள்வதோடு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கும். குறிப்பாக தமிழ் மக்களின் நீண்ட காலம் தீர்க்கப்படாதிருக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள இது வழிவகுக்கும்.

தவறும் பட்சத்தில் நீண்ட காலம் தீர்க்கப்படாதிருக்கும் மக்கள் பிரச்சினைகள் தொடரவே வழிவகுக்கும். அதனால் தான் சமூக ஆர்வலர்களும் நலன் விரும்பிகளும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு மத்தியில் ஒற்றுமை ஏற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் "அம்பாறை மாவட்டத்தில் தமிழ் அரசியல் கட்சிகள் மக்களின் இருப்பு மற்றும் நலன் பற்றிய சிந்தனை இன்றி ஒரேகுடையின் கீழ் ஒன்றுபடாமல் ஏதாவது தனிவழித் தீர்மானங்களை எடுப்பார்களாக இருந்தால், நிச்சயமாக கல்முனை தொகுதி தமிழ் மக்கள் மாத்திரமல்லாமல், இந்த மாவட்ட அனைத்துத் தமிழ் மக்களும் தமிழ் அரசியல் பரப்பிலிருந்து அகன்று வேறு ஒரு முடிவை எதிர்வரும் தேர்தல் களத்தில் மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என்பதை அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் பகிரங்கமாக வெளிப்படுத்துகின்றோம்" என்று அம்பாறை மாவட்ட சமூக ஆர்வலர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இது மக்களின் ஆதங்கத்தின் வெளிப்பாடாகும்.

ஆகவே மக்களின் எதிர்பார்ப்புக்கு அமைய ஒன்றுபட்டு இத்தேர்தலை எதிர்கொள்ள வேண்டும். தவறும் பட்சத்தில் மக்கள்தான் நஷ்டங்களுக்கு உள்ளாவர். அதனை அரசியல் கட்சிகள் கருத்தில் கொள்ள வேண்டும். குறிப்பாக மக்கள் பிரதிநிதித்துவம் இழக்கப்படுவதைத் தவிர்க்க இயலாது. அதன் விளைவாக தீர்க்கப்படாதுள்ள மக்களின் பல பிரச்சினைகள் நீடித்து நிலைக்கக் கூடியதாக அமைந்துவிடும். அதனால் மக்களின் நலன்களையும் மக்களின் எதிர்பார்ப்புக்களையும் கருத்தில் கொண்டு செயற்படுவது அரசியல் கட்சிகளின் பொறுப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# முப்பெரும் தேவியரின் அருள் வேண்டி வழிபடும் நவராத்திரி இன்று ஆரம்பம்

*நவராத்திரி என்பது அம்பிகையை வழிபடுவதற்குரிய மிக முக்கியமான காலமாகும். இந்த ஆண்டு நவராத்திரிவிழா இன்று 3 ஆம் திகதி தொடங்கி எதிர்வரும் 11 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படுகின்றது.*

*அன்னையின் நவ அம்சங்களை உணர்த்தும் நாயகியருக்கு வழிபாடு செய்யும் வைபவமே நவராத்திரி விழா. புரட்டாதி மாதத்தில் வரும் மஹாளய அமாவாசையை அடுத்த பிரதமை முதல் 9 நாட்களுக்கு செய்யப்படும் நவராத்திரி எனப்படும் தேவிவழிபாடு மிகச்சிறப்பானது. இதில் 3 நாட்களில் ஆதிபராசக்தியை துர்க்கையாகவும், அடுத்த 3 நாட்களுக்கு லட்சுமியாகவும், அதற்கடுத்த 3 நாட்கள் சரஸ்வதியாகவும் இந்துக்கள் வழிபடுகிறார்கள்.*

*'நவ' என்பது சிறப்பு வாய்ந்த சொல்லாகும். இதற்கு இரு பொருள்கள் உள்ளன. ஒன்று, ஒன்பது. மற்றொன்று புதியது. எனவே இந்த நவராத்திரியை ஒன்பது இராத்திரிகள் என்று பொருள் கொள்வதைவிட, புதிய இராத்திரிகள் என்று பொருள் கொண்டு பார்க்க வேண்டும்.*

*மலைமகளான துர்க்கையே முதல் மகளாக இருப்பதால், நவராத்திரியின் முதல் மூன்று நாட்களும் துர்க்கை இடம் பெற்று பக்தர்களின் துயர்துடைக்கிறாள்.*

*முதல் இராத்திரியின்போது மலர்களால் துர்க்கையை அலங்கரித்து வழிபட்டால் சர்வமங்கள ரூபிணியாக அவள் நமது கிரகத்தில் கொலு வீற்றிருப்பாள்.*

*இரண்டாவது இராத்திரியின்போது ஆபரணங்களை அவளுக்கு அணிவித்தாள், சர்வாபரண பூஷிதையாக அருள் பாலிப்பாள்.*

*மூன்றாவது இராத்திரியின்போது, முதலில் செய்வித்த பூஜைகளுக்கு மகிழ்ந்து ஞானத்தை நல்குகிறாள்.*

*முதல் மூன்று நாட்களிலும் மங்கலத்தையும், அருளையும், ஞானத்தையும் துர்க்கையிடமிருந்து பெறும் பக்தர்கள், அடுத்த மூன்று நாட்களிலும் மகாலட்சுமியை பூஜிக்க ஆயத்தமாகின்றனர்.*

*செல்வத்திற்கு அதிபதியான மகாலட்சுமியை நான்காவது நாளில் பூஜிக்க வேண்டும். ஐந்தாவது நாளில் பூஜிப்பதால், சகல சௌபாக்கியங்களும், ஆயுள் விருத்தியும் கிட்டும். ஆறாவது நாளில் பூஜிப்பதால் நாளும் உணவு கிடைக்கும் வண்ணம் மக்களை மகாலட்சுமி காத்தருளுவாள்.*



*இந்த ஆறு நாட்களும் முடிந்த பிறகு வித்தைக்கு அதிபதியான சரஸ்வதி வருகிறாள். ஏழாவது நாளில் நாதஸ்வரூபமாக எழுந்தருளும் கலைவாணி மக்களுக்கு வினயத்தைத் தந்தருளுகிறாள்.*

*எட்டாவது நாளில் வாழ்க்கையில் எட்டாததையும் எட்டச் செய்து, ஏற்றத்தை நல்குகிறாள்.*

*ஒன்பதாவது நாளில், அழியாத தன்மையைத் தருகிறாள். செல்வம் அழிந்தாலும் கற்ற வித்தை அழியாது என்பதை உணர்த்துகிறாள்.*

*பத்தாவது நாள் விஜயதசமி ஆகும். விஜயம் என்றாலே வெற்றி. நவராத்திரியின் போது துர்க்கா, லட்சுமி, சரஸ்வதி என்று இம்மூவரையும் பூஜிப்பவர்களுக்கு எதிலும் வெற்றி கிடைக்கும். அவர்கள் எல்லா நலனும் பெறுவார்கள். அதை உணர்த்துவதே விஜயதசமி.*

*கடும் கோடைக் காலமும், மழைக் காலமும் எமனின் இரண்டு கோரைப் பற்கள் என ஞான நூல்கள் சொல்கின்றன. இந்த இரண்டு காலங்களிலும் பல விதமான தொற்றுநோய்கள் நம்மைத் தாக்கும் ஆபத்து உண்டு. இது உடலை பாதிக்கும். உடல் கெட்டால், உள்ளமும் பாதிப்பு அடையும். இந்த பாதிப்புகளில் இருந்து மக்களைக் காப்பவள் அம்பிகை. அவளுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டே 'நவராத்திரி' என்ற பெயரில் ஒன்பது இரவுகள் அம்பிகையை வழிபடுகிறார்கள்.*



*'அகிலத்தில் இருக்கும் அத்தனை உயிர்களிலும் அம்பிகையே இருக்கிறாள். அவள் கருணையினால் தான் அனைத்தும் உயிர் வாழ்கின்றன' என்ற தத்துவத்தை விளக்கவே நவராத்திரி கொலு வைக்கிறார்கள்.*

*அம்பிகையின் அருளாட்சியின் கீழேதான் அனைத்து ஜீவராசிகளும் வாழ்கின்றன என்பதுடன், அவை படிப்படியாக முன்னேறி வாழ்வில் உயர்ந்து மேன்மை அடைகின்றன என்பதையும் கொலு அமைப்பு விளக்குகின்றது.*

*மகிஷன் என்ற எருமை ரூபம் கொண்ட அசுரனை வதம் செய்வதற்காக அம்பிகை, ஒன்பது நாட்கள் தவம் இருந்தாள். பல்வேறு சக்தி வாய்ந்த வரங்களைப் பெற்ற அந்த அசுரனை வதம் செய்வதற்காக அம்பிகைக்கு ஒவ்வொரு தெய்வங்களும் ஒவ்வொரு விதமான ஆயுதங்களை அளிக்கிறார்கள்.*

*கடைசியாக அசுரனுடன் அம்பிகை போரிட்டு, அவனை வதம் செய்கிறாள். அவள் வெற்றி கொண்ட பத்தாவது நாளையே விஜயதசமியாகக் கொண்டாடுகிறார்கள்.*

*ஒக்டோபர் 3 ஆம் திகதி நவராத்திரியின் முதல் நாளான இன்று அம்பிகையை சைலபுத்திரியாக வழிபட வேண்டும். அம்பிகைக்கு மஞ்சள் நிறத்தாலான பொருட்களை படைத்து வழிபட வேண்டும். மஞ்சள் நிற ஆடையை பக்தர்கள் அணிந்து கொண்டு எலுமிச்சை சாதம், வெண்பொங்கல், மஞ்சள் நிற கேசரி நைவேத்தியமாக படைத்து வழிபடலாம். அதோடு கடலை, பருப்பு, சுண்டல் படைத்தும் வழிபடலாம்.*

*நவராத்திரியின் முதல் நாளில் கொலு அல்லது கலசம் வைத்து எப்படி வழமி பட்டாலும் மஞ்சள்நிற மலர்களால் அம்பிகைக்கு அர்ச்சனை செய்து வழிபட வேண்டும்.*

*அபிராமி அந்தாதி, லலிதா சகஸ்ரநாமம், துர்காஷ்டகம், தேவி மகாத்மியம், லலிதா திரிசதி, ஷ்யாமள தண்டகம் உள்ளிட்ட ஸ்லோகங்களை படிப்பது மிக விசேஷமானதாகும். அபிராமி அந்தாதியை மொத்தமாக 100 பாடல்களையும் படிக்க முடிந்தவர்கள் படிக்கலாம். இல்லாவிட்டால், தினமும் 10 பாடல்கள் என்றவாறு படிக்கலாம்.*

# தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட தவறினால் மக்கள் வேறொரு முடிவுக்கு வருவர்!

## பாராளுமன்ற தேர்தல் நிலைப்பாடு தொடர்பாக அம்பாறை மாவட்ட தமிழ்ச்சமூக ஆர்வலர்கள் எச்சரிக்கை!

*தமிழ் அரசியல் கட் சிகள் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் இருப்பு மற்றும் நலன் பற்றிய சிந்தனை இன்றி ஒரேகுடையின் கீழ் ஒன்றுபடாமல் ஏதாவது தனிவழித் தீர்மானங்களை எடுப்பார்களாக இருந்தால், நிச்சயமாக கல்முனை தொகுதி தமிழ் மக்கள் மாத்திரமல்லாமல், இந்த மாவட்ட அனைத்துத் தமிழ் மக்களும் தமிழ் அரசியல் பரப்பிலிருந்து அகன்று வேறு ஒரு முடிவை எதிர்வரும் தேர்தல் களத்தில் மேற்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளன என்பதை அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் பகிரங்கமாக வெளிப்படுத்துகின்றோம்.*

*இவ்வாறு அம்பாறை மாவட்ட சமூக ஆர்வலர்கள் உட்பட பொதுமக்கள் பலரும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். கல்முனை, சேனைக்குடியிருப்பு தமிழ்வாணன் மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் கூட்டத்தில் மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நடைபெறவிருக்கின்ற பாராளுமன்றத் தேர்தலை அம்பாறை மாவட்டத்தில் எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பிலான மக்கள் சந்திப்பு இரு தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது. இந்த மக்கள் சந்திப்பு தொடர்பாக பொதுவான ஒரு அழைப்பு அறிவித்தல் ஏற்கனவே விடுக்கப்பட்டிருந்தது. அந்த அழைப்பு அறிவித்தலில் கல்முனை பிரதேசத்திலும் அம்பாறை மாவட்டத்திலும் வாழ்வோரில் தமிழ் மக்கள் நலன் சார்ந்து சிந்திக்கக் கூடியவர்கள் மற்றும் கல்முனை வடக்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பொது அமைப்புகள், ஆலய நிருவாகங்கள், இளைஞர் கழக நிருவாகங்கள், விளையாட்டுக் கழக நிருவாகங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், தமிழ் அரசியல் கட்சிகள் போன்றவற்றின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*






*இந்தச் சந்திப்பில் பொதுமக்கள் மற்றும் பொதுஅமைப்புகள் சார்பில் பலரும் தமது கருத்துகள், கோரிக்கைகளை முன்வைத்தனர். அத்துடன் அரசியல் கட்சி பிரமுகர்களும் தங்கள் கட்சி நிலைப்பாடுகள் பற்றிப் பேசி இருந்தனர்.*

*பொதுமக்கள் மற்றும் ஏற்பாட்டாளர்கள் தரப்பிலே தமிழ் அரசியல் பரப்பில் இருக்கின்ற அனைத்துக் கட்சிகளும் ஒரு குடையின் கீழ் ஒன்றுபட்டு இந்த முறை பாராளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட வேண்டும் என்ற கோரிக்கை ஏகமனதாக முன்வைக்கப்பட்டது.*

*இருந்த போதிலும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் வழங்கிய பதிலானது மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களை திருப்திப்படுத்தும் வகையில் அமைந்திருக்கவில்லை.*

*அதாவது எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஓரணியில் களமிறங்குவதற்கான சாத்தியப்பாடுகள் அற்ற கருத்துக்களைத் தான் அவர்கள் வெளியிட்டிருந்தார்கள்.*

*அதனால் அவர்களுக்கு இன்றுவரை (03.01.2024 காலஅவகாசம் பொதுமக்களால் வழங்கப்பட்டது.*

*அதேவேளை அம்பாறை மாவட்டத்தில் தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டு ஒரு சின்னத்தில் போட்டியிட முன்வராத பட்சத்தில் கல்முனை தொகுதி தமிழ் மக்கள் தமிழ் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகளுக்கு அப்பால் சென்று தேர்தலுக்கான ஆதரவை தனிவழி யில் வழங்குவது என்ற ஒரு முடிவு எடுக்கப்பட்டது.*

*பொத்துவில் மற்றும் சம்மாந்துறை தொகுதிகளுக்கும் சென்று அந்தத் தொகுதிகளின் மக்களோடும் பேசி மாவட்ட ரீதியான முடிவு ஒன்று இறுதியாக எடுக்கப்படும் என்றும் அங்கு கலந்து கொண்ட மக்கள் தெரிவித்தனர்.*

*இவ்வாறான தமது நிலைப்பாட்டை ஊடகங்களுக்கும், அம்பாறை மாவட்ட மக்களுக்கும் அறியத் தருவதாக ஏற்பாட்டுக் குழுவின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.*



(காரைதீவு குறூப் நிருபர்)

# வடக்கின் உதயம்

மன்னார்

## காற்றாலை, கனியமண் அகழ்வை நிறுத்தக் கோரி மக்கள் தபால் அட்டை அனுப்பும் போராட்டம்

(தலைமன்னார் விசேட நிருபர்)

மன்னார் தீவில் மேற்கொள்ளப்பட்டுவரும் கனியமண் அகழ்வு மற்றும் காற்றாலை திட்டங்களைக் கைவிடக் கோரியும் அதற்கான ஒப்பந்தங்களை இரத்துச் செய்யக் கோரியும் புதிய அரசாங்கத்துக்கு தொடர்ச்சியாக தபால் அட்டைகள் அனுப்பும் நடவடிக்கையில் அப்பகுதி மக்கள், பொது அமைப்புகளை சேர்ந்தோர் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த வாரம் மன்னார் தீவை பாதுகாக்கும் முகமாகவும் மக்களின் கோரிக்கைக்கு அமைவாகவும் மன்னார் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் மன்னார் பஸ் நிலையத்தில் வைத்து காற்றாலை மற்றும் கனிய மண் அகழ்வுக்கெதிராக மக்களினால் கையெழுத்திடப்பட்ட முறைப்பாட்டுத் தபாலட்டைகளைச் சேகரித்து ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அனுப்பி வைக்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்திருந்தது.

அதன் ஒரு தொடர்ச்சியாக மன்னார்த் தீவு முழுவதிலிருந்தும் காற்றாலை மற்றும் கனியமண் அகழ்வுக்கு எதிராக மக்களின் முறைப்பாட்டுத் தபாலட்டைகள் சேகரிக்கப்பட்டு நேற்றுமுன்தினம் மாலை 3 மணியளவில் தலைமன்னார் பகுதி பாவிலுபட்டாங் குடியிருப்பு மற்றும் அயல் கிராமங்கள் பகுதியிலுள்ள மக்கள் தபால் அட்டைகளின் மூலம் தங்கள் கோரிக்கைகளை அனுப்பி வைத்துள்ளனர். இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த நிறுவனத்தின் தலைவர் ஜாட்சன் பிகிராடோ தெரிவிக்கையில்,

'மன்னார் தீவின் அபிவிருத்தி என்கிற போர்வையில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி மற்றும் கனிய மண் அகழ்வானது மன்னார் தீவுக்கு பாரிய அழிவை ஏற்படுத்தும். அபிவிருத்தி செய்வதாயின் மன்னார் தீவுக்கு வெளியே போதிய நிலங்கள் உள்ளன. அபிவிருத்திகளை அங்கு மேற்கொள்ள முடியும்.

கடல் மட்டத்திலிருந்து சிறிதளவே உயரமான இச் சிறு தீவுக்குள் இவ்வாறான அபிவிருத்திகள் வேண்டாம் என்பதே மக்களின் கோரிக்கையாக உள்ளது. எனவே தற்போதைய ஜனாதிபதி மற்றும் பிரதமரின் நேரடியான கவனத்தை ஈர்க்கும் முகமாகவே தபால்மூல முறைப்பாட்டை மீண்டும் மேற்கொண்டுள்ளோம் என அவர் தெரிவித்தார்.

## 'சூழல்நேய நிலைபேறான விவசாய யுகம் நோக்கி' திருநெல்வேலி விவசாயக் கண்காட்சி

(கரவெட்டி தினகரன் நிருபர்)




வட மாகாண விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 'சூழல்நேய நிலைபேறான விவசாய யுகம் நோக்கி' எனும் தொனிப்பொருளிலான விவசாயக் கண்காட்சி நேற்றைய தினம் ஆரம்பமாகியுள்ளது.

திருநெல்வேலியில் அமைந்துள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில், நேற்றைய தினம் புதன்கிழமை ஆரம்பமாகி, எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரையிலான, மூன்று தினங்கள் கண்காட்சி நடைபெறவுள்ளன. 30 மேற்பட்ட விடயத் தலைப்புக்களை உள்ளடக்கியதாக இக்கண்காட்சி நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரியில் சிறுவர் தின நிகழ்வுகள்




(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட நெடுந்தீவு றோமன் கத்தோலிக்க மகளிர் கல்லூரியில் சிறுவர் தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் சிறப்பாக நடைபெற்றன.

கல்லூரி அதிபர் தலைமையில் "பிள்ளைகளைப் பாதுகாப்போம் சமமாக மதிப்போம்" எனும் தொனிப்பொருளில் நிகழ்வுகள் நடைபெற்றன.

கல்லூரிக்கு அருகிலுள்ள பிரதான வீதியூடாக சிறுவர் உரிமைகள் தொடர்பில், பொதுமக்களுக்கு தெளிவூட்டும் வகையில் விழிப்புணர்வு ஊர்வலமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது மாணவர்கள் பலூன்களைத் தாங்கியவாறு, சிறுவர் உரிமைகள் தொடர்பான கோஷங்களை எழுப்பியவாறு, விழிப்புணர்வு ஊர்வலத்தில் பங்கெடுத்தனர்.

விழிப்புணர்வு ஊர்வலம் பாடசாலையை வந்தடைந்ததும், சமூகப் பெரியார்கள் மதிப்பளிக்கப்பட்டு, அவர்களிடம் மாணவர்கள் ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நாளை

## ஆவணப்படங்கள் திரையிடல், 'கனலி' மாணவர் சஞ்சிகை வெளியீடு




யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள்துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட ஆவணப்படங்கள் நாளை 4ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் திரையிடப்படவுள்ளன.

தென்னிலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான இனக்கலவரங்களில் பெரிதும் பாதிக்கப்பட்டு வன்னிப் பகுதியில் குடியேறிய மலையக மக்களின் வரலாற்றுப் பின்புலம் மற்றும் வாழ்வியல் பற்றிய பதிவான 'பதியம்', யாழ்ப்பாணத்தில் தெரு நாய்களின் அதிகரிப்புத் தொடர்பான பிரச்சினைகளை வெளிக்கொணரும் 'ஆர்க் ஏஞ்சல்ஸ்', மன்னார் மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் வாழும் மீனவர்களிடையே மருவிச் செல்லும் நாட்டார் பாடல்களை ஆவணப்படுத்தும் 'அம்பா', பருத்தித்துறைத் துறைமுகத்தின் மீள்கட்டுமானம் பற்றிய மக்களின் கருத்துக்களைப் பதிவு செய்யும் 'பருத்திமுகம், தமிழரின் பாரம்பரியமான பறையின் எழுச்சி பற்றிச் சிலாகிக்கும் 'பறையால் பறை', மலையகத்தின் கிறேட்வெஸ்டன் பிரதேசத்தில் வசிக்கும் மக்களின் அத்தியாவசியத் தேவையான கழிவறைப் பிரச்சினையையும் அதனை அமைத்து கொடுப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தும் 'கழிவறை', மன்னார் பிரதேசத்திற்கு வருகை தரும் வலசைப் பறவைகள் பற்றி ஆவணப்படுத்தும் 'பிளமிங்கோ, அநுராதபுரம் அல்லவெவ கிராமத்தில் காடுகளோடு ஒன்றிவாழும் மக்களின் வாழ்வாதாரமான காட்டுத்தேன் சேகரித்தலை வெளிப்படுத்தும் 'கோல்டன் ஜங்கிள், கிளிநொச்சி மாவட்டத்தின் சிவநகர் பாடசாலையில் கபடி போட்டியில் தேசியரீதியிலான சாதனைகளைப் படைக்கும் பெண் மாணவிகளைப் பற்றிப் பேசும் 'கபடி', காலத்தின் வடுக்களை கடந்து வாழ்ந்து வரும் முன்னாள் போராளி ஒருவரின் வாழ்வியலைப் பதிவுசெய்யும் 'சமர்' ஆகிய ஆவணப்படங்கள் திரையிடப்படவுள்ளன.

இந்த ஆவணப்படத் திரையிடலானது ஊடகக் கற்கைகள் மாணவர்களின் எண்மியக் கதைசொல்லல் கற்றலின் பெறுதிகளாக அமைவதும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழாக் கொண்டாட்டத்தின் ஓர் அங்கமாக மேற்கொள்ளப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள்துறையின் ஏற்பாட்டில் கனலி மாணவர் சஞ்சிகையின் ஐந்தாவது இதழ் வெளியீட்டு நிகழ்வு நாளை 4ஆம் திகதி யாழ் பல்கலைக் கழக நூலகக் கேட்போர் கூடத்தில் காலை ஒன்பது மணிக்கு நடைபெறவுள்ளது.

ஊடகக் கற்கைகள்துறைத் தலைவர் பூங்குழலி சிறிசங்கீர்த்தனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா, சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகப் பொன்விழா நிகழ்வுகளின் ஓர் அங்கமாக இடம்பெறவுள்ள இச்சஞ்சிகை வெளியீட்டில் மாணவர்களுக்கான வாழ்த்துரையினை ஊடகக் கற்கைகள்துறை விரிவுரையாளர் அனுதர்ஷி கபிலனும், சஞ்சிகைக்கான கருத்துரைகளை தமிழ்த்துறை விரிவுரையாளர் த.அஜந்தகுமார், சிரேஷ்ட ஊடகவியலாளர் பாரதி இராஜநாயகம் ஆகியோரும் வழங்கவுள்ளனர்.

## வட மாகாண சுற்றுலாத்துறையை மேம்படுத்த நடவடிக்கை

(யாழ்.விசேட நிருபர்)



மாகாண மட்டத்தில் முன்னெடுக்கப்படும் சுற்றுலாத்துறை தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் துறை சார்ந்தோர்களுடன் கலந்துரையாடலில் நேற்றுமுன்தினம் ஈடுபட்டார்.

ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், ஆளுநரின் செயலாளர், ஆளுநரின் உதவிச் செயலாளர், சுற்றுலாத்துறை பணியக தவிசாளர், ஆளுநரின் ஒருங்கிணைப்பு செயலாளர், பணிப்பாளர் சுற்றுலாப் பணியகம், சுற்றுலாத்துறை பணியாக அதிகாரி, நெடுந்தீவு பிரதேசசபை செயலாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் யாழ்ப்பாணம், திணைகள உயர் அதிகாரிகள் கலந்துரையாடலை மேற்கொண்டனர். இதன்போது வடக்கு மாகாண சுற்றுலாத்துறை தொடர்பான தற்போதைய நிலையினை கேட்டு அறிந்து கொண்ட ஆளுநர், நெடுந்தீவில் சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்கு மேற்கொள்ளப்படும் பணிகள் தொடர்பாகவும் கேட்டு அறிந்து கொண்டார்.

அத்துடன் வடக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதன் மூலமாக வடக்கு மாகாண மக்கள் அதிகளவு வருமானத்தை ஈட்டுவதற்கு சாதகமான நடவடிக்கை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது கருத்து தெரிவித்த ஆளுநர், சுற்றுலாத்துறையை பிரதேசங்களின் தன்மையை ஆராய்ந்து அபிவிருத்தி மேற்கொள்ளுமாறும், சுற்றுலாத்துறையின் விரிவாக்கம் மேற்கொள்ளும் பிரதேசங்களுக்கு ஏற்ற வகையில் மரநடுகை தொடர்பாகவும் முக்கியமான விடயங்களை தெரிவித்தார்.

அத்துடன் விரைவாகவும் வேகமாகவும் திட்டங்களை செயற்படுத்த வேண்டும் எனவும் பணிப்புரை விடுத்தார். உலக சுற்றுலா தினத்தை எமது பிரதேசங்களில் கொண்டாடுவதற்கான நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராய்ந்தார்.

## இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை தடுத்து நிறுத்த வேண்டும்

ஜனாதிபதியிடம் அங்கஜன் எம்.பி கோரிக்கை

(யாழ். விசேட நிருபர்)



வடக்கு மீனவர்களின் வாழ்வாதார பாதிப்பு தொடர்பில் கட்சியின் நிலைப்பாட்டை மாற்றாமல் தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் என ஜனாதிபதியிடம் அங்கஜன் இராமநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அது தொடர்பில் தெரிவிக்கையில்,

இலங்கையின் வடக்கு கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதை நிறுத்த வேண்டும் என்பது தொடர்பில் நாம் கடந்த காலங்களில் தொடர்ச்சியாக முயற்சிகளை எடுத்து வந்துள்ளோம்.

கடந்த ஜனாதிபதிகளின் கவனத்துக்கு இவ்விடயத்தை எடுத்துச் சென்றிருந்தோம். அதன் தொடர்ச்சியாக புதிய ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் கவனத்துக்கும் இவ்விடயத்தை எடுத்துச் செல்கிறேன். இவ்விவகாரம் தொடர்பாக ஜே.வி.பி யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தனது பாராளுமன்ற உரையின் போது, இந்திய மீனவர்களின் அத்துமீறலால் உள்ளூர் இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்ந்து கடுமையாக பாதிக்கிறது, குறிப்பாக வட மாகாணத்தில், இத்தகைய ஊடுருவல்களால் கடல் வளங்கள் சூறையாடப்படுகின்றன.

பாகிஸ்தானின் அணுவாயுதங்களுக்கு பயந்து இந்திய மீனவர்கள் பாகிஸ்தான் கடற்பரப்புகளுக்குள் செல்வதில்லை. அங்கு சண்டித்தனம் காட்டுவதில்லை. ஆனால் இலங்கையோடு மட்டும் சண்டித்தனம் காட்டுகின்றனர். ஆகவே இலங்கையின் கடல்சார் இறையாண்மையை பாதுகாப்பதிலும் கடல் வளங்களை ஆக்கிரமிப்பிலிருந்து தடுப்பது தொடர்பிலும் தங்களது கட்சி கொள்கை ரீதியில் உடன்பட்டிருப்பதால், இவ்விடயத்தில் உங்கள் உடனடி கவனத்தை செலுத்துமாறு நான் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

## யாழ். போதனாவில் கண்புரை சத்திரசிகிச்சைக்கு பதியலாம்

(கோப்பாய் குறூப் நிருபர்)



யாழ்.போதனா வைத்தியசாலையில் கண்புரை சத்திரசிகிச்சை வெற்றியளித்துள்ளதாகவும் புதிய நோயாளர்கள் இருப்பின் பதிவுகளை மேற்கொள்ள முடியுமெனவும் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனானந்தா தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் கண்புரை சத்திரசிகிச்சைகள் வெற்றிகரமாக நடைபெற்றுவருகின்றன. எனவே கட்புல சத்திரசிகிச்சைகளை மேற்கொள்வதற்கு காத்திருக்கும் யாழ்ப்பாண மாவட்டத்தில் அல்லது வடமாகாணத்திலுள்ள ஏனைய மாவட்டத்தை சேர்ந்த நோயாளர்கள் வந்து பதிவுகளை மேற்கொள்ளலாம் என அவர் தெரிவித்தார்.

கண்புரை நோயால் பாதிக்கப்பட்ட பார்வைக் குறைபாடுடையோர் குறிப்பாக 50 வயதுக்கு மேற்பட்டவர்கள் இருப்பின் யாழ்.போதனா மருத்துவமனையின் கண்ணியல் சத்திரசிகிச்சைப் பிரிவை நாடுவதன் மூலம் ஒரு மாத காலத்துக்குள் உரிய சிகிச்சையளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## புதுக்குடியிருப்பில் உணவகங்கள் மீது திடீர் சுற்றிவளைப்பு

(ஓமந்தை விஷேட நிருபர்)



புதுக்குடியிருப்பு பிரதேசசபைக்குட்பட்ட புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் அமைந்துள்ள உணவகங்கள் மீது நேற்றையதினம் திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகரில் அமைந்துள்ள உணவகங்கள் மீது புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினர், சுகாதார பரிசோதகர்கள் இணைந்து திடீர் சுற்றிவளைப்பை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கையில் சில உணவகங்களில் காலாவதியான பொருட்கள் கைப்பற்றப்பட்டிருந்தன. அதனையடுத்து கடைகளுக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்படவுள்ளதுடன், இரண்டு உணவகங்கள் மூடி கடைகளில் சிறுசிறு வேலைகளை மேற்கொண்ட பின்னர் கடைகளை திறந்து நடாத்த முடியுமெனவும் உணவக உரிமையாளர்களுக்கு கூறப்பட்டிருந்தது.

உணவக சுற்றிவளைப்பு பரிசோதனை நடவடிக்கையில் புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பி.சத்தியரூபன் தலைமையில் சுகாதார பரிசோதகர்கள் இணைந்து மேற்கொண்டிருந்தனர்.

## சிறுவர் தினத்தை முன்னிட்டு பிறப்புச் சான்றிதழ் வழங்கும் விசேட நடமாடும் சேவை

(யாழ் . விசேட நிருபர்)



சிறுவர் தினத்தை முன்னிட்டு இதுவரை பிறப்புச் சான்றிதழ் இல்லாத சிறுவர்களுக்கான நடமாடும் சேவை யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர்,

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு பிறப்பு பதிவு செய்யும் விசேட நடமாடும் சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பிறப்பு சான்றிதழ் ஆவணம் ஒருவருக்கு அடிப்படையானது.

பிள்ளைகளின் வாழ்வில் அது மிகவும் முக்கியத்துவம் மிக்கது.

மேலும், சில பிறப்புச் சான்றிதழ்களை பதிவு செய்வதிலுள்ள இடர்பாடுகள் மத்தியிலும், இத்தகைய செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்ற மாவட்டப் பிரதி பதிவாளர், பிரதேச செயலகங்களை சேர்ந்த பதிவாளர்கள், உதவி பதிவாளர்கள் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். காலம் கடந்த பிறப்பு பதிவு 41 சிறுவர்களுக்கும், உத்தேச வயதுப்பத்திரம் 05 பேருக்கும், பிறப்புச் சான்றிதழ் திருத்தம் 11 பேருக்கும், இறப்பு பதிவு 03 பேருக்குமாக 60 பயனாளிகள் பயனடையவுள்ளனர்.

இந்நிகழ்வில், பிரதிப் பதிவாளர் நாயகம் கே.நடராஜா, மாவட்ட மற்றும் பிரதேச சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள் மற்றும் சிறுவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





வவுனியா விபுலானந்தா கல்லூரியில் நேற்றுமுன்தினம் சிறுவர் தின கொண்டாட்டங்கள் வெகுசிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழருவி த. சிவகுமாரன் கலந்துகொண்டார்.
(படம்: வவுனியா நிருபர்)

# அமரர் பீட்டர் கெனமனின் 107வது ஜனன தினம் இன்று

(மத்திய கொழும்பு குறூப் நிருபர்)



இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் நீண்டகாலமாக பொதுச் செயலாளர் பதவியை வகித்து, நாட்டுக்கும் மக்களுக்கும் அளப்பரிய சேவை செய்த அமரர் பீட்டர் கெனமனின் 107 ஆவது ஜனன தினம் இன்றைய தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

அன்னாருக்கான அஞ்சலி நிகழ்வு இன்று கொழும்பு, மருதானை சந்தி சுற்றுவட்டத்தில் உள்ள அன்னாரின் உருவச் சிலைக்கு அருகாமையில் நடைபெறவுள்ளது.

உருவச் சிலைக்கு கொழும்பு மாநகர சபை ஆணையாளர் பத்ராணி ஜயவர்த்தன மற்றும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ஜீ. வீரசிங்க ஆகியோர் மலரஞ்சலி செலுத்தவுள்ளனர்.

அமரர் பீட்டர் கெனமன் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளராகவும் வடகொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியை பிரதிநிதித்துவப்படுத்தி நகர சபை உறுப்பினராகவும் பதவி வகித்துள்ளார். மத்திய கொழும்பு தேர்தல் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தி 1947 முதல் 1977 ஆண்டு வரை சிறந்த சேவைகளை செய்துள்ளார்.

அவர் 1970 ஆம் ஆண்டு முதல் 1975 ஆம் ஆண்டு வரை அப்போதைய அரசாங்கத்தில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார்.

# சீரடி சாயிபாபாவின் மகா சமாதி தினத்தை முன்னிட்டு ஆன்மீக நடைபயணம்



சீரடி சாயிபாபாவின் மகா சமாதி தினத்தை முன்னிட்டு நடைபெறவிருக்கும் வருடாந்திர ஆன்மீக நடைபயணம் எதிர்வரும் 2024.10.13ஆம் திகதி காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இந்த பாத யாத்திரையானது கொழும்பு, பம்பலப்பிட்டியிலிருந்து ஆரம்பித்து கொழும்பு, கொட்டாஞ்சேனை வரை நடைபெறவுள்ளது. கொழும்பு, பம்பலப்பிட்டியிலுள்ள வஜிரா பிள்ளையார் (பழைய கதிரேசன் மண்டபத்தில்) கோவிலில் இருந்து ஆரம்பமாகும் பாத யாத்திரை காலி வீதி ஊடாக லோட்டஸ் வீதி, யோர்க் வீதி, பிரதான வீதி, செட்டியார் தெரு, ஜிந்துப்பிட்டி வீதி, புதுச் செட்டித்தெரு, ஜெம்பட்டா வீதி, ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை ஊடாக கொட்டாஞ்சேனையிலுள்ள சாயிநாதனின் சரணாலயத்தை வந்தடையும்.

பாதயாத்திரைக்கு செல்ல விரும்புவோர் முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. 0761630462 என்ற தொலைபேசி இலக்கத்தில் திருமதி வள்ளியுடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்று காலை 6 மணிக்கு கொழும்பு கொட்டாஞ்சேனையிலுள்ள சாயிநாதனின் சரணாலயத்தில் இருந்து பாத யாத்திரை ஆரம்பமாகும் பம்பலப்பிட்டி வஜிரா பிள்ளையார் ஆலயம் வரை பிரயாண வசதி செய்து கொடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய பலன்கள்

(03.10.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு கிடைத்து தேவையான சலுகைகளை பெறுவர்.

**ரிஷபம் :**
பொருளாதாரம் உச்ச நிலையை அடையும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் இணக்கமாக நடந்து கொள்வர் .

**மிதுனம்:**
வரன்கள் வாசல் தேடி வரும். திருமண வயதை அடைந்த பிள்ளைகளுக்கு இதுனாள் வரை தள்ளிப்போன திருமணம் இப்போது கைகூடும்.

**கடகம்:**
தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும். தொல்லைகள் அனைத்தும் விலகிச் செல்லும். தடைப்பட்ட காரியங்கள் ஒவ்வொன்றும் தானாக நடைபெறும்.

**சிம்மம்:**
ஆடை ஆபரண சேர்க்கை உண்டு. அதிகாரத்தில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். தொழிலில் படிப்படியாக வளர்ச்சி கண்டு பரவசம் அடைவீர்கள்.

**கன்னி:**
பொருளாதார நிலை உயரும். புதிய முயற்சிகள் அனைத்திலும் வெற்றி கிடைக்கும். பல முறை முயற்சித்து முடியாத காரியங்கள் இப்போது முடிவுக்கு வரும்.

**துலாம்:**
சகோதர ஒற்றுமை பலப்படும். தனவரவு தாராளமாக வந்து சேரும். மனதில் நினைத்ததை மறுகணமே செய்து முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:**
பொருளாதாரத்தில் உச்சநிலையை அடைவீர்கள். தொழிலை விரிவு செய்யும் முயற்சி கைகூடும். செல்வாக்கு மிக்க ஒருவரால் செயல்படுவது நல்லது.

**தனுசு:**
தொழில் முன்னேற்றம் உத்தியோகம் முன்னேற்றம் ஏற்படும். இடம் பூமி விற்பனையால் எதிர்பார்த்த லாபம் வரலாம்.

**மகரம்:**
இக்காலம் ஒரு இனிமையான காலமாகும். எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும். நண்பர்களின் ஒத்துழைப்பு நல்ல விதமாக கிடைக்கும்.

**கும்பம்:**
எண்ணங்கள் அனைத்தும் எளிதில் நிறைவேறும். ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டு. வெளிநாட்டில் உள்ள பிரபல நிறுவனங்களில் இருந்து பணிபுரிய அழைப்புகள் வரலாம்.

**மீனம்:**
பொருள் வரவு திருப்திகரமாக இருந்தாலும் விரையங்கள் இருமடங்காகும். வீடு மாற்றும் இடமாற்றம் உத்தியோகம் மாற்றம் நாடு மாற்றம் போன்றவை நிகழும்.







கடந்த வாரம் நடைபெற்ற மாகாண மட்ட தமிழ்மொழித் தினப் போட்டியில் ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலய மாணவிகள் பங்குபற்றி தனி மற்றும் குழு நடனங்களில் முதலாம் இடங்களைப் பெற்று தேசிய மட்ட போட்டிகளுக்கு தெரிவாகி உள்ளனர்.

இவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கு பாடசாலை சமூகம் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளது.

(படங்கள் : உடப்பு குறூப் நிருபர்)

## பொதுத் தேர்தலில் ஜனாதிபதியின்...

எம்.எம்.ஸுஹைர் தெரிவித்தார். ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க அடைந்துள்ள வெற்றி குறித்து தினகரன் பத்திரிகைக்கு கருத்து தெரிவிக்கையிலே ஸுஹைர் இவ்வாறு குறிப்பிட்டார்.இதுபற்றித் தெரிவித்த அவர்: வெற்றியின் முதல் கட்டம் நடந்தேறி விட்டது. இப்போது இரண்டாவது கட்டத்தினுள் நுழைந்திருக்கிறோம்.

பாராளுமன்றத் தேர்தலுக்கு இன்னும் 45 நாட்கள் மட்டுமே உள்ளன.

ஜனாதிபதி அநுரகுமாரவுக்கு கிடைத்த வெற்றி மக்களின் வெற்றியாகும்.நாட்டில் அதிகூடிய வாக்குகள் உள்ள கம்பஹா மாவட்டத்தில் 460000 வாக்குகள் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்துள்ளது.

ஜனாதிபதிக்கு கிடைத்த 12 லட்சம் பெரும்பான்மை வாக்குகளில், மேல் மாகாணத்தில் மாத்திரம் 09 இலட்சம் கிடைத்துள்ளது.

முன்னாள் ஜாதிபதி ரணில்விக்கரமசிங்க ஒரு தொகுதியையும் வெல்லவில்லை.

இதனால், ஜனாதிபதித் தேர்தலிலிருந்த மும்முனைப் போட்டி, பாராளுமன்றத் தேர்தலில் இருமுனைப் போட்டியாக மாறும்.

மொத்தமாகவுள்ள 160 தொகுதிகளில், ஜனாதிபதி அநுர குமார திசாயக்க 105 தொகுதிகளில் வெற்றியீட்டியதுடன் சஜித் பிரேமதாஸ 49 தொகுதிகளி லேயே வென்றுள்ளார்.

இது முப்பது வீதமாகவே உள்ளது. இதனால், பாராளுமன்றத் தேர்தலில் ஜாதிபதியின் தேசிய மக்கள் சக்தி 113 ஆசனங்களை இலகுவாகப் பெறும் என்று அவர் தெரிவித்தார்.

## மதுபான உற்பத்தி நிறுவனங்களின்...

ராஜகிரியிலுள்ள கலால் திணைக்களத்தில் நடைபெற்றது.அந்த நிகழ்வில் நாடளாவிய ரீதியிலுள்ள மதுபான உற்பத்தி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

திணைக்களத்தின் நடவடிக்கைகளில் எந்த விதத்திலும் அழுத்தம் அல்லது தலையிடலை தற்போதைய அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்பதை உறுதிப்படுத்திய அவர், அந்த வகையில் முறையாகவும் வினைத்திறனுடனும் நடவடிக்கைகளை மேற்கொள்ள தாம், உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளுக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மதுபான உற்பத்தி நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனான இந்த சந்திப்பின் போது மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை தெளிவுபடுத்தியுள்ள கலால் வரி ஆணையாளர் நாயகம், கள்ளு மற்றும் சக்கே வகை மதுபான உற்பத்திக்காக புதிய ஸ்டிக்கர்களை அறிமுகப்படுத்தும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் அதற்கு மேலதிகமாக ஏனைய உற்பத்திகளுக்கான அந்த வேலைத் திட்டம் அடுத்த வருடம் முதல் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மலையக, ஈழத்தமிழர்களுக்கு...

தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகளை கண்டறிந்து தண்டனை வழங்குவது, ஊழல் ஒழிப்பு, வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள நாட்டின் சொத்துகளை மீட்பது, மத்திய வங்கி பிணை முறி கொள்ளையரை தண்டிப்பது, சிவராம், நடேசன், எக்னலியகொட, லசந்த உட்பட ஊடகவியலாளர் கொலையாளிகளை கண்டறிந்து தண்டனை வழங்குவது குறித்து ஜனாதிபதி உறுதியளித்த, அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஆதரவு வழங்க உள்ளதாகவும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்கு, குறிப்பாக மலையக தமிழருக்கும், ஈழத் தமிழருக்கும் இனிமேல் இந்நாட்டில் அனுதாபம் வேண்டாம். எமக்கு நியாயம்தான் வேண்டும்.

ஐக்கிய மக்கள் கூட்டணி மத்திய நிலையத்தில் நேற்று (02) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறுதெரிவித்தார். ரஞ்சித் மத்தும பண்டார, டலஸ் அலஹபெரும, சம்பிக்க ரணவக்க, தயாசிறி ஜயசேக்கர, கபீர் ஹசிம், நிசாம் காரியப்பர் ஆகியோர் ஊடக இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

## பிரிந்து செயற்படின் ஆசனங்களை...

உறுப்பினரும் தருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இந்திய தூதுவருடன் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் கேட்கப்பட்டபோதே, தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் தெரிவித்தார்.இதுபற்றித் தெரிவித்த அவர்:

வடக்கில் அதிகளமான அபிவிருத்தியை இந்தியா செய்துள்ளது. இந்த அபிவிருத்திகளின் பலன்களை தமிழ் மக்கள் அடைய வேண்டும் என்ற ரீதியில் இந்திய தூதுவரின் கருத்துக்கள் இருந்தன.

தமிழ் தரப்பு ஓரணியிலே ஒன்றாக வேண்டும். பிரிந்து நிற்கும் செயற்பாட்டை தொடர்ந்து வைத்திருப்பது நல்லதல்ல.

நல்லதொரு ஒற்றுமையான முடிவை எட்டி இந்த தேர்தலில் கூடுதலான ஆசனங்களை பெற வேண்டும் எனவும் தூதுவர் தெரிவித்திருந்தார். அந்த வகையில் தமிழர் தரப்பில் உள்ளவர்கள் மக்களுடைய பிரச்சினைகளை தீர்க்கக் கூடிய வகையில் ஆசனங்களை பெறுவதன் ஊடாகத்தான் புதிய அரசாங்கத்தோடு பேசி ஒரு இணக்கப்பாட்டுக்கு வர முடியும்.

அந்த வகையிலே ஒற்றுமையோடு இருந்தால்தான் எல்லா விடயங்களையும் சாதிக்க முடியும் எனவும் அவர் எடுத்துக் கூறினார்.

இந்நிலையில் தமிழரசு கட்சியும் ஒன்றாக சேர வேண்டும் என்கின்ற கோரிக்கையை முன் வைத்திருக்கிறது. இந்நிலையில், ஒரு ஆலோசனையை முன் வைப்பதற்கு விரும்புகிறேன். இப்போதுள்ள கள நிலவரங்கள் எங்களுடைய பிரதிநிதித்துவம் குறைகின்ற செயற்பாடாகவே காணப்படுகிறது.

## 2025 ஏப்ரல் மாதம் வரை...

அவர் தெரிவித்துள்ளார். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் திட்டமிட்டு எரிபொருளுக்கான அனைத்து முன்பதிவுகளையும் வழங்கியுள்ளது.

இதனால் எதிர்வரும் ஏப்ரல் மாதம் வரை எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாதென்றும் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஜே.கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், போதுமான எரிபொருள் இருப்புக்களை பராமரிப்பதற்கான எதிர்காலத் திட்டங்கள் வாரந்தோறும் திட்டமிடப்படும்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சுத்திகரிப்பு துறையை மிகவும் திறமையான எரிபொருள் விநியோகத்திற்காக மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

தற்போதைய விலை சூத்திரத்தின்படி சமீபத்திய எரிபொருள் விலை திருத்தம் மேற்கொள்ளப்பட்டது, மேலும் பொதுமக்களுக்கு அதிக சலுகைகளை வழங்க CPC சூத்திரத்தை மேம்படுத்த திட்டமிட்டுள்ளது," என்று அவர் கூறினார் என்றார்.

## விமர்சனங்களை விடுத்து...

அத்துடன் பொதுத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று அதனை மக்கள் வெற்றியாக மாற்றி, நாட்டுக்கு முன்னுரிமை வழங்கி, தேசிய நலனுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். குறுகிய அரசியல் முரண்பாடுகளை தவிர்த்து தீர்வு காண வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தெஹிவளை தேர்தல் தொகுதி கட்சி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பொன்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் தெஹிவளையில் இடம்பெற்றது.

இதில் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரேதச மட்ட கட்சி செயற்பாட்டாளர்கள் பலர் கலந்து கொண்டனர். இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## டிஜிட்டல் மயமாக்கல்;...

சந்தோஷ் ஜாவுக்குமிடையிலான சந்திப்பு நேற்று (02) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திசாநாயக்கவின் தேர்தல் வெற்றிக்கு மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்த இந்திய உயர்ஸ்தானிகர், இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு சகல வழிகளிலும் ஆதரவளிக்க தயாராக இருப்பதாக தெரிவித்தார். பிராந்தியத்தில் அமைதியான மற்றும் நிலையான நாடாக இலங்கை வெளிப்படுவதை காண்பதே இந்தியாவின் எதிர்பார்ப்பெனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியா, இலங்கைக்கிடையிலான நீண்டகால நட்புறவையும் நெருக்கத்தையும் நினைவுகூர்ந்த இந்திய உயர்ஸ்தானிகர், அண்டைய சகோதர நாடுகள் என்ற வகையில் இரு நாடுகளுக்குமிடையில் தொடர்ச்சியான மற்றும் நிலையான நட்பைப் பேணி முன்னேற்றுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

## சென்னை துணை...

மீனவர்களும் காலம் காலமாக மீன் பிடித்து வருகின்றனர்.

இதனால், அவர்களின் பாரம்பரிய மீன் பிடிக்கும் உரிமையை மதிக்க வேண்டும் என்று தமிழ்நாட்டில் உள்ள மீனவர் அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன.

முன்னாள் மத்திய அமைச்சரும், பாமக இணைப் பொதுச் செயலாளருமான ஏ.கே.மூர்த்தி பாமக பொருளாளர் திலகபாமா ஆகியோர் தலைமையில் நடைபெறும் இந்தப் போராட்டத்தில், பாட்டாளி மக்கள் கட்சியின் அனைத்து இணை மற்றும் சார்பு அமைப்புகளின் நிர்வாகிகளும் கலந்து கொள்வார்கள்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள மீனவர் அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் இலங்கைத் துணைத் தூதரகத்தை முற்றுகையிடும் போராட்டத்தில் பெருமளவில் பங்கேற்பார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

## நவராத்திரி விரதம்...

துர்கா, பத்ரக்காளி, ஜகதாம்பாள், அன்னபூரணி, சர்வமங்களா, பைரவி, ஜாந்தி, லலிதா, பவானி மற்றும் மூகாம்பிகா என அலங்கரித்து வழிபடுகிறோம்.

ஒன்பது நாள் நவராத்திரியில் முதல் மூன்று நாட்களும் அருள்மிகு துர்க்கை அம்மனுக்குரியது.

அடுத்த மூன்று நாட்களும் அருள்மிகு இலட்சுமி தேவிக்குரியது. இறுதி மூன்று நாட்களும் சரஸ்வதி தேவிக்குரியது.

## யானை, சிலிண்டர்...

குறிப்பிட்டுள்ளார். பொதுத் தேர்தல் தொடர்பில் கலந்துரையாடுவதற்கான சந்திப்பு, ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு மற்றும் பல விசேட கூட்டங்களில் இடம்பெற்றது.

முன்னாள் ஜனாதிபதியான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்ற , கூட்டத்திலும் இவ்விடயங்கள் கலந்துரையாடப்பட்டன .

இதில், ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்டத் தலைவர்கள், தொகுதி அமைப்பாளர்கள், முகாமையாளர்கள் மற்றும் கட்சித் தொண்டர்கள் கலந்துகொண்டனர்.

## டெங்கு ஒழிப்புக்கான...(03ஆம் பக்க தொடர்ச்சி)

ஒத்துழைப்புக்களை பலப்படுத்த கியூபா எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோல், டெங்கு ஒழிப்புக்கு இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுவரும் முயற்சிகளுக்கு கியூபா அரசாங்கத்தின் தொடர்ச்சியான ஒத்துழைப்பு வழங்கப்படுமென இதன் போது உறுதியளிக்கப்பட்டது.

டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளில் கியூபா பெற்றுள்ள வெற்றிகள் தொடர்பில் சுட்டிக்காட்டிய கியூபா தூதுவர், இலங்கைக்கு டெங்கு ஒழிப்புக்கு அவசியமாக பொதுச் சுகாதார வேலைத்திட்டங்கள் தொடர்பிலான நிபுணத்துவ அறிவைப் பகிர்ந்து கொள்வதில் ஆர்வமாக இருப்பதாகவும் அறிவித்தார்.

## ஈ. பி. டி. பி. தனித்து...(03ஆம் பக்க தொடர்ச்சி)

அந்த வகையில் பொதுத் தேர்தலில் தாக்கல் செய்வதற்கான வேட்பு மனு தயாரிக்கப்பட்டு வருகிறது. இம்முறை எந்த கூட்டணியுடனும் இணையாமல் கட்சி தனித்தே போட்டியிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## பாட்டலிக்கு எதிரான ...(03ஆம் பக்க தொடர்ச்சி)

அந்த கோரிக்கையை ஏற்றுக் கொண்ட உயர்நீதிமன்ற நீதிபதி வழக்கு விசாரணையை 2025 பெப்ரவரி 28 இல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரிவிக்கப்படுவதாவது; 2016 பெப்ரவரி 28 ஆம் திகதி இராஜகிரி பிரதேசத்தில் கவனக்குறைவாக வாகனம் செலுத்தி நபரொருவரை விபத்துக்குள்ளாக்கினார்.

இச்சம்பவம் தொடர்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவகவிற்கு எதிராக சட்டமா அதிபர் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

## பொய்யான தகவல்களை...(03ஆம் பக்க தொடர்ச்சி)

அவ்வாறான வாகனங்களில் இதுவரை 20 வாகனங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. இதன் மூலம் 500 கோடி ரூபா வரி மோசடி இடம் பெற்றுள்ளதாகவும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டுள்ள ஆறு கோடி ரூபா பெறுமதியான ஜீப் ரக வாகனம் ஒன்றுடன் அதன் பதிவு உரிமையாளர் எனக் கூறப்படும் நபரை கைது செய்துள்ளதாகவும் அந்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த வாகனத்தை இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவிடம் ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.இருந்போதும் அந்த நபர் அந்த உத்தரவையும் அலட்சியப்படுத்தியுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சமூக ஆர்வலர் திருச்செல்வம்...(03ஆம் பக்க தொடர்ச்சி)

அமரர் ஆறுமுகம் தொண்டமான் வீடமைப்பு, நகர அபிவிருத்தி மற்றும் பொது வசதிகள் அமைச்சராக இருந்தபோது அந்த அமைச்சின் இணைப்புச் செயலாளராகவும் பணியாற்றி, அம்பிகா கல்வி நிறுவனங்களிலும் இயக்குநராகவும் பணியாற்றினார்.

திரு என்று நண்பர்களால் அழைக்கப்படும் திருச்செல்வம் எப்போதும் எல்லோரோடும் எளிமையாக பழகக் கூடியவர்.

சோலைமலைத் தேவர் தலைவராக இருந்தபோது இலங்கை முக்குலத்தோர் கலாச்சார மண்டபத்தின் கட்டுமான பணிகளிலும் ஏனைய சமய கல்வி கலாச்சார செயற்பாடுகளிலும் தன்னை மிகவும் ஆர்வத்துடன் ஈடுபடுத்திக் கொண்டார்.

புகழ்பெற்ற அம்பிகாவின் பாட்டுக்கு பாட்டு என்ற உள்ளூர் கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகள், மற்றும் 1990 களில் இசைஞானி இளையராஜா உள்ளிட்ட இந்திய கலைஞர்களை அழைத்து இலங்கையில் பல்வே நிகழ்வுகளை நடாத்துவதிலும் வெற்றி கண்டவர்.

## அதிக பஸ் கட்டணம் அறவீடு...

முறையிட 1955 அல்லது 071 25 95 555 என்ற தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக கட்டணம் அறவிடும் பஸ்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தேசிய போக்குவரத்து ஆணைக் குழு மேலும் தெரிவித்துள்ளது.




# மகாவலி கங்கையில் கழிவுநீர் சேர்வதாக தகவல்

## ஆய்வில் தெரியவந்துள்ளது

அக்குறணை குறூப் நிருபர்

கண்டி மாவட்டத்தில் பல இலட்சம் மக்கள் அன்றாட பாவனைக்கு பயன்படுத்தி வரும் மகாவலி கங்கை நீரில் அதிகளவில் கழிவுநீர் சேர்வதாக ஆய்வு நடவடிக்கையில் தெரியவந்துள்ளது.

நீர் சேகரிக்கப்படும் பொல்கொல்ல நீர்த்தேக்க கதவுகள் திருத்தப் பணிக்காக அண்மையில் முற்றாக திறந்து விடப்பட்டது. இந்நிலையில் மகாவலி அதிகார சபை அதிகாரிகள், பொலிஸார், சுகாதாரப் பரிசோதகர்கள், சுற்றாடல் அதிகாரிகள், உள்ளூராட்சி அமைப்பு அதிகாரிகள் உள்ளிட்ட பல தரப்பினர் இணைந்து ஆய்வு பணியை மேற்கொண்ட போதே இந்த விவகாரம் தெரியவந்துள்ளது.



மகாவலி கங்கையை அண்மித்த பகுதியிலுள்ள தொழிற்சாலையின் கழிவுநீர் மகாவலி கங்கையில் சேர்கின்றமை தெரியவந்துள்ளதுடன், அதில் சுமார் 50 சதவீத மலசலக்கழிவு உள்ளடங்குகின்றமை தெரியவந்துள்ளதாகவும், ஆய்வு நடவடிக்கையில் ஈடுபட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். ஆகையால் இன்னும் இரண்டு வாரகாலத்துக்குள் கழிவுநீரை உரிய முறையில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அதாவது தனிப்பட்ட கழிவுநீர் தொட்டி அல்லது குழிகளை அமைத்து அவற்றினூடாக கழிவுநீரை அகற்றுவதற்கும் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கண்டி, ஹரிஸ்பத்துவ, பூஜாப்பிட்டிய பாத்ததும்பறை, குண்டசாலை, அக்குறணை ஆகிய பிரதேச சபை பிரிவுகள் உட்பட அநேகமான இடங்களுக்கு மகாவலி கங்கை நீர் விநியோகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இரத்தினக்கற்கள், தங்க சிலைகளுடன் இருவர் கைது

இரத்தினபுரி சுழற்சி நிருபர்



பல வர்ணங்கள் மற்றும் பல வடிவங்களிலான 11 இரத்தினக் கற்கள், தங்கத்திலான சிறிய புத்தர் சிலைகள் மற்றும் யானையின் தோற்றத்திலான உருவங்களை வைத்திருந்த சந்தேக நபர்கள் இருவரை நேற்று பொலிஸார் கைது செய்துள்ளதுடன், அச்சந்தேக நபர்களிடமிருந்து அப்புராதன பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர்.

கேகாலையின் ஹெட்டிமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு சந்தேக நபர்களையே கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக விசேட அதிரடிப்படையினருக்கு தகவல் கிடைத்ததாகவும் புதையல் தோண்டி பெறப்பட்ட இப்புராதனப் பொருட்களை விற்பனை செய்ய இச்சந்தேக நபர்கள் முயற்சிப்பதாகவும் அவர்களுக்கு தகவல் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து இச்சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக தெரிவித்த பொலிஸார், இவர்களிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சிறைச்சாலையிலிருந்து 4 கைதிகள் தப்பியோட்டம்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையிலிருந்து சிறைக்கைதிகள் நால்வர் நேற்று முன்தினம் தப்பிச் சென்றுள்ளதாக, தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சிறைச்சாலையின் வெளி அரங்கில் வேலை செய்து கொண்டிருந்த கைதிகளே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளனர்.

திருட்டுச் சம்பவம், போதைப் பொருள்பாவனைபோன்ற குற்றச்செயல்களுடன் இக்கைதிகள் தொடர்புடையவர்களெனவும் அம்பாறை, அம்பலாந்தோட்டை, கதிர்காமம் ஆகிய இடங்களை இவர்கள் சேர்ந்தவர்களெனவும் தெரியவந்துள்ளது.

இவர்களை பொலிஸார் தேடி வருவதுடன், இவர்களை கைது செய்வதற்காக பொதுமக்களின் ஒத்துழைப்பையும் பொலிஸார் நாடியுள்ளனர்.

# க.பொ.த. சா/த பரீட்சையில் 8 ஏ, ஒரு பி பெற்று சித்தி



பதுளை அல் அதான் மகா வித்தியாலய மாணவரான உமர் ஏ. அமீன் நடைபெற்று முடிவடைந்த க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் 8 ஏ மற்றும் ஒரு பி பெற்று சித்தி பெற்றுள்ளார்.

ஹாலிஎல, போகஹமடித்த தொழில் நீதிமன்ற மொழிபெயர்ப்பாளரான கவிஞரும் கதைஞருமான ஹுமைரா அல் அமீன் தம்பதியின் சிரேஷ்ட புதல்வராவார் உமர் ஏ.அமீன்.

(அப்துல் வாஹிட் ஏ.குத்தூஸ்)

# தனமல்வில கடையில் திருட்டு சம்பவம்; இருவர் கைது

ஊவா வெல்லஸ்ஸ விசேட நிருபர்

தனமல்வில பிரதேசத்திலுள்ள கடையொன்றில் பணம் உள்ளிட்டவற்றை திருடிய சந்தேக நபர்கள் இருவரை பொலிஸார் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கைது செய்துள்ளனர்.

இந்தக் கடையில் கடந்த செப்டெம்பர் 25ஆம் திகதி இரவு திருட்டுச் சம்பவம் இடம்பெற்றதுடன், 2 இலட்சத்து 68 ஆயிரத்து 80 ரூபா பணம், குரக்கன் உள்ளிட்ட தானிய வகைகளை இச்சந்தேக நபர்கள் திருடியமை விசாரணையில் தெரியவந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய பொலிஸார், இச்சந்தேக நபர்களுடன் திருடப்பட்ட குரக்கன் உள்ளிட்ட தானியங்களை ஏற்றிக்கொண்டு சென்ற முச்சக்கரவண்டி, 56 கிலோகிராம் குரக்கன் தானியத்தையும் கைப்பற்றியுள்ளனர்.

திருடப்பட்ட இப்பொருட்களை இரத்தினபுரியில் அமைந்துள்ள கடையொன்றுக்கு விற்பனை செய்ய முயன்ற போது அவற்றை தாம் கைப்பற்றியதாகவும் ஏனைய தானிய வகைகளை இச்சந்தேக நபர்கள் இரத்தினபுரி, மலங்கம பிரதேசத்திலுள்ள கடையொன்றில் விற்பனை செய்துள்ளதாகவும், பொலிஸார் குறிப்பிட்டனர்.

இரத்தினபுரியைச் சேர்ந்த 42, 52 வயதுடைய சந்தேக நபர்களையே கைது செய்துள்ளதாகவும், பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# மடவளை சிரேஷ்ட பிரஜைகள் சங்கத்தின் கௌரவிப்பு நிகழ்வு

அக்குறணை குறூப் நிருபர்

சர்வதேச முதியோர் தினத்தையொட்டி இம்மாதம் 5ஆம் திகதி (சனிக்கிழமை) மதீனா தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் மடவளை சிரேஷ்ட பிரஜைகள் சங்கத்தின் ஏற்பாட்டில் 12ஆவது வருட முதியோர் தின நிகழ்வுடன் கௌரவிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது.

காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ள இந்நிகழ்வில் 75 வயதுக்கு மேற்பட்ட பொதுச் சேவைகளில் ஈடுபட்டு வரும் சிரேஷ்ட பிரஜைகள் பலர் கௌரவிக்கப்படவுள்ளனர். ஓய்வுபெற்ற பிரதி கல்விப் பணிப்பாளர் ஏ.எல். ஏ.ஜெலீல், ஓய்வுபெற்ற முஸ்லிம் விவாக பதிவாளர் ஏ.எஸ்.எம். கியாஸ் உட்பட பலர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதன்போது 25 சிரேஷ்ட பிரஜைகளுக்கு உலர் உணவுப் பொருட்களும் வழங்கப்படவுள்ளன.

மேலும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள், க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் 9 ஏ சித்தி பெற்ற மாணவர்கள், க.பொ.த. உயர்தர பரீட்சையில் 3 ஏ சித்தி பெற்ற மாணவர்களுக்கு மடவளை சிரேஷ்ட பிரஜைகள் அமைப்பால் புலமைப்பரிசில்களும் வழங்கி வைக்கப்படவுள்ளன. அத்துடன் இன்னும் பல அம்சங்களில் விசேட பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இலங்கை நீர்வடிகால் மற்றும் நீர்விநியோக சபையின் மேலதிக பொது முகாமையாளரும் பிரதம பொறியியலாளருமான எம்.டி.எம். ராசில் நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளார். நாவலப்பிட்டிய மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரியும் மருத்துவருமான நஜ்மி அனீஸ் விசேட அதிதியாகவும் மடவளை ஜாமியுல் கைராத் ஜும்மா பள்ளிவாசல் நிர்வாக சபை தலைவர் டபிள்யூ. எம்.நாஜிம், கம்பளை உடபலாத்த காதி நீதவான் அஷ்ஷேக் எம்.ஏ.அனஸ் மொகமட் (நளீமி) ஆகியோர் கௌரவ அதிதியாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் கம்பளை உடபலாத்த காதி நீதவானின் விசேட சொற்பொழிவும் இடம்பெறவுள்ளதாக, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# லண்டன் பிரேம் அறக்கட்டளையால் மாணவர்களுக்கு பேனாக்கள் அன்பளிப்பு







நுவரெலியா கல்வி பிராந்தியத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு சர்வதேச சிறுவர் தினத்தையிட்டு தரமான பேனாக்கள் வழங்கி வைக்கப்பட்டன.

சரஸ்வதி தமிழ் வித்தியாலயத்தின் 504 மாணவர்களுக்கும் சுமண சிங்கள மகா வித்தியாலயத்தின் 100 மாணவர்களுக்கும் சென். கூம்ஸ் தமிழ் வித்தியாலயத்தின் 392 மாணவர்களுக்கும் வட்டகொட தமிழ் வித்தியாலயத்தின் 282 மாணவர்களுக்கும் தலவாக்கலை பாரதி வித்தியாலயத்தின் 481 மாணவர்களுக்கும் தரமான பேனாக்கள் அதிபர், ஆசிரியர்களால் வழங்கி வைக்கப்பட்டன.

லண்டன் பிரேம் அறக்கட்டளையினர், கொழும்பு முன்னாள் மாநகர சபை உறுப்பினர் காயத்திரி விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிய தரமான பேனாக்கள் 9ஆம் ஆண்டு முதல் 13ஆம் ஆண்டுவரையான வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

லண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலய ஸ்தாபக அறங்காவலர்களில் ஒருவரான சிவகுரு பிரேமச்சந்திரா தான் வாழ்ந்த காலத்தில் இந்த அறக்கட்டளையை அமைக்க எண்ணியிருந்தார். அவர் இறைவன் அடி சேர்ந்ததை தொடர்ந்து அவரது பாரியார் வசந்தா பிரேமச்சந் திரா மற்றும் உறவினர்களால் பிரேம் அறக்கட்டளை ஸ்தாபிக்கப்பட்டு பல்வேறு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனைத் தொடர்ந்து மலையக பகுதியில் கல்வி மேம்பாட்டுக்கு உதவவும் அவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

(எச்.எச். விக்கிரமசிங்க)

# ஆட்டோ குடைசாய்ந்து விபத்து; சாரதி காயம்

ஊவா வெல்லஸ்ஸ விசேட நிருபர்



பிபிலை - மொனராகலை வீதியில், இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான டிப்போவுக்கு அருகில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முச்சக்கரவண்டியொன்று குடைசாய்ந்ததில் அதன் சாரதி காயமடைந்துள்ளதாக, பிபிலை பொலிஸார் தெரிவித்தனர்.

இம்முச்சக்கரவண்டி அதன் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டுச் சென்று விபத்துக்குள்ளானதாகவும், பொலிஸார் கூறினர். இதில் காயமடைந்த முச்சக்கரவண்டிச் சாரதி பிபிலை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டு சென்றுள்ளதாகவும், பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக பிபிலை பொலிஸார் விசாரணையை நடத்தி வருகின்றனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய 2024.10.01
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5612 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.31,265,908.00
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 8 6 6 5 1 8

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 187
ஆங்கில எழுத்து V — வெற்றி இலக்கங்கள் 6 5 1 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3854 — சீட்டிழுப்பு திகதி 2024.10.01 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.60,175,024.40
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 09 29 30 45 — விசேட எழுத்து S — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 14171

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1960 — 2024.10.01 — 11464 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.447,999,514.00
ஆங்கில எழுத்து M — சுப்பர் இலக்கம் 21 — வெற்றி இலக்கங்கள் 23 28 31 51
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.10.01 — சீட்டிழுப்பு இலக்கம் 438
ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 5 6 5 9 9 9
L7 எழுத்து X
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 20,604,180.56

ராசி சுப பலன் — திகதி 2024.10.01 — சீட்டிழுப்பு இலக்கம் 921 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.3,388,160.40
வெற்றி இலக்கினம் கும்பம் — வெற்றி இலக்கங்கள் 12 14 40 45 — தனயோக இலக்கம் 39207 — நாளுக்கான விதி எண் 23

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1642 — 2024.10.01 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 81,775,430.08
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 36 41 56 79 — விசேட எழுத்து Q — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 38910

# சென். மேரிஸ் கல்லூரி மாணவர்கள் 120 பேர் க.பொ.த. சா/த பரீட்சையில் சித்தி







பொகவந்தலாவ நிருபர்

ஹட்டன் கல்வி வலயத்துக்குட்பட்ட பொகவந்தலாவை சென். மேரிஸ் தேசிய கல்லூரியில் க.பொ.த. சாதாரணதர பரீட்சைக்கு தோற்றிய 145 மாணவர்களுள் 120 மாணவர்கள் க.பொ.த. உயர்தரத்துக்கு தகுதி பெற்றுள்ளனர். இந்நிலையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழா கல்லூரி அதிபர் ஏ.வேலுசாமி தலைமையில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

இக்கல்லூரியில் 6 மாணவர்கள் 9 ஏகளையும் 4 மாணவர்கள் 8 ஏகளையும் 4 மாணவர்கள் 7 ஏகளையும் 3 மாணவர்கள் 6 ஏகளையும் 5 மாணவர்கள் 5 ஏகளையும் 5 மாணவர்கள் 4 ஏகளையும் பெற்று சித்தி பெற்றுள்ளனர். இந்நிலையில் 120 மாணவர்கள் உயர்தரத்துக்கு தகுதி பெற்றுள்ளதாக, பாடசாலை அதிபர் ஏ.வேலுசாமி குறிப்பிட்டார்.

பாடசாலைக்கு மாணவர்கள் பாண்ட் வாத்தியத்துடன் பேரணியாக அழைத்துச் செல்லப்பட்டு, பாடசாலை சமூகத்தால் பாராட்டப்பட்டனர். இம்மாணவர்களுக்கு பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினரும் வர்த்தக சங்கத்தினரும் இணைந்து பரிசில் வழங்கி வைத்துள்ளனர்.

இந்நிகழ்வில் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கிழக்கின் குரல்



## சுகாதார அமைச்சின் கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் பங்கேற்பு





கிண்ணியா தினகரன் நிருபர்

கிழக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு, சமூக சேவைகள், கிராமிய மின்சார அமைச்சின் மீளாய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் (01) சுகாதார அமைச்சில் இடம்பெற்றது.

அமைச்சின் பதில் செயலாளர் எந்திரி என்.சிவலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த மீளாய்வு கூட்டத்தில், கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகரவும் பங்கேற்றிருந்தார்.

இதன்போது, சுகாதார, சுதேச மருத்துவ நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு, சமூக சேவைகள், கிராமிய மின்சார அமைச்சினால் இவ்வருடம் முன்னெடுக்கப்பட்ட மற்றும் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்திட்டங்கள் தொடர்பாக, அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களினால் மேற்கொள்ளப்பட்ட மற்றும் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநர் கேட்டறிந்து கொண்டார்.

இது தொடர்பான விளக்கங்கள் அமைச்சின் பதில் செயலாளர் எந்திரி என்.சிவலிங்கம் மற்றும் திணைக்கள தலைவர்களினால் முன்வைக்கப்பட்டது. இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, ஆளுநர் செயலக செயலாளர் எல்.பி.மதநாயக்க, பிரதிப் பிரதம செயலாளர் (நிதி) ஏ.எம்.எம்.றபிக், பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்) என்.தமிழ்ச்செல்வன், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல், சுகாதார அமைச்சின் நிருவாக உத்தியோகத்தர் எஸ்.எம்.றியாஸ் உள்ளிட்ட உயரதிகாரிகள் மற்றும் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## திகாமடுல்ல மாவட்டத்தில் 555,432 பேர் வாக்களிக்கத் தகுதி

(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அம்பாறை, கல்முனை, சம்மாந்துறை, பொத்துவில் என நான்கு தொகுதிகளைக் கொண்ட திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில், 2024 வாக்காளர் இடாப்பின் பிரகாரம் மொத்தம் 555,432 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இவர்களில் அம்பாறை தொகுதியில் 188,222 பேரும், சம்மாந்துறை தொகுதியில் 99,727 பேரும், கல்முனை தொகுதியில் 82,830 பேரும், பொத்துவில் தொகுதியில் 184,653 பேரும் அடங்குவர்.

பாராளுமன்ற தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சுயேச்சைக் குழுவாகப் போட்டியிடுபவர்கள், ஒருவருக்கு தலா 02 ஆயிரம் ரூபா என்ற அடிப்படையில் 20 ஆயிரம் ரூபாவை கட்டுப்பணமாகச் செலுத்த வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க அறிவித்துள்ளார்.

கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் திகாமடுல்ல மாவட்டத்தில் போட்டியிட்ட சிறிலங்கா பொதுஜன பெரமுன 126,012 வாக்குகளைப் பெற்று 03 பிரதிநிதிகளையும், ஐக்கிய மக்கள் சக்தி 102,274 வாக்குகளைப் பெற்று 02 பிரதிநிதிகளையும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி 43,319 வாக்குகளைப் பெற்று 01 பிரதிநிதியையும், தேசிய காங்கிரஸ் கட்சி 38,911 வாக்குகளைப் பெற்று 01 பிரதிநிதியையும் பெற்றுக் கொண்டன.

திகாமடுல்ல மாவட்டத்தில் இம்முறை தேர்தலில் போட்டியிடுவதற்கு பலர் விருப்பம் தெரிவித்துள்ள நிலையில், அரசியல் கட்சிகளின் இறுதி முடிவுக்காகக் காத்திருக்கின்றனர். அரசியல் கட்சிகள் தனித்துப் போட்டியிடுவதா? அல்லது வேறு கட்சிகளுடன் இணைந்து கூட்டாகப் போட்டியிடுவதா? என்பது தொடர்பான இறுதித் தீர்மானம் எதிர்வரும் நாட்களில் வெளிவரும் என தெரிவிக்கப்படுகின்றது.

## ரொட்டவெவ மு.ம.வி முதலிடம்

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை வடக்கு கல்வி வலயத்தில், ரொட்டவெவ முஸ்லிம் மஹா வித்தியாலயம் க.பொ.த சாதாரண தர பரீட்சையில், மாணவர்களின் எண்ணிக்கையில் முதலிடத்தை பெற்றுள்ளது.

இப் பாடசாலையில் ஐந்து மாணவர்கள் மட்டுமே பரீட்சைக்கு தோற்றியிருந்த நிலையில் இந்த ஐந்து மாணவர்களும் க.பொ.த உயர்தரத்துக்கு தகுதி பெற்றுள்ளதாக பாடசாலையின் அதிபர் டி.ஜீ.பீ. நிரஞ்சன் தெரிவித்தார்.

அதன்படி, சவாஹீர் முகமட் சதாம், என்சிலூன் முகமட் மாஹீர், ஜெய்னுதீன் முகமட் சனாட், முஹம்மத் யசீர் முகமட்அத்தீப் மற்றும் நிசார் முஹம்மட் முஹாத் ஆகிய மாணவர்களே இவ்வாறு க.பொ.த.உயர்தரத்துக்கு தகுதி பெற்றுள்ளனர்.

## மகாத்மா காந்தியின் ஜனன தினம் மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு





(கல்லடி குறூப்நிருபர்)

மகாத்மா காந்தி அடிகளாரின் 155 ஆவது ஜனன தினம் நேற்று (02) மட்டக்களப்பில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வு, மட்டக்களப்பு காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைந்துள்ள காந்தியடிகளாரின் நினைவு தூபியில் நடைபெற்றது.

இதன்போது காந்தியடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.இதில், காந்தி சேவா சங்கத்தின் தலைவர் கலாநிதி செல்வேந்திரன், செயலாளர் க.பாரதிதாசன், வர்த்தக சங்க செயலாளர் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

## மட்டு. மாவட்டத்தில் இரத்ததானம்

ஏறாவூர் நிருபர்




மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள இரத்த தட்டுப்பாட்டினால், இரத்த தானம் செய்யும் பணிகள் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன்படி, செங்கலடி புனித நிக்கொலஸ் ஆலயத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வில் பல பிரமுகர்கள் இரத்த தானம் செய்ய முன்வந்ததுடன் இதனை அருட்தந்தை ஜோசப் நிகஸ்டன் ஆரம்பித்து வைத்தார்.

செங்கலடி உள்ளிட்ட பல பிரதேசங்களைச் சேர்ந்த ஆண்கள், பெண்கள் குறிப்பாக இளைஞர் யுவதிகள் மிகுந்த ஆர்வத்துடன் முன்வந்து இரத்த தானம் செய்வதை அவதானிக்க முடிந்தது.

இந்த ஆலயத்தில் கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் இரத்ததான நிகழ்வுகள் நடத்தப்பட்டிருந்த நிலையில், தற்போது எட்டாவது தடவையாக இரத்ததான நிகழ்வு நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வு; கோரக்கர் த.ம.வியில் கருத்தரங்கு



(காரைதீவு குறூப் நிருபர்)

சம்மாந்துறை கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியைகள் மற்றும் மாணவிகளுக்கான மார்பகப் புற்றுநோய் தொடர்பான விழிப்பூட்டல் செயலமர்வு நேற்று முன்தினம் (01) நடைபெற்றது.

புற்றுநோயின் கோரப்பிடியிலிருந்து அனைவரையும் பாதுகாக்கும் பொருட்டு, பாடசாலை மட்டத்தில் Cancer Prevention நிகழ்ச்சி நிரல் நடத்தப்பட்டுவருகிறது.

அத்துடன், பாடசாலை வளாகத்தில் புற்றுநோய் தொடர்பாக மாணவச் சமூகத்தை விழிப்பூட்டும் வகையில் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சுகாதார துறை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிளாஸ்டிக் பாவனையற்ற பாடசாலை சூழலை உருவாக்குதல் அவசியம்

(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)




பிளாஸ்டிக் பாவனையின் தாக்கங்கள் தொடர்பாக கல்வி அமைச்சினால் தனி பாட அலகு உருவாக்கப்படவேண்டுமென அக்கரைப்பற்று வலயக் கல்விப்பணிப்பாளர் எ.எம் ரகுமாதுல்லாஹ் தெரிவித்தார்.

அறுகம்பே சஸ்டைனப்ல் கிளீன் ஸ்ரீ லங்கா (Sustainable Clean Lanka) நிறுவனத்தினரால், 'பிளாஸ்டிக் பாவனையற்ற பாடசாலை சூழலை உருவாக்குதல்' என்ற தொனிப்பொருளில் அறுகம்பே நியு ரைஸ்ஸ்டார் கேட்போர் கூடத்தில் அண்மையில் நிகழ்வொன்று நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கரைப்பற்று வலயக் கல்விப்பணிப்பாளர் ஏ.எம் ரகுமாதுல்லாஹ், பிளாஸ்டிக்கின் தாக்கங்கள் கடல்வாழ் உயிரினங்களையும், மனிதர்கள், மிருகங்கள் யாவற்றையும் அழிவடையச்செய்வதோடு இவ்வாறான நிகழ்வுகள் சர்வதேச ரீதியில் நடத்தப்பட வேண்டும் என கூறினார்.

சஸ்டைனப்ல் கிளீன் ஸ்ரீ லங்கா Sustainable clean lanka தலைவர் ஏ.முஸம்மில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், செயற்றிட்ட முகாமையாளர் எம்.எம்.பைசரால், பிளாஸ்டிக் பாவனையின் தாக்கங்கள் தொடர்பான காணொளி மூலம் விளக்கங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பொத்துவில்,திருக்கோவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர்கள், பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி, அக்கரைப்பற்று வலய கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப்பணிப்பாளர், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## அம்பாறையில் மூன்றாம் போகமாக பாசிப்பயறு மற்றும் உளுந்துச் செய்கை

(ஒலுவில் விசேட நிருபர்)



உணவு உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு அம்பாறை மாவட்டத்தில் மூன்றாம் போகமாக பாசிப் பயறு மற்றும் உளுந்துச் செய்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம தெரிவித்தார்.

விவசாயத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற மூன்றாவது போக பயிர்ச் செய்கையினை ஊக்குவிக்கும் வகையில், அக்கரைப்பற்று ஆலிம்நகர் பிரதேசத்தில் பாசிப் பயறு மற்றும் உளுந்துச் செய்கை பண்ணப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு, பிரதேச நிலையப் பொறுப்பு விவசாயப் போதனாசிரியர் ஏ.ஜீ. பிர்னாஸ் ஹரீஸ் தலைமையிலான குழுவினார் நேற்று முன்தினம் (01) விஜயம் செய்து பார்வையிட்டனர்.

இதன்போது, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம தெரிவிக்கையில்.

அம்பாறை மாவட்டத்தில் நீர் வடிந்தோடும் பிரதேசங்களிலும், நீரை இலகுவாக பெறக்கூடிய பிரதேசங்களிலும் மூன்றாம் போகமாக பாசிப்பயறு, கௌபி, உளுந்து போன்ற தானிய வகைகள் செய்கை பண்ணபட்டு வருகின்றன.

உப உணவு உற்பத்தி தொடர்பாக விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை விவசாயப் போதனாசிரியர்கள் வழங்கி வருவதாகவும், தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் விதைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மூன்றாம் போகமாக நெல் வயல்களில் பாசிப்பயறு உளுந்து தானியப் பயிர்கள் உற்பத்தி செய்வதனால் வயல்களில் நைதரசன் அதிகரித்து நெல் விளைச்சல் அதிகரிக்கும். குறைந்த செலவில் இதனை உற்பத்தி செய்யது விவசாயிகள் மேலதிக வருமானத்தை பெற முடிவதோடு மண் வளம் அதிகரிக்கும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## மட்டு. வின்சன்ற் மகளிர் கல்லூரி; 58 மாணவர்களுக்கு 9A சித்தி



புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகமான 9A பெறுபேறுகளை பெற்ற மாணவர்களை கொண்ட பாடசாலை என்ற பெருமையினை மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் தேசிய பாடசாலை பெற்றுள்ளது.

இப் பாடசாலையில் சுமார் 58 மாணவிகள் 9ஏ பெறுபேறுகளை பெற்று சித்தியடைந்துள்ளனர்.

அத்தோடு 25 மாணவர்கள் 8ஏ சித்திகளை பெற்றுள்ளதோடு, 13 மாணவர்கள் 7ஏசித்திகளை பெற்றுள்ளனர். இம் மாணவிகளைக் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

## தமிழ் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த அனைத்து கட்சிகளும் ஒன்றிணையவேண்டும்

### கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர்

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



அம்பாறை மாவட்டத்தில் பாராளுமன்ற தமிழ் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்றிணையவேண்டும் எனவும் அதற்காக எந்த நேரத்திலும் ஒத்துழைக்க நாம் தயாராகவுள்ளதாகவும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் குமாரசாமி புஸ்பகுமார் தெரிவித்தார். அம்பாறை ஊடக அமையத்தில், சமகால அரசியல் விடயங்கள் தொடர்பாக கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த கால தேர்தலில் அம்பாறை மாவட்டத்துக்கு கிடைக்க வேண்டிய தமிழ் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்வதற்கு பல்வேறு தரப்பினரும் அம்பாறை மாவட்டத்துக்கு வருகை தந்து எமது மக்களின் வாக்குகளை சிதறடித்தனர். எமது பிரதிநிதித்துவத்தை இழந்து விடாதிருக்க இம்முறை சகல கட்சிகளும் ஒன்றிணைந்து ஒத்துழைப்பு வழங்க முன்வரவேண்டும்.

ஆனால், இன்று வரை ஒன்றிணைது செயற்பட எவரும் முன்வராதபோது, மக்களின் ஆதரவுடன் சுயேட்சையாக களமிறங்கி தமிழ் பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொடுப்பதற்கும் நாம் தயங்க மாட்டோம்.

இந்த தேர்தலை பொறுத்தவரை பொது மக்கள் ஒரு தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டிய சூழ்நிலை எற்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

## ஹெரோயினுடன் கைதான சந்தேகநபருக்கு தடுப்புக்காவல்




சாய்ந்தமருதுவில் போதைப் பொருளைதம்வசம்வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை 7 நாட்கள் தடுப்புக்காவலில் வைக்குமாறு கல்முனை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதான வீதியில் அமைந்துள்ள சந்தை தொகுதியின் மேல் மாடியில், அண்மையில் திறக்கப்பட்ட வாடகை வாகனங்களை வழங்குகின்ற நிறுவனமொன்றை நடத்திவந்த 43 வயதுடைய நபரொருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த நபர்கடந்த 30 ஆம் திகதி கைதுசெய்யப்பட்டபோது, அவரிடமிருந்து 15 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளை கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர். சந்தேகர் போதைப் பொருள் நுகர்தல் மற்றும் விற்பனையில் பல நாட்களாக ஈடுபட்டவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் (1) கல்முனை நீதிமன்ற நீதவான் எம்.எஸ்.எம். சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டபோது, சந்தேகநபரை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.

# மக்களுக்கு வினைத்திறனுடன் சேவை ஆற்றுவதை நாம் உறுதி செய்ய வேண்டும்

## தெவட்டகஹா பள்ளியின் தலைவர் மௌலவி இக்பால்





**ஆரியரத்ன கனேகொட, கொலன்னாவ சுமனசேன**

பதவிகள் நியமனங்கள் குறுகிய காலத்திற்கே கிடைக்கும். அந்த ஆணையுடன் மக்களின் பிரச்சினைகளுக்கு பதில் அளிப்பது முக்கியம். வெறுப்பு, கோபம், கபடம் போன்றவற்றில் இருந்து விலகி அக்காலப்பகுதியில் மக்களுக்கு வினைத்திறனுடன் சேவையாற்றுவதை நாம் உறுதி செய்ய வேண்டும் என கொழும்பு கண் ஆஸ்பத்திரி சந்தியில் அமைந்துள்ள தெவடகஹா பள்ளியின் தலைவர் மௌலவி எச். எம். இக்பால் தெரிவித்தார்.

நபிநாயகத்தின் பிறந்தநாளை முன்னிட்டு கொழும்பு மாநகர சபை கட்டடத்தின் மேல் மாடியில் உள்ள சபை உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இங்கு உரையாற்றிய கொழும்பு மாநகர ஆணையாளர் திருமதி ஜே.எம். பத்ராணி ஜயவர்தன பல்லின மதத்தினரும், பல இனத்தவர்களும் ஒற்றுமையாக வாழும் ஊரில் இவ்வாறான அனைத்து மதத்தினரின் விழாக்களை வெற்றிகரமாக நடத்துவதற்கான வாய்ப்பை வழங்குவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். முஹம்மது நபி 63 வருடங்கள் இவ்வுலகில் வாழ்ந்து 40 வயதை எட்டியதும் இறைவனின் செய்தியை உலகுக்கு எடுத்துரைக்கும் ஆணை பெற்றார் எனவும் அன்றிலிருந்து அவர்கள் தன் வாழ்நாளில் 23 வருடங்களை அர்ப்பணித்ததை இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு பதிவு செய்துள்ளார். அக்காலப்பகுதியில் முழு அரபு உலகையும் ஒருங்கிணைக்க தேவையான தலைமைத்துவத்தை அவரால் வழங்கமுடிந்தது. மக்களில் அநேகமானோர் கவனத்தில் கொள்ளாத பெறுமதியான இரண்டு மதிப்புமிக்க வரங்களைப் பற்றி புனித நபிகள் நாயகம் அறிவித்துள்ளார். 1, உடல்நலம், 2, ஓய்வு, இது முஸ்லிம்களுக்கு மட்டுமல்ல, ஒவ்வொரு மனிதனுக்கும் முக்கியமான விடயமாகத் தான் நான் கருதுகிறேன் என்றார். சமய, கலாசார வேற்றுமையில் வாழும் நாம் அனைவரும் ஒவ்வொருவரினதும் மதம், கலாசாரங்களை மதித்து வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். முகமது நபியின் நற்பண்புகளைப் பற்றி அறிந்து அவர்களைப் பின்பற்றி புனித குர்ஆனுக்கு கீழ்ப்படிவதன் மூலம் அனைவரும் நல்வாழ்வு வாழ பிரார்த்திப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஐயப்ப சேவா சங்கத்தின் நவராத்திரி பூஜை

69/A,A,G, ஹின்னி அப்புஹாமி மாவத்தை, கொழும்பு 13 யில் அமைந்திருக்கும் ஆதி ஸ்ரீ ஐயப்ப ஷேத்திரம் அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கத்தின் நவராத்திரி பூஜை தினமும் மாலை 6.00 மணிக்கு நடைபெறும். நவராத்திரி கொலு பூஜை இன்று 3ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை சிறப்பாக நடைபெறவுள்ளது. முதலாம் பூஜைக்கு நித்தியானந்தன் குடும்பமும், இரண்டாம் நாள் பூஜைக்கு ரவீந்திரன் குடும்பமும் மூன்றாம் நாள் பூஜைக்கு சுரேஸ் குடும்பமும் நான்காம் நாள் பூஜைக்கு நமசிவாயமும் ஐந்தாம் நாள் பூஜைக்கு விஜயராஜ் குடும்பமும் ஆறாம் நாள் பூஜைக்கு பஞ்சகௌரி குடும்பமும் ஏழாம் நாள் பூஜைக்கு ஸ்ரீ பத்மநாதனும் எட்டாம் நாள் பூஜைக்கு சபாபதி குடும்பமும் ஒன்பதாவது நாள் பூறைக்கு சத்தியமூர்த்தி குடும்பமும் உபயம் வழங்கியுள்ளார்கள்.

பத்தாவது நாள் விஜயதசமி அன்று ஏடு தொடக்குதல் இடம்பெறும். மாலை பிரபாத் சாமி குழுவினரின் படி பூஜையுடன் மாணவிகளின் கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

# 'தேசிய ஒற்றுமைக்கான சகவாழ்வு' ஊடக சந்திப்பு



தேசிய சர்வமத குழு ஏற்பாடு செய்திருந்த "தேசிய ஒற்றுமைக்கான சகவாழ்வு" எனும் தொனிப் பொருளிலான ஊடகவியலாளர் மாநாடு நேற்று கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் நடைபெற்றது. தேசிய சர்வமத குழுவின் பௌத்த விவகார தலைவர் கலாநிதி சாஸ்திராபதி கலகம தம்மரன்ஸி நாயக்க தேரர் மற்றும் முஸ்லிம் விவகார இணைத்தலைவர் கலாநிதி செய்யித் ஹஸன் மௌலானா, இந்துமத விவகார இணைத்தலைவர் கலாநிதி சிவஸ்ரீ பாபுசர்மா குருக்கள், கிறிஸ்தவ மத விவகார இணைத்தலைவர் கலாநிதி அருட்திரு நிஸான் சம்பத்குரே மற்றும் ஜெரோம் பெர்னாண்டோ குளோரிஸ் ஆலய தலைவர் கலாநிதி ஜெரோம் பெர்னாண்டோ ஆகியோர்கள் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தனர்.

**(படம் கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்)**

# பேருவளை ஐ.ம.ச காரியாலயத்தில் பொதுமக்களுடனான விசேட சந்திப்பு



எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணிக்கு பெரு வெற்றியை பெற்றுக்கொடுக்கும் நோக்குடனான விஷேட கலந்துரையாடலொன்று (01) பேருவளை சீனன்கோட்டையிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி பிரதான அலுவலகத்தில் நடைபெற்றது.

பேருவளை ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான அமைப்பாளரும், முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான இப்திகார் ஜெமீல் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கட்சி ஆதரவாளர்கள் பங்குபற்றினர்.

பேருவளை பிரதேச சபை மற்றும் நகர சபை முன்னாள் தலைவர்கள், உப தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள், உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணிக்கு வெற்றியை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் பல்வேறு கருத்துக்களை முன்வைத்தனர்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி தலைவர், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் வெற்றி பெற்று நிச்சயம் ஆட்சி அமைப்போம் என இங்கு உரையாற்றிய பிரதம அமைப்பாளர் இப்திகார் ஜெமீல் தெரிவித்தார்.

# அமரர் திருச்செல்வம் சமூகப்பணியில் நீண்டதொரு பயணத்தை தொடர்ந்தவர்

## இ.தொ.காங்கிரஸ் அனுதாபம்



அம்பிகா ஜுவலர்ஸ் உரிமையாளரான சோலைமலைத்தேவரின் புதல்வரான திருச்செல்வம் நேற்று சென்னையில் காலமான தகவல் அறிந்து தாமும் தமது ஸ்தாபனமும் மிகுந்த கவலை அடைந்துள்ளதாக, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இவரது மறைவையிட்டு அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"அமரர்களான சௌமியமூர்த்தி தொண்டமான், ஆறுமுகன் தொண்டமான் ஆகியோரது வழிகாட்டுதலோடு சமூகப்பணியில் நீண்ட பயணத்தை தொடர்ந்து குறிப்பாக, மலையக மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக அயராது பாடுபட்டு மாணவர்களின் நலனுக்காகவும் உயர்வுக்காகவும் உழைத்த ஒரு சமூகப்பணியாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை இந்திய சமுதாயப் பேரவையின் நீண்டகால உறுப்பினரான திருச்செல்வம் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பல ஆண்டுகள் முன்னின்று உழைத்தவர்.

அவ்வப் பகுதிகளில் நடைபெற்ற கல்வி கருத்தரங்குகள், ஒன்றுகூடல்கள் ஆகியவற்றை முறையாக ஒழுங்கு செய்வதில் நன்றாக செயல்பட்டவராவார்.

இவரது இழப்பு மலையக மக்களுக்கும் எமக்கும் பாரிய கவலையை தருகின்றது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றது" எனத் தெரிவித்துள்ளார்.

# சேனைக்குடியிருப்பில் தொற்றாநோய் கிளினிக்

**பாலமுனை விசேட நிருபர்**

சேனைக்குடியிருப்பு ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு வைத்தியசாலையில் தொற்றாநோய் கிளினிக் மற்றும் தொற்றாநோய் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, அவ்வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியும் மருத்துவருமான எம்.பி.எம்.சில்மி தெரிவித்தார்.

35 வயதுக்கு மேற்பட்ட சகலரும் தொற்றாநோய் கிளினிக்கில் சிகிச்சை பெற முடியுமென்பதுடன், தொற்றாநோய் பரிசோதனையை செய்துகொள்ள முடியுமெனவும், அவர் கூறினார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் கல்முனை பிராந்திய பிரிவு தலைவர்களின் ஒத்துழைப்புடனும் கிளினிக் வசதி ஏற்படுத்தப்பட்டு மிகவும் சிறந்த முறையில் நடைபெறுகிறது. இதனால் நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு மக்கள் பெரிதும் நன்மையடைந்து வருகின்றனர்.

சேனைக்குடியிருப்பு ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவு வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற்கு வசதி காணப்பட்ட நிலையில் இந்த வைத்தியசாலையை தான் பொறுப்பேற்று சேவையை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாகவும் தற்போது முதற்கட்டமாக தொற்றாநோய் கிளினிக் மற்றும் தொற்றாநோய் பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் மேலும் குறிப்பிட்டார்.

# 9 ஏ சித்தி பெற்ற இரு மாணவிகள்

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் கல்வி வலயத்துக்கு உட்பட்ட தி/மூ/அந் நஹார் மகளிர் மகா வித்தியாலயத்தில் கல்வி பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையில் ஏ.சி.ஷைனப், எம்.பி.ஹானியா ஆகிய இரு மாணவிகள் 9 ஏகளை பெற்று சித்தியடைந்துள்ளனர். மேலும் இந்த வித்தியாலயத்தில் 7 மாணவிகள் 8 ஏகளை பெற்று சித்தி பெற்றுள்ளனர்.

இப்பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பரீட்சைக்கு தோற்றிய 87 மாணவிகளுள் 89 சதவீதமான மாணவிகள் சகல பாடங்களிலும் சித்தியடைந்து க.பொ.த. உயர்தர பிரிவில் கற்பதற்கான தகுதி பெற்றுள்ளதாகவும், மேற்படி பாடசாலை அதிபர் பி.எம்.ஏ.மர்சூக் தெரிவித்தார்.

# மாத்தளையில் 17 வயது சிறுவன் கொலை

**அக்குறணை குறூப் நிருபர்**



மாத்தளை, மஹவெல பொலிஸ் பிரதேசத்தில் 17 வயது சிறுவன் ஒருவன் கொலை செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்படும் 55 வயதுடைய ஒருவரை கைது செய்துள்ளதுடன், இச்சந்தேக நபர் மடவல பிரதேசத்தைச் சேர்ந்தவரெனவும், பொலிஸார் கூறினர். இரண்டு தரப்பினர்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறு காரணமாக மோதல் ஏற்பட்டதாகவும் இதன்போது பொல்லு மற்றும் தலைக்கவசத்தால் தாக்கப்பட்டதில் இச்சிறுவன் உயிரிழந்துள்ளதாகவும், பொலிஸார் குறிப்பிட்டனர். இச்சம்பவத்துடன் தொடர்புடைய சிலர் தேடப்பட்டு வருவதுடன், இவர்கள் தப்பிச் சென்றுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# பதுளையில் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு







**ஊவா வெல்லஸ்ஸ விசேட நிருபர்**

பதுளை மாநகர சபை பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களை உள்ளடக்கிய சர்வதேச சிறுவர் தின நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பதுளை சேனாநாயக்க மைதானத்தில் நடைபெற்றது.

இதன்போது மாணவர்களின் இசை நிகழ்ச்சி, ஓவியம் வரைதல் உள்ளிட்ட விசேட நிகழ்ச்சிகள் பல நடைபெற்றன. அத்துடன் இந்த மாணவர்களுக்கு பழக்கன்று செடிகளும் பதுளை மாநகர சபையால் வழங்கி வைக்கப்பட்டன. பதுளை மாநகர ஆணையாளர் ஜகத் பிரியஷானால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் ஊவா மாகாண ஆளுநர் ஜே.எம். கபில ஜயசேகர உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# மாரவிலவில் விபத்து; மோ. சைக்கிளில் பயணித்தவர் பலி




மாரவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோப்புவ மாதம்பை வீதியில், வலகபிட்டி பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நாத்தாண்டியாவிலிருந்து மாதம்பை நோக்கிப் பயணித்த லொறியொன்று எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திச் சென்றவர் படுகாயமடைந்து மாரவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். மாரவில பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடைய ஒருவரே விபத்தில் உயிரிழந்துள்ளார். இந்த விபத்தை தொடர்ந்து லொறியின் சாரதியை கைது செய்துள்ளதாகவும், பொலிஸார் குறிப்பிட்டனர். இந்த விபத்து தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணையை நடத்தி வருகின்றனர்.

## தேர்தல் ஆணைக்குழு

## சட்டரீதியான அறிவித்தல்களை வெளியிடுதல் மற்றும் அஞ்சல் மூல வாக்களிப்பு அடையாளமிடுவதற்கான திகதி

| விபரம் | திகதி |
|---|---|
| **அஞ்சல் மூல வாக்குகள்** | |
| அஞ்சல் மூல வாக்களிப்பு சுற்றறிக்கையை வெளியிடுதல். | 2024.08.26 |
| அஞ்சல் மூல வாக்களிப்பு விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கால எல்லை | 2024.08.26 - 2024.09.13 |
| அஞ்சல் மூல வாக்காளர் பெயர் பட்டியல் | 2024.09.20 |
| அஞ்சல் மூல வாக்கு விநியோகத்திற்கான அறிவித்தல் | 2024.09.23 |
| அஞ்சல் மூல வாக்கை விநியோகித்தல். | 2024.10.07 |
| **அஞ்சல் மூல வாக்கை அடையாளமிடல்** | |
| (i) அனைத்து அஞ்சல் மூல வாக்காளர்கள் | 2024.10.14 |
| (ii) மேற்குறித்த (i) இல் குறிப்பிடப்பட்ட திகதியில் உங்களது அஞ்சல் மூல வாக்கை அடையாளமிட முடியாமல் போன அஞ்சல் மூல வாக்காளர்கள், தான் கடமையாற்றும் மாவட்டத்தின் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் அடையாளமிடல். | 2024.10.18 |
| அஞ்சல் மூல வாக்குப் பெட்டியை திறத்தல் மற்றும் வட்டாரத்திற்கிணங்க வேறு பிரித்தல். | 2024.10.24 |
| **உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் (Official Poll Cards)** | |
| தபாலில் சேர்த்தல்<br>விசேட விநியோகத் திகதி<br>இறுதி விநியோகத் திகதி | 2024.10.12<br>2024.10.17<br>2024.10.20 |
| | |
| 01. தற்காலிக அடையாள அட்டையை வழங்க முன்மொழியப்பட்ட இறுதி திகதி | 2024.10.22 |
| | |
| 02. மரணித்த/ வெளிநாடு சென்றுள்ள தேருநர்கள் தொடர்பாக தகவல்களை சேகரித்தலின் இறுதி திகதி | 2024.09.25 |

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க**
**தவிசாளர், தேர்தல்**
**ஆணைக்குழு**
**(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)**

**தேர்தல் ஆணைக்குழு,**
**சரண மாவத்தை,**
**இராஜகிரிய.**

## பெறுகை அறிவித்தல்

### வட கொழும்பு போதனா வைத்தியசாலை - ராகம

### வெளி நோயாளர் பிரிவு SIGMA ரக 02 மின்தூக்கிகளை சீரமைத்தல்

01. ராகம போதனா வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவு கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருக்கும் SIGMA ரக 02 மின்தூக்கிகளை சீரமைப்பதற்கு பிராந்திய பெறுகைக் குழு தலைவரினால் தகுதியுடைய ஒப்பந்ததாரர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. இதற்காக தேசிய போட்டிரீதியான விலைமனுக் கோரல் மூலம் ஒப்பந்ததாரர் ஒருவர் தேர்வு செய்யப்படுவார். ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதியைப் பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாத ஒருவராக இருத்தல் வேண்டும் என்பதோடு ICTAD – EM 04 தரத்தில் பதிவு செய்யப்பட்ட தரத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

03. விலைமனுவுடன் 03 மாதங்களுக்கு செல்லுபடியாகும் வகையில் (2024.10.25 தொடக்கம் 2025.01.24 வரை) 37,000.00 ரூபா விலைமனு பிணை ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

04. மேலுள்ள பணிக்காக ஆர்வத்தை வெளிப்படுத்துகின்ற தகுதியுடைய எந்த ஒரு விலைமனுதாரருக்கும் அல்லது பிரதிநிதி ஒருவருக்கும் கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்களை சமர்ப்பித்து 2024.10.04 ஆம் திகதி தொடக்கம் 2024.10.24 ஆம் திகதி வரை வாரத்தின் கடமை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை வட கொழும்பு போதனா வைத்தியசாலை நிதிப் பிரிவில் இருந்து விலைமனு ஆவணங்களை பெற முடியும்.
    - வட கொழும்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு அனுப்பும் எழுத்துமூல விண்ணப்பம்.
    - வட கொழும்பு போதனா வைத்தியசாலை சிறாப்பருக்கு, விலைமனு ஆவணங்களுக்காக மீளளிக்கப்படாத 2,500.00 ரூபாவை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதி.
    - வர்த்தகப் பதிவு சான்றிதழின் உறுதி செய்யப்பட்ட பிரதி.

05. அனைத்து விலைமனுவும் இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு “மூலப் பிரதி” மற்றும் “நகல் பிரதி” என்று குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்களை இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த சீரமைப்பு வேலையின் பெயர் மற்றும் விலைமனுக்களை திறக்கும் திகதியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

06. 2024.10.25 ஆம் திகதி மு.ப. 10.30 இற்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வட கொழும்பு போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழு தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது வட கொழும்பு போதனா வைத்தியசாலையின் தலைமைக் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு வேண்டும். தாமதித்துக் கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்திற்கு விண்ணப்பதாரருக்கு அல்லது அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு மாத்திரம் பங்கேற்க முடியும்.

(தொலைபேசி இலக்கம் - 0112959261/2 நீடிப்பு - 139 தொலைநகல் - 011-2959266)

**தலைவர்**
**பிராந்திய பெறுகைக் குழு**
**வட கொழும்பு போதனா வைத்தியசாலை,**
**ராகம**

### பொது மக்களுக்கு விடுக்கப்படும் அறிவித்தல்

இலங்கை வாழ் மக்களுக்கு தெரிவிப்பதாவது, பலப்பிட்டிய, பத்தேகம, தலகஹவிலவத்த, இல.84/1, என்ற முகவரியில் வசிக்கும் அதிகாரி முதியன்செலாகே ரஞ்சித் திஸ ாநாயக்க ஆகிய நான் 2024 மே 19 அல்லது அதற்குக் கிட்டிய தினத்தில் எம்பிலிப்பிட்டிய நீதிமன்ற அதிகாரப்பிரதேசத்திற்கு உரிய இல 138/4, கனமெதிவீதி, எம்பிலிபிட்டிய என்ற முகவரியில் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் கட்டளைப்படி எல்லைப்படுத்தப்பட்ட மருந்தான PREGABALIN (150 மில்லிகிராம்) மருந்து வில்லைகள் 1000ஐ தம்மிடம் வைத்திருந்தமை சம்பந்தமாக தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் எம்பிலிப்பிட்டிய கௌரவ நீதவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட இல.10664/24 என்ற வழக்கின் மூலம் நான் குற்றவாளியாக ஒப்புக்கொண்டேன் அதன் பிரகாரம் 2024.06.25ம் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரம் ரூ.100,000/- தண்டம் விதிக்கப்பட்டது. அத்தண்டத்தொகை D/26 392947 என்ற பற்றுசீட்டின் மூலம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் பிறகு அவ்வாறான குற்றங்கள் மேற்கொள்ளப்படாது எனவும், மேற்படி குற்றம் சம்பந்தமாக இலங்கை குடியரசுக்கும் மற்றும் சகல இலங்கையினருக்கும் மன்னிப்புக் கோருவதாகவும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

Best way
to fulfil
your
Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

## மகளிர், சிறுவர், இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சு

### தேசிய இளைஞர் படையணி

### விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையங்களுக்காக கணினிகள் மற்றும் கணினி தொடர்பான உருப்படிகளின் வழங்கல், விநியோகம் மற்றும் நிறுவுதல்

### IFB No: YC/2/4/2024/G/11

தேசிய இளைஞர் படையணிக்காக கணினிகள் மற்றும் கணினி தொடர்பான உருப்படிகளின் வழங்கல், விநியோகம் மற்றும் நிறுவுதலின் பெறுகைக்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து மகளிர், சிறுவர், இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் நோக்கெல்லைக்கு உட்பட்டு இயங்கும் தேசிய இளைஞர் படையணி சார்பில் திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

தேவையானவற்றின் சுருக்கம் கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது:

| கூறு இல | உருப்படி இல. | உருப்படி விபரம் | அளவு (அலகுகள்) |
|---|---|---|---|
| கூறு A | 01 | மேசைக் கணினிகள் - Basic | 197 |
| | 02 | மேசைக் கணினிகள் - High End | 02 |
| | 03 | Computer Monitors | 300 |
| கூறு B | 04 | மடிக்கணினிகள் | 08 |
| | 05 | கறுப்பு வெள்ளை அச்சுப்பொறிகள் | 13 |
| | 06 | 03 in 01 அச்சுப்பொறிகள் | 06 |
| | 07 | நிழல் பிரதி இயந்திரங்கள் | 03 |
| | 08 | Firewall | 01 |

எந்த ஒரு ஒற்றைக் கூறு அல்லது இரு கூறுகளுக்காகவும் விலைக்கேட்புக்கு விலைமனுதாரர்கள் அனுமதிக்கப்படுவர். ஒவ்வொரு கூறுகளும் வெவ்வேறாக மதிப்பிடப்படும். கூறு ஒன்றில் உள்ள அனைத்து உருப்படிகள் மற்றும் ஒவ்வொரு உருப்படியின் மொத்த அளவுக்கும் விலைமனுதாரர் கூறுவிலையிடுதல் வேண்டும். பகுதி அளவான விலைக்கேட்பு பதில் அளிக்கப்படாததாக கருதி நிராகரிக்கப்படும். தேவையான விரிவான விபரம் மற்றும் விபரக்குறிப்புகள் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளது.

தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படுவதோடு அது இலங்கையின் பெறுகை வழிகாட்டலினால் நிர்வகிக்கப்படும் என்பதோடு விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகைமை மற்றும் தகுதித் தேவைகளை பூர்த்தி செய்த அனைத்து விலைமனுதாரர்களுக்கும் திறந்திருக்கும்.

ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, இல. 420, மேலதிகப் பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் நிதி), திரு ஆர். நிஷாந்த புஷ்பகுமார - AAL, இடமிருந்து மேலதிக விபரங்களைப் பெறலாம் என்பதோடு மேலுள்ள முகவரியில் தேசிய இளைஞர் படையணியின் தலைமை அலுவலகத்தில் 2024.10.03 ஆம் திகதி தொடங்கி வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும். தொலைபேசி: 0112690294, மின்னஞ்சல்: procurement@youthcorps.lk. பரீட்சிக்கும் நோக்கத்திற்கு மாத்திரம் விலைமனு ஆவணங்கள் தேசிய இளைஞர் படையணி இணையதளத்தில் (https://youthcorps.lk/) கிடைக்கப்பெறும்.

மீளளிக்கப்படாத கட்டணமாக பதினாறாயிரம் இலங்கை ரூபாவை (இ.ரூபா 16,000.00) செலுத்தி 2024.10.03 ஆம் திகதி தொடக்கம் 2024.10.23 ஆம் திகதி வரை வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, இல. 420இல் தேசிய இளைஞர் படையணியின் அலுவலகத்தில் இருந்து எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.

விலைமனுதாரர்கள் பங்கேற்க சாத்தியமுடைய விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு மேலுள்ள முகவரியில் தேசிய இளைஞர் படையணியின் அலுவலகத்தில் 2024.10.11 ஆம் திகதி 11.00 மணிக்கு (மு.ப. 11) இடம்பெறும். ஒவ்வொரு விலைமனுதாரரின் அதிகபட்சம் 2 பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

விலைமனுக்களை 2024.10.24 ஆம் திகதி 11 மணி (மு.ப. 11) அல்லது அதற்கு முன்னர் கிடைப்பதற்கு தலைவர், தேசிய இளைஞர் படையணியின் திணைக்கள பெறுகைக் குழு (பாரிய அளவானது), இல. 420, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவது அல்லது சேர்த்தல் வேண்டும். விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின்னர் பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகளின் முன் கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, இல. 420, தேசிய இளைஞர் படையணியில் உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் “அசல்” மற்றும் “பிரதி” என முறையாகத் தயாரிக்கப்பட்ட கடித உறைகளில் “அசல்” மற்றும் “பிரதி” என வெவ்வேறாக முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறைகளில் இடுதல் வேண்டும். அந்த கடித உறைகளில் உள்ளடக்கப்பட்ட அசல் மற்றும் பிரதி பின்னர் ஒற்றை கடித உறையில் இடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் மற்றும் மின்னணு விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது என்பதோடு நிராகரிக்கப்படும்.

அனைத்து விலைமனு ஆவணங்களும் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்க விலைமனு பிணையைக் கொண்டிருத்தல் வேண்டும். இரு கூறுகளுக்கு விலைக்கேட்பை மேற்கொள்ளும் விலைமனுதாரர்கள் பின்வருமாறு ஒவ்வொரு கூறுகளுக்காகவும் வெவ்வேறாக விலைமனு பிணைகளை வழங்கல் வேண்டும். அது 2025.02.19 ஆம் திகதி வரை செல்லுபடியான கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, இல. 420, தேசிய இளைஞர் படையணி, தலைவரின் பெயருக்கு வழங்குதல் வேண்டும்.

| கூறு இல. | உருப்படி இல. | விலைமனு பிணை தொகை (ரூபா) |
|---|---|---|
| A | 1,2 மற்றும் 3 | 500,000.00 |
| B | கூறு 4,5,6,7 மற்றும் 8 | 115,000.00 |

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியில் இருந்து 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

விலைமனுக்களை தயாரிப்பது அல்லது சமர்ப்பிப்பதுடன் தொடர்புபட்டு விலைமனுதாரர்களால் ஏற்படும் எந்த ஒரு செலவு அல்லது எந்த ஒரு இழப்புக்கும் தேசிய இளைஞர் படையணி பொறுப்பேற்காது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (பாரிய அளவானது)**
**தேசிய இளைஞர் படையணி**
**இல. 420, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07**
**2024.10.03**

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

### குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

## விலைமனு கோரல்

### குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு 75 கணினிகளை (Desktop Computers) வழங்கல், ஒப்படைத்தல், பொருத்துதல் மற்றும் பராமரிப்புக்காக வழங்குநர் ஒருவரை தெரிவுசெய்தல்

### ஒப்பந்த இல.: DIE/PRO/06/2024/12

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் சார்பில் திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு 75 கணினிகளை (Desktop Computers) வழங்கல், ஒப்படைத்தல், பொருத்துதல் மற்றும் பராமரிப்புக்காக தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் இந்த விலைமனுக் கோரல் நடாத்தப்படும்.

இதற்காக மீளளிக்கப்படாத ஆறாயிராம் ரூபா (ரூபா. 6000.00) கட்டணத்தைச் செலுத்தி பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, “சுஹுருபாயா”, 5 ஆம் மாடியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் பிரதிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடம் எழுத்துமூல கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் 2024.10.03 ஆம் திகதி முதல் 2024.10.22 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும். கட்டணம் காசாக மாத்திரம் செலுத்தப்படல் வேண்டும்.

இதில் ஆர்வமுள்ள மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை தொலைபேசி இல.: 011 - 2101559 க்கு அழைக்க முடியும். விலைமனு ஆவணங்களை எவ்வித கட்டணமும் இன்றி 2024.10.03 ஆம் திகதி முதல் 2024.10.22 திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு வருகைத் தந்தோ அல்லது இணையதளத்திலோ **(www.immigration.gov.lk)** பரீட்சிக்க முடியும்.

பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் “மூலப் பிரதி” மற்றும் “இணைப்பிரதி” என தனித்தனியாக கடித உறையிலிட்டு அந்த உறைகளை ஒரு உறையிலிட்டு முத்திரையிட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2024.10.23 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாக சமுகமளித்து 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அதற்காக வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் இடுதல் வேண்டும். விலைமனு சமர்ப்பிக்கப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் IFB இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுதாரர்களினால் சமர்ப்பிக்கப்படும் விலைமனு, விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியிலிருந்து தொண்ணூற்றொரு (91) நாட்களுக்கு அல்லது ஏதேனுமொரு நீடிக்கப்படும் காலப்பகுதிக்கு செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் அழைக்கப்பட்டு முடிந்தவுடன் சமுகமளிப்பதற்கு விருப்பத்தைத் தெரிவித்திருந்த விலைமனுதாரர்களினது பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்**
**திணைக்கள கொள்முதல் குழு,**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,**
**“சுஹுருபாயா”,**
**05 ஆம் மாடி,**
**ஸ்ரீ சுபூத்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**

விலைமனு முன்சந்திப்புக் கூட்டமொன்று 2024.10.11 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு “சுஹுருபாயா”, 5 ஆம் மாடியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தில் நடைபெறும்.

**தலைவர்**
**திணைக்கள கொள்முதல் குழு,**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்,**
**“சுஹுருபாயா”,**
**05 ஆம் மாடி,**
**ஸ்ரீ சுபூத்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**

The Housewives’ companion
Classifieds on
Daily News

www.adz.lk
it's what you want

# தேசிய மனநல நிறுவனம்
# முல்லேரியா புதிய நகரம்

## விலைக்கோரலுக்கான அழைப்பு

01. தேசிய மனநல நிறுவனத்தின் சார்பில் பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவரினால் பின்வரும் உருப்படிகளைக் கொள்வனவு செய்வதற்காக முன் தகைமைகளைக் கொண்ட விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | உருப்படி | அளவு | பெறுகை இலக்கம் |
|---|---|---|---|
| 01 | சீலிங் மின் விசிறி | 115 | NIMH/ACC/FB/1/11/24 |

02. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் விலைக்கோரல் இடம்பெறும்.

03. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் விலைக்கோரல் ஆவணங்களை 2024.10.23ஆம் திகதி வரையான அரச அலுவலக வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை முல்லேரியா புதிய நகரம், தேசிய மனநல நிறுவனத்தின் கணக்கிடல் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைக்கோரல் ஆவணங்களை 2024.10.23ஆம் திகதி வரையில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 2.30 மணி வரைக்கிடையில் தலைவர், பிராந்தியப் பெறுகைக் குழு, தேசிய மனநல நிறுவனம் எனும் பெயரில் குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் செய்யப்படும் எழுத்து மூலமான வேண்டுகோள் மற்றும் மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை (ரூ. 1500.00) திணைக்களத்தின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்தியதன் பின் பெற்றுக்கொள்ளலாம்.

05. விலைக்கோரல் பிணை முறியை விலைக்கோரல் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்களில் காட்டப்பட்டுள்ள பெறுமதி மற்றும் செல்லுபடியாகும் திகதி வரையில் சமர்ப்பித்தல் வேண்டும். அதை ரொக்கப் பணமாகச் செலுத்துவதானால் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும். விலைமனுக்களுடன் விலைக்கோரல் பிணை முறி சமர்ப்பிக்கப்படாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

06. பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறு உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து மீண்டும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் **"சீலிங் மின் விசிறிகளைக் கொள்வனவு செய்தல்"** எனவும் மற்றும் பெறுகை இலக்கத்தையும் குறிப்பிட்டு 2024.10.24ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அன்றைய தினமே (2024.10.24) பி.ப. 2.00 மணிக்கு திறக்கப்படும் என்பதுடன் இதில் நீங்கள் அல்லது உங்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

07. விலைக்கோரல் படிவங்கள் தொடர்பிலான மேலதிக தகவல்களை 0112-578234 (நீடிப்பு 406 / 404) எனும் தொலைபேசி இலக்கத்தில் தேசிய மனநல நிறுவனத்தின் கணக்காளரைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். விலைக்கோரல் படிவங்கள் தொடர்பான தீர்மானத்தை எடுக்கும் உரிமையை பிராந்திய பெறுகைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் இந்த அறிவித்தலில் அல்லது விலைக்கோரல் மாதிரிகளில் குறிப்பிடப்பட்ட அல்லது குறிப்பிடப்படாத இந்த பெறுகை விடயங்களுக்கு இயைபான எந்தவொரு விடயம் தொடர்பில் தீர்மானத்தை மேற்கொள்ளும் அதிகாரத்தை தேசிய மனநல நிறுவனத்தின் பணிப்பாளர் கொண்டுள்ளார்.

08. விலைமனுக்களைத் தயாரித்தல் தொடர்பில் ஏற்படும் எந்தவொரு செலவுகளுக்காகவும் பெறுகைக் குழுவின் தலைவர் பொறுப்புகூற மாட்டார்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**தேசிய மனநல நிறுவனம்,**
**முல்லேரியா புதிய நகரம்.**

# தேர்தல் ஆணைக்குழு
## அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கான வசதிகள்
## பாராளுமன்றத் தேர்தல் — 2024.11.14

**அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு எதிர்பார்க்கும், அதற்குத் தகுதிபெற்றுள்ள அரச அலுவலர்கள் / பாதுகாப்புப் பிரிவுகளின் அலுவலர்களுக்கு விடுக்கப்படும் அறிவித்தல்**

1. அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பித்தல் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை, தற்போது அனைத்து அமைச்சுக்களுக்கும், திணைக்களங்களுக்கும், ஆணைக்குழுக்களுக்கும், மாகாண சபைகளுக்கும், நியதிச்சட்ட கூட்டுத்தாபனங்களுக்கும் சபைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
2. 2024.11.14 ஆந் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலின்போது தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்திக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் அனைத்து அரச அலுவலர்கள்/ஊழியர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், இலங்கை போக்குவரத்துச் சபையின் அலுவலர்கள்/ஊழியர்கள், அஞ்சல் திணைக்களத்தின் அலுவலர்கள்/ஊழியர்கள், புகையிரதத் திணைக்களத்தின் அலுவலர்கள்/ஊழியர்கள், முப்படைகளினதும் பொலிஸ் திணைக்களத்தினதும் முனைப்பான பாதுகாப்புச் சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள சிவில் பாதுகாப்புப் படையணியின் அங்கத்தவர்கள் மற்றும் சிறைச்சாலைத் திணைக்களத்தின் அலுவலர்கள்/ஊழியர்களும் இத்தேர்தலின்போது அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்குத் தகுதி பெறுவார்கள் என்பதுடன், அஞ்சல் மூலம் வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் ஏற்றுக்கொள்ளப்படும் காலம், 2024.10.08 ஆந் திகதி நள்ளிரவு 12.00 மணியுடன் முடிவடைகின்றதென்பதை அறியத் தருகின்றேன்.
3. அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்கள், அஞ்சல் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை தனிப்பட்ட முறையில் பரீட்சித்துப் பார்த்து விண்ணப்பதாரரின் ஆளடையாளம் பற்றிய ஐயம் நீங்கிய பின் விண்ணப்பத்தை அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு அத்தாட்சிப்படுத்திய விண்ணப்பங்கள், இயன்றளவு உடனடியாக வாக்காளரின் வாக்குப் பதிவு மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர்/மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்கு கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி மீண்டும் நீடிக்கப்பட மாட்டாது என்பது வலியுறுத்தப்படுகிறது. அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி இரண்டு நாட்களில் அத்தாட்சிப்படுத்தும் விண்ணப்பங்களை அஞ்சலிடுவதற்காக ஒப்படைப்பதற்குப் பதிலாக, மிக சமீபத்திலுள்ள மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்திற்கு நேரில் சென்று ஒப்படைப்பது உகந்ததென்பதை தயவுசெய்து கவனத்திற்கொள்ளவும்.
4. அஞ்சல் மூல வாக்கு விண்ணப்பங்களை பூரணப்படுத்துவதற்குத் தேவையான 2024-(1)CR தேருநர் இடாப்புத் தகவல்களை தேர்தல் ஆணைக்குழுவின் இணையதளத்தில் (www.elections.gov.lk) சஞ்சரிப்பதன் மூலமும், 1919 என்ற இலக்கம் ஊடாக அரசாங்க தகவல் மையத்துடன் தொடர்புகொள்வதன் மூலமும் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கு மேலதிகமாக, தேவைப்படும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு 2024–(1)CR தேருநர் இடாப்புக்கள் பின்வரும் இடங்களிலும் வெளிக்காட்டி வைத்திருக்கப்படும்:-
   - ❖ அனைத்து மாவட்ட செயலகங்களிலும் (கச்சேரிகளில்)
   - ❖ அனைத்து மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களிலும்
   - ❖ அனைத்து பிரதேச செயலகங்களிலும்
   - ❖ அனைத்து கிராம அலுவலர் அலுவலகங்களிலும்

   குறித்த அதிகார இடப்பரப்பிற்குரிய வாக்கெடுப்புப் பிரிவின் தேருநர் இடாப்பு
5. மேலே குறிப்பிடப்பட்ட இடங்களுக்கு மேலதிகமாக,
   - * அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 07.
   - * தொழில் திணைக்களம், தொழில் செயலகம், நாராஹேன்பிட்ட, கொழும்பு 05.
   - * கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல.
   - * பதிவாளர் நாயகம் திணைக்களம், இல. 243/3/ஏ, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
   - * அஞ்சல் தலைமையகம், டீ.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10.
   - * கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சு, மாளிகாவத்தை.
   - * நகர அபிவிருத்தி அதிகாரசபை, செத்சிறிபாய கட்டம் I அலுவலக கட்டிடத்தொகுதி, பத்தரமுல்ல என்ற இடத்தில், கொழும்பு மாவட்டத்தின் அரச அலுவலகக் கட்டிடத்தொகுதிகளில் தேருநர் இடாப்புத் தகவல்களை கணினியின் துணையுடன் விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**பாராளுமன்றத் தேர்தலுக்காக அஞ்சல் வாக்களிப்பதற்கு தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள அதேபோல் கடந்த சனாதிபதித் தேர்தலின்போது அஞ்சல் வாக்கு விண்ணப்பித்த அனைவரும் இத்தேர்தலுக்கு மீண்டும் தமது அஞ்சல் வாக்கு விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பது கட்டாயமானது என்பது வலியுறுத்தப்படுகிறது.**

ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு

**(தேர்தல் ஆணைக்குழு சார்பாக)**
**தேர்தல் ஆணைக்குழு,**
**சரண மாவத்தை,**
**இராஜகிரிய.**
**2024.10.01**

# விலைமனுக்கோரல்

**வ.ப சுயாதீன தொலைக்காட்சி சேவை**

**REILLO CMD MPW300 120KVA UPS கருவிகளுக்கான 09AH/12V (SMF) VRLA**

**680 UPS பெட்றிகளை கொள்வனவு செய்தல்.**

**விலை மனு இலக்கம் ITN/Q/53/2024**

வ.ப சுயாதீன தொலைக்காட்சி சேவையின் கொள்முதல் குழுவின் தலைவரினால் REILLO CMD MPW300 120KVA UPS கருவிகளுக்கு 09AH/12V (SMF) VRLA 680 UPS பெட்றிகளை கொள்வனவு செய்வதற்காக உற்பத்தியாளர்கள்/அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள், அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலை மனு கோரப்படுகின்றது.

வ.ப சுயாதீன தொலைக்காட்சி சேவையின் முகாமையாளர் (கொள்முதல்) இற்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுப்பது மற்றும் மீள செலுத்தப்படாத 5900 ரூபா வரியுடன் கூடிய கட்டணத்தை செலுத்தி குறித்த விலைமனுக்களை 2024 ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி பிற்பகல் 3 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு வ.ப சுயாதீன தொலைக்காட்சி சேவை www.itn.lk எனும் இணையதளத்தில் பார்க்கலாம்.

**தலைவர்,**
**கொள்முதல் குழு,**
**வ.ப சுயாதீன தொலைக்காட்சி சேவை,**
**விக்ரமசிங்கபுர,**
**பத்தரமுல்லை.**

## 2025ம் ஆண்டிற்காக வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

### ஹோமாகம பிரதேச சபை

2025ம் ஆண்டிற்காக வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் சம்பந்தமாக 2024.10.01ம் திகதிய பத்திரிகைகளில் பிரசுரமான விளம்பரங்களுடன் சம்பந்தப்பட்ட வகுதி இல. 01 - பொருட்கள்/ வகுதி இல. 02 - சேவைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உருப்படிகளுக்கு மேலதிகமாக, கீழ்க்காணும் உருப்படிகளும் அதற்காக உள்ளடக்கப்பட வேண்டியுள்ளதாக தெரிவிப்பதுடன், அதன் பிரகாரம் குறித்த பதிவு செய்தல் விடயங்களை மேற்கொள்ள முடியும் என மேலும் தெரிவிக்கிறேன்.

**1 - வகுதி - பொருட்கள் வழங்குதல்**
**உருப்படி இலக்கம்**

44 - அலுவலக காகிதாதிகள் வழங்குதல்
45 - பல்வேறு அளவிலான கருங்கல், ஆற்று மணல், மண்வகைகள் உட்பட கனிப்பொருட்களை வழங்குதல்.
46. சீமெந்து சார்ந்த உற்பத்திகள் வழங்குதல் (கொங்றீட் குப்பைத் தொட்டி மற்றும் ஹியூம் பைப் உட்பட)
47. கோலாஸ் மற்றும் திரவதார் வழங்குதல்
48. வீதி விளக்கு பராமரிப்பு துணைப்பாகங்கள் வழங்குதல்

**2 - வகுதி - சேவை வழங்குதல்**
**உருப்படி இலக்கம்**

55. வாகனங்களை வாடகை அடிப்படையில் வழங்குதல்
56. கனரக இயந்திராதிகளை வாடகை அடிப்படையில் வழங்குதல். (எஸ்கவேட்டர், மோட்டர் கிரேடர், பெக்கோ லோடர் உட்பட)
57. நிர்மாண மற்றும் பராமரிப்பு இயந்திரங்களை வாடகை அடிப்படையில் வழங்குதல் (சங்கிலி வாள், பிரேக்கர் உட்பட சகல பராமரிப்பு உபகரணங்கள்)

**கே.பீ.டீ. குணதிலக்க,**
**செயலாளர், அதிகாரம் மற்றும் செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**பிரதேச சபை, ஹோமாகம**

# இலங்கை புகையிரத சேவைகள்
## விலைமனுக்கோரல்

**இலங்கை புகையிரதம் மாளிகாவத்தை பணியிடத்திற்கு EN 45 E1 தண்டவாளங்களுக்கு பொருத்தமான 5000 எண்ணிக்கையிலான LESS HIGH CONCRETE SLEEPERS கொள்முதல்**

**IFB இலக்கம் - SRS F.8060**

1. கொழும்பு இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள கொள்வனவுக் குழுவின் தவைரினால் மாளிகாவத்தை பணியிடத்திற்கு EN 45 E1 தண்டவாளங்களுக்கு பொருத்தமான 5000 எண்ணிக்கையிலான LESS HIGH CONCRETE SLEEPERS வழங்குவதற்காக வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் / வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
2. கேள்விகோரல் **தேசிய போட்டி நடைமுறை மூலம் நடத்தப்படும் (NCB)**
3. மேலதிக தகவல்கள் மற்றும் மனு ஆவண பரிசீலனையினை **2024.10.03** ஆம் திகதி **2024.11.04** ஆம் திகதி வேலைநாட்களில் **மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 வரை** கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் செய்ய முடியும்.

   **பிரதிப் பொது முகாமையாளர் (கொள்முதல்),**
   **புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,**
   **ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.**
   **தொலைபேசி இல : +94(11) 2438078, அல்லது +94(11) 2436818**
   **தொலைநகல் இல : +94 (11) 2432044**
   **மின்னஞ்சல் : srs.slr@gmail.com**
   **இணையத்தளம் : www.railway.gov.lk**

4. மனுதாரர், இலங்கை **புகையிரத சேவைக்கு 5000 இற்கும் அதிகமான CONCRETE SLEEPERS** வழங்கியிருக்க வேண்டும் அல்லது **ரூ.50 மில்லியன் ரூபாய்க்கு** மேல் மதிப்புள்ள முன் அழுத்தப்பட்ட கொன்கிரீட் கம்பங்களை (pre-stressed Concrete Beams) வழங்கியிருக்க வேண்டும். இல்லையெனில் கடந்த (05) ஐந்து ஆண்டுகளில் **ரூ.500 மில்லியன் ரூபாய்க்கு** குறையாத கொன்கிரீட் கம்பங்களை வழங்கியமைக்கான விலைப்பட்டியலிடப்பட்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள மனுதாரர்கள் இலங்கை புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவில் மீளச்செலுத்தப்படாத **ரூ.29,000/-** கொள்முதல் கட்டணத்தை செலுத்தி **2024.10.03** ஆம் திகதி முதல் **2024.11.04** ஆம் திகதி **பி.ப.3.00** மணிக்கு அலுவலகத்தில் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
6. அனைத்து மனுக்களுக்கும் மனுப் பாதுகாப்புடன் இருத்தல் வேண்டும். மனுப் பாதுகாப்புத் தொகையாக **ரூ.1,600,000.00** இருத்தல் வேண்டும், மேலும் இலங்கையில் இயங்கும் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமாக இருத்தல் வேண்டும்.
7. மனுக்கள் **2024.11.05** ஆம் திகதி **பி.ப.2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்** கீழே உள்ள முகவரியில் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றலாம். தாமதமான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

**தலைவர்,**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
**புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10.**

தலைவர்,
**திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**
கொள்முதல் இல : **SRS/F.8060**

SELACINE

# பொது மன்னிப்புக் கோரல்

இல. 174-1/1, மொஹமட் செயின் மாவத்தை, கொழும்பு 12 எனும் முகவரியில் 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்ட இல. 07 இன் கீழ் PV 21912 எனும் பதிவிலக்கத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள டன்யோ மெடிக்கல் பிரைவட் லிமிடெட்டைச் சேர்ந்த நாம், வழக்கு இல. 97762/05/23 இன் கீழ் கொழும்பு பிரதான மஜேஸ்ரேட் நீதிமன்றத்தினால், இறக்குமதி சான்றிதழ் மற்றும் தேசிய மருந்தாக்கல் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் அனுமதியின்றி மருத்துவ சாதனங்களை இறக்குமதி செய்திருந்தமைக்காக, 2015 ஆம் ஆண்டின் தேசிய மருந்துப்பொருட்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சட்டத்தின் சரத்து இல. 82(1)ஐ மீறியிருந்தமைக்காக பொது மன்னிப்புக்கோருமாறு தீர்ப்பளிக்கப்பட்டதற்கமைய, குறித்த தவறை மேற்கொண்டமைக்காக இலங்கை ஜனநாயக சோஷசலிச குடியரசின் பொது மக்களிடம் நிபந்தனைகளின்றி பொது மன்னிப்புக் கேட்டுக்கொள்வதுடன், இது போன்ற தவறு இனியும் இடம்பெறாது என்பதையும் உறுதியளிக்கின்றது.

பணிப்பாளர்,
**டன்யோ மெடிக்கல் பிரைவட் லிமிடெட்**

# சிறு விளம்பரம்

**வேலைவாய்ப்பு**

**மோட்டார் வாகனங்கள்**

**113**
**சுசூகி கார்கள்**
**விற்பனைக்கு**

CDB-4187 SUZUKI 2017, CAR கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ.பே. 0711210810/ 0714542958. 066945

**117**
**வேன்கள்**
**விற்பனைக்கு**

250-1904 TOYOTA LH113, 1991, VAN கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ.பே. 0711210810. 066946

**119**
**பஸ்கள், லொறிகள்**
**விற்பனைக்கு**

PS-5594 MAHINDRA MAXIMO, 2012, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ.பே. 0714542958/ 0711210810. 066943

**122**
**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
**விற்பனைக்கு**

YV-0871 BAJAJ - 2012, AAU-8720 BAJAJ - 2014, THREEWHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு - 03. தொ.பே. 0711210810/ 0705999163. 066941

**308**
**வெற்றிடங்கள்**
**சந்தைப்படுத்தல்**

பத்தரமுல்ல, பிரதான தங்க நகை விற்பனையகத்திற்கு அனுபவமுள்ள ஆண்/பெண் விற்பனையாளர்கள் தேவை. 25 வயதிற்குக் குறைந்த பயிற்சி பெற்ற / பெறாத ஊழியர்களும் கவனத்தில் கொள்ளப்படுவர். கணனி அறிவு மேலதிக தகைமையாகும். கூடுதல் சம்பளம் - 0776055340, 0112863763. 066669

**312**
**வெற்றிடங்கள்**
**தொழில் நுட்பம்**

கொழும்பில் அமைந்துள்ள பிரபல நீர்க்குழாய் துணைப் பாகங்கள் நிறுவனமான Allied Trading International (pvt) Ltd நிறுவனத்திற்கு பொதுவான Electriccl வேலை மற்றும் CCTV Repairing & maintenance செய்யக் கூடிய குறைந்தபட்சம் இரு வருட அனுபவம் உடைய ஊழியர்கள் தேவை. கொழும்புக்கு அருகில் உள்ளவர்கள் மாத்திரம் அழையுங்கள். 011 7397777, 076 2129669, 011 2331670 (இல. 301, பழைய சோனகத் தெரு, கொழும்பு -12. 064810

Repeat Your Ad For Better Offers




Daily News Classifieds, the Housewives' companion

## மஹர பிரதேச சபை

# 2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள், சேவை வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2025ஆம் வருடம் முழுவதும் பின்வரும் உருப்படிகளுக்காக வழங்குநர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 2024-10-10ஆம் திகதி வரை பதிவு செய்துகொள்ளப்படும். அதன் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**(அ) வழங்கல்கள்**

01. வீதி வெளிச்சத்திற்குத் தேவையான துணைப்பாகங்கள் வழங்குதல்
02. அலுவலக உபகரணங்கள் மற்றும் மரத் தளபாடங்கள் வழங்குதல்
03. காகிதாதிகள் வழங்குதல்
04. கணனி மற்றும் கணனி துணைப்பாகங்கள் வழங்குதல்
05. குப்பை வண்டிகள், குப்பைகளை கழுவும் உபகரணங்கள் மற்றும் கிருமிநாசினித் திரவங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல்
06. கட்டிடப் பொருட்கள் வழங்குதல் (செங்கல், புளொக் கல், சீமெந்து, நிறப்பூச்சு)
07. கைத்தொழில் கருவிகள் மற்றும் வீதி உபகரணங்கள் வழங்குதல்
08. சீருடைத் துணிகள் மற்றும் துணைப்பாகங்கள் வழங்குதல்
09. நூலகப் புத்தகங்கள், பத்திரிகைகள், விளையாட்டு உபகரணங்கள் மற்றும் விருதுகள் வழங்குதல்
10. அறிவித்தல் பலகை வழங்குதல்
11. கொங்கிறீட் எல்லைக் கற்கள், எல்லை தூண்கள், கொங்கிறீட் கொம்போஸ்ட் தொட்டிகள் வழங்குதல்
12. அனைத்து வகையான ஹியூம் குழாய்கள் வழங்குதல்
13. நீர்க்குழாய் துணைப்பாகங்கள் வழங்குதல்
14. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் வழங்குதல்
15. வீதிகள் அமைக்கும் பொருட்கள் வழங்குதல் (கருங்கல், மணல், சீமெந்து, பலகைகள், 80/100 தார், CSS1, CRS1, கோலாஸ்)

    **கவனிக்கவும்:** வீதிகள் அமைப்பதற்கான பொருட்களை அதிகாரப் பிரதேசத்தின் வீதி பராமரிப்புப் பிரிவு, வேலைத்தளம் மற்றும் பராமரிக்கும் வீதிகளின் தேவைப்பாட்டின் பிரகாரம் வழங்குவதற்கு இயலுமானவர்களாகவிருத்தல் வேண்டும்.
16. உத்தியோகபூர்வ முத்திரைகள் மற்றும் திகதி முத்திரைகள் வழங்குதல் (இறப்பர், பொலிமர்)
17. விசேடத் தேவைகளுக்கான உணவு வழங்குதல்
18. டயர், டியூப் வழங்குதல் (டயர் சேவை வழங்குவதற்கு நிறுவனத்திற்கு அண்மையிலுள்ள இயலுமை உள்ள நிறுவனமாக இருத்தல் வேண்டும்)
19. பெற்றரிகள் வழங்குதல்

**(ஆ) சேவைகள்**

01. அச்சிடல் சேவைகளை வழங்குதல்
02. புத்தகம் கட்டும் சேவைகளை வழங்குதல்
03. அலுவலக உபகரண திருத்தவேலைகளை செய்தல் மற்றும் சேர்விஸ் சேவைகளை வழங்குதல்
04. வாடகை அடிப்படையில் வாகனங்கள் வழங்குதல் (லொறி, டிப்பர், டிரக்டர், முச்சக்கர வண்டிகளை எரிபொருள் மற்றும் சாரதிகள் சகிதம் வழங்குவதற்கு இயலுமானவர்களாக இருத்தல் வேண்டும்.)
05. வாடகை அடிப்படையில் வீதிப் பராமரிப்பு இயந்திரோபகரணங்களை வழங்குதல் (வீதிகள் அழுத்தும் இயந்திரம், மோட்டார் கிரேடர், பெகோ லோடர், எக்ஸ்கவேட்டர் இயந்திரம், கொங்கிறீட் வெட்டும் இயந்திர இயக்குநர், எரிபொருள் மற்றும் சாரதிகள் சகிதம் வழங்குவதற்கு இயலுமானவர்களாக இருத்தல் வேண்டும்.)
06. பயிற்சி பெற்ற மற்றும் பயிற்சிபெறாத தொழிலாளர் சேவைகளை வழங்குதல்
07. வாகன திருத்தவேலை சேவைகளை வழங்குதல்
08. வாகனங்களை சேர்விஸ் செய்தல் (டிரக்டர், கெப், லொறி)
09. மோட்டர் கிரேடர், பெகோ இயந்திரம், வீதி அழுத்தும் இயந்திரங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
10. முச்சக்கரவண்டி திருத்தவேலைகளைச் செய்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் (டேவிட் பீரிஸ் மோட்டார் நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற திருத்தவேலை மற்றும் சேர்விஸ் முகவர் நிறுவனமாகவிருத்தல் வேண்டும்.)
11. பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல்
12. நொத்தாரிஸ் மற்றும் சட்ட சேவைகளை வழங்குதல் (மேல் நீதிமன்றத்தில், மாவட்ட நீதிமன்றத்தில், நீதவான் நீதிமன்றத்தில் சேவைகளை வழங்கக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்)
13. நில அளவை சேவைகளை வழங்குதல்
14. தகனச்சாலை திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
15. பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் உள்ள அபாயகரமான மரங்களை வெட்டி அகற்றும் சேவைகளை வழங்குதல்
16. புகைப்படம் எடுத்தல் மற்றும் வீடியோ பதிவு செய்யும் சேவை வழங்குதல்
17. மொழிபெயர்ப்பு சேவைகளை வழங்குதல்
18. மின்சார துணைப்பாகங்கள் மற்றும் மின்சார சேர்க்கியூட் தயாரித்தல் மற்றும் திருத்தவேலைகள் செய்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்
19. CCTV கமரா முறைமைகளை அமைத்தல் மற்றும் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
20. மின் பிறப்பாக்கி இயந்திர திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்

**(இ) சிவில் ஒப்பந்தக்காரர்களாக சேவை வழங்குதல்**

| பணத்தொகை எல்லை | பதிவுக் கட்டணம் (ரூபா) |
|---|---|
| ரூபா 1.00 முதல் 1,000,000.00 வரை | 1,000.00 |
| ரூபா 1,000,001.00 முதல் 5,000,000.00 வரை | 2,000.00 |
| ரூபா 5,000,000.00 இற்கு மேல் | 3,000.00 |

நிறுவனப் பதிவுச் சான்றிதழ் சகிதம் இயலுமை உள்ள தகைமை வாய்ந்த நிறுவனமாகவிருத்தல் வேண்டும். (இயலுமையை உறுதி செய்வதற்கான ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்) மேற்கூறப்பட்ட வழங்கல்கள், சேவை மற்றும் ஒப்பந்தங்களுக்கான இயலுமை உள்ள நிறுவனங்கள் மற்றும் நபர்கள் கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தம்மால் சுயமாகத் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் பதிவுக் கட்டணம், வியாபாரப் பெயர்ப் பதிவுச் சான்றிதழ் மற்றும் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களின் பிரதிகளுடன் தலைவர், மஹர பிரதேச சபை, பஹல கரகஹமுன, கடவத்த எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது மேற்கூறிய முகவரியில் உள்ள மஹர பிரதேச சபையின் தலைமை அலுவலகத்திற்கு வருகை தந்து பதிவு செய்துகொள்ளலாம்.

விண்ணப்பப் படிவங்களை தபாலில் அனுப்பும்போது, 2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்ந்தக்காரர்களைப் பதிவுசெய்தல் என கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

வழங்கல் மற்றும் சேவைகளுக்கான ஒரு உருப்படிக்கு 1,000.00 ரூபா கட்டணம் மற்றும் ஒப்பந்தங்களுக்காக பண வரையறையின் பிரகாரம் மேற்கூறிய வகையிலான கட்டணத்தை செலுத்துதல் வேண்டும் என்பதுடன் ஒன்றுக்கு மேற்பட்ட உருப்படிகளுக்கு பதிவு செய்துகொள்வதானால் ஒவ்வொரு உருப்படிக்காகவும் வெவ்வேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் கட்டணங்களையும் வெவ்வேறாகச் செலுத்துதல் வேண்டும்.

பதிவுக் கட்டணத்தை ரொக்கப் பணமாக அல்லது காசோலை மூலம் செலுத்தலாம் என்பதுடன் காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

வழங்குநர்கள், சேவை வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்துகொள்ளும் சகல நிறுவனங்களும் கடன் அடிப்படையில் சேவையை வழங்குவதற்கு இணங்க வேண்டும்.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

**மஹர பிரதேச சபை**

**வழங்குநர்கள், சேவை வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் 2025**

01. பதிவு செய்யும் உருப்படி இலக்கம் (வழங்கல் பொருள்/ சேவை/ ஒப்பந்தம்) (அ)/(ஆ)/(இ)................................
02. வியாபாரத்தின் பெயர்:
03. உரிமையாளரின் பெயர்:
04. தேசிய அடையாள அட்டை இலக்கம்:
05. முகவரி:
06. வியாபாரப் பதிவுச் சான்றிதழின் இலக்கம் (பிரதியை இணைத்தல் வேண்டும்):
07. CIDA பதிவிலக்கம்: (பிரதியை இணைத்தல் வேண்டும்):
08. நிறுவனத்தின் பெயர் பதிவிலக்கம் (பிரதியை இணைத்தல் வேண்டும்):
09. தொலைபேசி இலக்கம் (நிலையானது).................................... (கையடக்கம்)....................
10. தொலைநகல் இலக்கம்:
11. மின்னஞ்சல் முகவரி:
12. வங்கிக் கணக்குத் தகவல்கள்:
13. VAT பதிவிலக்கம் (பிரதியை இணைத்தல் வேண்டும்):
14. வழங்கக்கூடிய அதிகூடிய கடன் எல்லை மற்றும் காலம்:
15. உற்பத்தியாளரா, விநியோகஸ்தரா, தனிநபர் வியாபார உரிமையாளரா என்பது பற்றி:
16. தற்போதைய வாடிக்கையாளர்களின் பெயர்:
17. மேற்கூறிய தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என சான்றுபடுத்துகின்றேன்.

........................................... திகதி:..........................................

விண்ணப்பதாரரின் கையொப்பம் முத்திரை

**எல்.ஏ. மஞ்சுளா சமந்தி,**
**செயலாளர் மற்றும் சபையின் அதிகாரபூர்வ கடமைகளை நிறைவேற்றும் அதிகாரி,**
**மஹர பிரதேச சபை,**
**பஹல கரகஹமுன,**
**கடவத்தை.**
**0112927076**
**2024-10-02.**

# பெறுகை அறிவித்தல்

# நாய்களை மலடாக்கும் நிகழ்ச்சித் திட்டம்

## சுகாதார சேவைத் திணைக்களம்

### சபரகமுவ மாகாணம்

01. சபரகமுவ மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தினால் இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களில் செயற்படுத்தப்படும் நாய்களை மலடாக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக சேவை வழங்குதல் சார்பாக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பதிவு செய்துள்ள நிறுவனங்கள் அல்லது அமைப்புக்களிடமிருந்து சபரகமுவ மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரால் 2024 நவம்பர் 06 மு.ப. 10.00 வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும்.

02. 2024 ஒக்டோபர் 03 முதல் 2024 நவம்பர் 04 வரையான அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் மற்றும் 2024 நவம்பர் 05ஆம் திகதி மு.ப. 9.00 முதல் நண்பகல் 12.00 வரையும் இல. 75, தர்மபால மாவத்த, இரத்தினபுரி என்ற இடத்தில் சபரகமுவ மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் பெறுகை கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும். ஒரு நிறுவனத்திற்கு கேள்விப் பத்திரங்கள் விநியோகிப்பதற்கு அறவிடப்படும் மீளளிக்கப்படாத கட்டணம் ரூ. 5000.00 ஆவதுடன் மீளளிக்கப்படும் கட்டணம் ரூ. 150,000.00 ஆகும் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக குறித்த ரூ 5,000.00 கட்டணத்தை இவ் அலுவலகத்திற்கு செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டுடன் எழுத்து மூல வேண்டுதலை சமர்ப்பித்தல் வேண்டும்.

03. 2024 நவம்பர் 06 மு.ப. 10.00 இற்கு மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் வேளையில் சமுகமளிக்கலாம்.

04. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் மேற்படி 02ம் பந்தியில் குறிப்பிடப்படும் முகவரிக்கு 2024 நவம்பர் 06 மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்

05. கேள்வி ஆவணங்களை எந்தக் கட்டணமும் இன்றியே மாகாண சுகாதார பணிப்பாளர் பணிமனையில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

06. மேலதிக விபரங்களுக்கு இவ் அலுவலகத்தின் பிரதம கணக்காளரை அழையுங்கள் தொ.பே. 045-2222277, 045-2222322

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்**

**இல. 75, தர்மபால மாவத்த,**
**இரத்தினபுரி.**
**2024 ஒக்டோபர் 03ம் திகதி**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் – கொழும்பு

### அவிசாவளை - மாவட்ட பொது வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு முதன்மை திட்டத்தை (Master Plan) தயாரிப்பதற்காக ஆலோசனை சேவையின் பெறுகை

1. அவிசாவளை - மாவட்ட பொது வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு முதன்மை திட்டத்தை (Master Plan) தயாரிப்பதற்கான ஆலோசனை சேவைக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் சார்பாக பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.
2. விலைக்கோரல்கள் ஒற்றைக் கட்ட இரு கடித உறை முறையில் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக இடம்பெறும்.
3. தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் (தனிநபர், நிறுவனம் அல்லது கூட்டு முயற்சி) பின்வரும் தேவைப்பாடுகளுக்கு இணங்குதல் வேண்டும் என்பதுடன் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவர்களாக இருத்தல் வேண்டும்.
   அ. ஆலோசனை நிறுவனம் இலங்கையில் வியாபாரப் பதிவைக் கொண்ட நிறுவனமாகவிருத்தல் வேண்டும்.
   ஆ. கடந்த காலத்தில் இதனையொத்த பணிகளை மேற்கொண்ட உள்நாட்டில் கிடைக்கக்கூடிய கட்டிடக் கலைஞர்கள்.
   இ. கம்பனி / நிறுவனம் சுகாதார சேவைகள் துறையில் அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும் என்பதுடன் சுகாதாரத் துறையில் கடந்த காலத்தில் இதே அளவிலான குறைந்தபட்சம் இரண்டு திட்டங்களையாவது செயற்படுத்தியிருக்க வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்கள் மற்றும் விலைமனுக்களைப் பரீட்சித்துப் பார்த்தல் என்பவற்றை கொழும்பு-10, மாளிகாவத்தை, த.பெ. இல. 1287, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பெறுகைக் குழுவின் தலைவரிடம் மேற்கொள்ளலாம். தொலைபேசி / தொலைநகல் இல. 0112326643.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500.00 ரூபாவை 2024-10-03ஆம் திகதி முதல் 2024-10-16ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பின்வரும் முகவரியிலுள்ள கொழும்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பெறுகைக் குழுத் தலைவருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.
6. விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
7. சகல விலைமனுக்களுடனும் விலைமனுதாரர்களுக்கான அறிவுறுத்தல்களின் 16.2ஆம் வாசகத்தில் குறித்துரைக்கப்பட்ட முகவரகம் ஒன்றினால் வழங்கப்பட்ட 25,000.00 ரூபா தொகைக்கு விலைமனுதாரர்களுக்கான அறிவுறுத்தல்களில் 1ஆம் பிரிவில் உறுதிப்படுத்தப்பட்ட விலைக்கோரல் பிணை முறியொன்றை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் 119 நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
8. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை 2024-10-18ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். பொதுத் தகவல்கள் சகிதம் ''தொழில்நுட்ப முன்மொழிவுகள்'' (கடித உறை 1) மற்றும் ''விலை முன்மொழிவுகள்'' (கடித உறை 2) என இரு கடித உறைகளில் சமர்ப்பித்தல் வேண்டும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் உடனடியாகத் திறக்கப்படும்.
9. மொத்த வடிவமைப்பு காலம் 180 நாட்காட்டி நாட்களாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,**
**த.பெ. இல. 1287,**
**புதிய செயலகக் கட்டிடம்,**
**மாளிகாவத்தை, கொழும்பு-10.**
**தொலைபேசி இல. 011-2326643**
**தொலைநகல் இல. 011-2381258**

OBSERVER adz · வாரமஞ்சரி

**Promotional Rates for Classified Advertisements** (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

**Gampaha District**

Mahara - 011 2 925 168
1474 - H. M. Induka Herath - Adz soon Advertising, 57/D, Kandy Road, Mahara.

Mirigama - 033 22 740 19
1964 - M. D. Mohan Jayalal - No. 219, Pasyala Road, Mirigama.

Veyangoda - 033 22 903 86
1984 - H. M. De Seram - No. 37, Main Street, Veyangoda.

Weliweriya - 077 4 965 266
1986 - K. L. P. Perera - Nilanka Stores, No. 4, New Kandy Road, Weliweriya.

**Kaluthara District**

Panadura - 072 6 267 432
1730 - B. D. P. Perera - Sausiri Adds, No. 121, Horana Road, Mahawila, Panadura.

Panadura - 038 22 324 80
1776 - Mahen Silva - Suwena News and Adds, 28/A, Weeraman Road, Panadura.

Panadura - 038 22 400 60
1819 - G. R. Gunasingha - 467, Media Lick, Main Street, Panadura.

Mathugama - 076 6 589 582
1737 - D. C. S. Lakmal - Janahitha Newspaper Agency - Mathugama.

Ingiriya - 077 9 806 680
1757 - A. D. Nimal Chandra - Chandra Stores, No. 03, Main Street, Ingiriya.

Beruwala - 034 22 775 84
1784 - Upali Weerasingha - Kanthi Book Shop, No. 10, Market Road, Beruwala.

Bandaragama - 071 4 475 504
1785 - Sumith Kumara - Dawasa Book Shop, No. 17, Panadura Road, Bandaragama.

Wadduwa - 077 2 671 013
1850 - Chinthaka Cooray - No. 509, Galle Road, Wadduwa.

Horana - 071 8 863 522
1852 - D. Nandawathi - Add House, No. 262A, Rathnapura Road, Horana.

Bandaragama - 070 2 424 240
1860 - W. A. V. Perera - Nearest Gelanigama Highway Entrance, Kothalawala, Bandaragama.

**Kegalle District**

Mawanella - 071 6 946 452
9113 - D. K. R. Ranasingha - No.132, Main Street, Mawanella.

Kegalle - 077 6 778 481
9119 - M. M. Salgado & Sons - No. 88, Kandy Road, Kegalle.

Mawanella - 077 0 217 854
9131 - P. M. A. Indunil Bandara - Nimalasiri Book Shop, No. 14, Main Street Mawanella.

Kegalle - 0702651515
9145 - J. T. F. Corera - Kandy Road, Kegalle.

Warakapola - 071 7 112 567
9158 - A. A. Ariyawathi - Piumi Book Shop, Bus Satnd, Warakapola.

Ruwanwella - 071 3 117 535
9192 - U. K. D. Ariyawansa - No. 44, Kalyani Book Shop, Main Street, Ruwanwella.

**Rathnapura District**

Sooriyawewa - 076 6 032 171
9345 - M. A. Chaminda Kumara - Chathumi Agencies, Sooriyawewa.

Kuruvita - 077 7 123 149
9371 - Y. M. Roshan Bandara - Yapa Agencies, Kuruvita.

Rathnapura - 071 2 900 035
9377 - G. G. Karunarathne - Karunarathna Brothers, Rathnapura.

Rathnapura - 077 7 221 939
9378 - D. Liyanarachchi - Lake House Media Center, Rathnapura.

Balangoda - 045 22 862 84
9402 - B. K. D. Padmasiri Jinadasa - Jinadasa Trade Center, Balangoda.

Eheliyagoda - 0712362035
9404 - K. A. Premasinghe Kuruppu - Famous Cafe, Eheliyagoda.

Embilipitiya - 0714784294
9449 - K. V. D. Teja Karavita - Queens Agencies, Pallegama, Embilipitiya.

ADZ HOTLINE - 011 2 429 369

CALL - 011 2 429 342/ 343

ஊவா மாகாண கல்வித் திணைக்களம்

# பெறுகை அறிவித்தல்

## ஆரம்ப சிறுவர்களுக்கான யுனிசெப் செயற்றிட்டத்தின் கீழ் கற்பித்தல் உபகரணத்தொகுதிகளை கொள்வனவு செய்வதற்கான கேள்வி கோரல் - 2024

ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரான என்னால் ஆரம்ப சிறுவர்களுக்கான கற்பித்தல் உபகரணத்தொகுதிகள் அண்ணளவாக 90 ஐ கொள்வனவு செய்யும் முகமாக இத்தால் கேள்விகள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படாத மாதிரிப் பத்திரக் கட்டணம் (ரூ.ச) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புக் கட்டணம் (ரூ.ச) | |
|---|---|---|---|---|
| 01 | யுனிசெப் செயற்றிட்டத்தின் கீழ் ஆரம்ப சிறுவர்களுக்கான கற்பித்தல் உபகரண தொகுதிகள் 90 மட்டில் கொள்வனவு செய்தல் | 2000.00 | வங்கிப் பிணை முறி (மத்திய வங்கியில் அனுமதிக்கப்பட்ட) ரூ.75,000.00 | காசாக ரூ.38,000.00 |

02. கேள்விகளை சமர்ப்பிப்பதற்காக தேவையான மாதிரிப் பத்திரங்களை மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் கட்டணங்களை இவ் அலுவலகத்திற்கு காசாக செலுத்திய பின்னர் (சகல கட்டணங்களும் ஏற்கப்படுவது இலங்கையில் செல்லுபடியாகும் தொகையில் மட்டும்) விநியோகிக்கப்படும் பற்றுச்சீட்டை சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

03. கேள்விகள் விநியோகித்தல், ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல் கீழக்காணும் நாட்கள் மற்றும் நேரங்களில் ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.

| | | |
|---|---|---|
| கேள்விகள் விநியோகித்தல் | : | 2024.10.03 முதல் 2024.10.24 பி.ப.12.30 வரை |
| கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் | : | 2024.10.03 முதல் 2024.10.24 பி.ப.2.00 வரை |
| கேள்விகள் திறத்தல் | : | 2024.10.24ம் திகதி கேள்விகள் ஏற்றல் முடிவடைந்தவுடன் |

04. இது பற்றிய மேலதிக விபரங்களை இவ் அலுவலகத்திற்கு வருகை தந்து அல்லது தொ. பே.இல.055-2223184 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**2024.10.02 ம் திகதி**
**ஊவா மாகாண கல்வித் திணைக்களம்**

**ஏ.எச்.ஆர்.அமரதாச**
**ஊவா மாகாண கல்விப் பணிப்பாளர்**

# அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை வங்கி இளைப்பாறியவர்களின் சங்கமும் இணைந்து விசேடத்துவ புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் செப்டெம்பர் 05ஆம் திகதி கைச்சாத்திட்டுள்ளன.





உயர் தரத்திலான மருந்துகளை நியாயமான விலைக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டு செயற்படும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாக நாடு முழுவதிலும் 61 அரச மருந்தகக் கிளைகள் உள்ளன. இந்த மருந்தக வலையமைப்பின் ஊடாக தமது மருந்துகளை கொள்வனவு செய்யும் இலங்கை வங்கியின் இளைப்பாறியவர்களின் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு 6.5% விசேடக் கழிவொன்றை வழங்குவதற்கு இந்த உடன்படிக்கையின் ஊடாக இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் இணைந்துகொண்ட இலங்கை வங்கியின் இளைப்பாறியவர்களின் சங்கத்தின் தலைவர் நிஹால் கமகே அவர்கள் தமது கருத்தை தெரிவிக்கும்போது குணவியல்புகளுடன் மிகவும் சிறந்த மருந்துகளை வழங்கும் இலங்கையில் நம்பிக்கைக்குப் பாத்திரமான நிறுவனமான இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தமது உறுப்பினர்களுக்காக விசேட கழிவை வழங்கியமை தொடர்பாக தமது சங்கத்தின் அனைத்து உறுப்பினர்கள் சார்பாக தமது நன்றிகளை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்திற்கு தெரிவிப்பதாகக் கூறினார்.

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர் தினுஷ தசநாயக்க அவர்கள் தமது கருத்தைத் தெரிவிக்கும்போது அரச மருந்தாக்கல் கூட்டுத்தானம் ஏற்கனவே கர்ப்பிணித் தாய்மாருக்கு, 5 வயதிற்குக் குறைந்த பிள்ளைகளுக்கு, 55 வயதிற்கு மேற்பட்ட வயதானவர்களுக்கு மருந்து பட்டோலைக்காக 5% கழிவு வழங்கப்படுகின்றது என்று கூறினார்.

அதேபோல், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் மேலும் அரச பணியாளர்களுக்கு இவ்வாறான கழிவை வழங்க இயன்றமை தொடர்பாக முகாமைத்துவம் சார்பாக தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். தொடர்ந்து பேசுகையில் தற்போது நாடு முழுவதிலும் 61 அரச மருந்தக கிளைகள் உள்ளதாகவும் எதிர்காலத்தில் தமது கிளை வலையமைப்பை விஸ்தரித்து உயர் தர மருந்துகளை நியாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளும் மக்களின் உரிமையை மேலும் உறுதிப்படுத்துவதாக அவர் தெரிவித்தார்.

அதேபோல், சகல அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் மருந்துகள் நவீன தரத்துடனான ஆய்வுகூடங்களில் மூன்று முறை தரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு குணவியல்புகளுடனான உயர்தர மருந்துகளை மட்டும் சந்தைக்கு வழங்குவதாகவும் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் இந்த செப்டெம்பர் 22ஆம் திகதி தமது 53வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கொழும்பு மாநகர சபை

## விலைக்கோரல்களுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் நகர மண்டபக் கட்டிடத்தின் வெளிப்புறத்தில் வடிவமைக்கப்பட்ட ஒளியமைப்பிற்கான விரிவான வடிவமைப்பு மற்றும் நிறுவலுக்கான விலைமனுக்களை அழைத்தல்.

கொழும்பில் சுற்றுலாவை மேம்படுத்தும் நோக்கில், கொழும்பு மாநகர சபை கொழும்பில் உள்ள வரலாற்று மதிப்புமிக்க கட்டிடங்களை ஒளிரச் செய்வதை ஊக்குவிக்க விரும்புகிறது. ஒரு முன்னோடித் திட்டமாக, நகர அழகியலை மேம்படுத்தும் அதே வேளையில் அதன் வரலாற்று மதிப்பை மிகைப்படுத்துவதற்காக டவுன் ஹால் கட்டிடத்தை இரவில் ஒளிரச் செய்ய கொழும்பு மாநகர சபை விரும்புகிறது.

இதன் மூலம், விலை முன்மொழிவுடன் கொடுக்கப்பட்ட வழிகாட்டுதலின் அடிப்படையில் வடிவமைப்பு முன்மொழிவைச் சமர்ப்பிக்க தகுதியான ஒளியேற்றும் நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

| கேள்வி விடயம் | தகுதிகள் | ஈடுபட்டுள்ள காலப்பகுதி | மீளளிக்கப் படாத கட்டணம் | கேள்விப் பிணை முறியின் பெறுமதி இல. ரூபா | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|
| கொழும்பு மாநகர சபையின் நகர மண்டபக் கட்டிடத்தின் வெளிப்புறத்தில் வடிவமைக்கப்பட்ட ஒளியமைப்பிற்கான விரிவான வடிவமைப்பு மற்றும் நிறுவலுக்கான விலைமனுக்களை அழைத்தல் | உள்நாட்டில் தகைமை பெற்ற மற்றும் கட்டிட ஒளியமைப்பு வடிவமைப்பாளராக அனுபவம்<br><br>கட்டிட வெளிப்புற ஒளியமைப்பில் முன் அனுபவம்<br><br>உபகரணங்களில் கிடைக்கும் தன்மை மற்றும் நீடித்துழைத்தல்<br><br>இதனையொத்த வகையான கட்டிடங்களின் கடந்தகால நடைமுறை செயற்றிறன்<br><br>முன்னைய சேவை ஒப்பந்தம் மற்றும் பராமரிப்பு<br><br>செயற்பாட்டு பணியாளர்களின் பயிற்சி | நிறுவல்களுக்கு மூன்று மாத காலம்<br><br>ஒரு வருட இயக்கம் மற்றும் பராமரிப்பு<br><br>முதலாம் வருடத்தின் பின் வருடாந்த விரிவான பராமரிப்பு ஒப்பந்தம் ஐந்து வருடங்களுக்கு நீடிக்கப்படலாம் | ரூபா 2,000.00 | ரூபா 400,000.00 | தலைமை கட்டிடக் கலைஞர் தொலைபேசி: 0777-715322 |

விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

**முறை 01 - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.**

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

- வட்டார அலுவலகம் 04, இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு-06.
- வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு, மாளிகாகந்த, கொழும்பு 10.

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

iii. இணையதளத்திலிருந்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்கள் பின்வரும் விபரங்களை dirproj@colombo.mc.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும்.

1. நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி
2. தொடர்புகொள்ளும் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி

**முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் ஆவணக் கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் 2024-10-15ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரையில் நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அ. கொடுப்பனவுகளை 2024-10-15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஆ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனு முறி/ பிணை விலைமனுக்கள் 2024-10-16ஆம் திகதி முதல் 2025.05.15ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2025.04.15ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். பாதுகாப்பு வைப்பு ரொக்கப் பணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2024-10-16ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

ஈ. 2024-10-16ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

உ. 2024-10-07ஆம் திகதி கொழும்பு மாநகர சபையின் போக்குவரத்து வடிவமைப்பு மற்றும் வீதிப் பாதுகாப்புப் பிரிவு கூட்ட மண்டபத்தில் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன,**
**மாநகர ஆணையாளர்**
**கொழும்பு மாநகர சபை.**

# பெறுகை அறிவித்தல்

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

### ௨0௨5ஆம் வருடத்திற்கான மருந்துகள், சத்திரசிகிச்சை Dressing உருப்படிகள் மற்றும் சத்திரசிகிச்சை பொருட்களை வழங்குவதற்கான கேள்வி

01. பின்வரும் மருந்துகள், Dressing உருப்படிகள் மற்றும் சத்திரசிகிச்சை பொருட்களை வழங்குவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மு.ப. 10.00 மணி வரை தேசிய போட்டி ரீதியிலான (NCB) கேள்வி கோரலின் கீழ் தகுதி மற்றும் ஆர்வமுள்ள வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறியிடப்பட்ட கேள்விகள் நுகேகொடை, தலபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கோரப்படுகின்றன.

| கேள்வி இல. | பெறுகை விபரங்கள் | | விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் |
|---|---|---|---|
| | **DRUGS** | | 24.10.2024 |
| **Q150(25DR)/24** | **Drugs used in Obstetrics, Gynecology -1**<br>(Anti D Immunoglobulin 300mcg inj. , Ergometrine Maleate 500mcg /1ml inj. , Oxytocin 5IU/1ml inj.) | Lot | |
| **Q152(25DR)/24** | **Drugs used in the treatment of Cardiovascular System - 10**<br>(Dobutamine 250mg / 20ml inj. , Ephedrine HCL 30mg / 1ml inj. , Tranexamic Acid 500mg / 5ml inj.) | Lot | |
| **Q154(25DR)/24** | **Drugs used in the treatment of Diseases in the Respiratory System - 1**<br>(Carbocisteine 500mg cap. , Cetirizine 10mg Tab. , Chlorpheniramine maleate 4mg Tab. , Etofylline with Theophylline Retard 150mg Tab. , Fexofenadine 60mg Tab. , Fexofenadine 120mg Tab. , Fexofenadine 30mg Tab. , Levocetirizine 5mg Tab. , Loratadine 10mg Tab. , Montelukast 10mg Tab. | Lot | |
| **Q155(25DR)/24** | **Drugs used in the treatment of Cardiovascular System – 5**<br>(Losartan Potassium 25mg Tab., Metoprolol SR 25mg Tab., Nicorandil 10mg Tab., Nifedipine SR 10mg Tab., Prazosin SR 2.5mg Tab.,Prazosin SR 5mg Tab., Ranolazine 500mg Tab., Rosuvastatin 10mg Tab., Telmisartan 20mg Tab., Telmisartan 40mg Tab.) | Lot | |
| **Q156(25DR)/24** | **Drugs used in the treatment of Infections - 5**<br>(Ceftazidime 1g injection) | Lot | |
| | **SURGICAL DRESSING ITEMS** | | 24.10.2024 |
| **Q019(25DE)/24** | **Soft Cloth Tape with Liner** 10cm x 10m | Lot | |
| **Q020(25DE)/24** | **IV Infusions** | Lot | |
| | **SURGICAL ITEMS** | | 24.10.2024 |
| **Q018(25SR1)/24** | **Thoracic Catheter**<br>with Trocar Straight 28 Fr<br>with Trocar Straight 32 Fr<br>without Trocar Right Angled 32 Fr<br>without Trocar Stright 28 Fr<br>without Trocar Stright 32 Fr | Lot | |
| **Q019(25SR1)/24** | **Urine Collecting Bag with measured volume meter**<br>**Pressure Monitoring Kit – Double**<br>**Vessel Knife Straight**<br>**Disposible Sucker Handle with Tube 250cm (Sterile)** | Lot | |
| **Q020(25SR1)/24** | **Polyglactin Sutures**<br>No. 1 RB 1/2C 48 mm 90cm<br>No. 2/0 RB 1/2 C 31mm 75 cm<br>No. 0 RB 1/2 C 36mm 75cm<br>**GOR-E Tex suture**<br>CV 4, 91cm , 3/8c , 17mm , DA<br>CV 5,91cm , 3/8c , 13mm , DA | Lot | |
| **Q022(25SR1)/24** | **Intra AorticBalloon Catheter**(34CC, 40CC) | Lot | |
| **Q023(25SR1)/24** | **Y Connectors**<br>1/4” * 1/4” * 1/4”, 3/8” * 3/8” * 3/8”, 3/8” * 3/8” * 1/2”<br>**Straight Connector**<br>1/4 x 1/4, 3/8 x 1/2 | Lot | |
| **Q024(25SR1)/24** | **Haemo Concentrator**<br>**Intra Cardiac Sucker** (Adult)<br>**Level Sensor Pad**<br>**Sampling Line – 200cm** (Male/Male) | Lot | |
| **Q027(25SR1)/24** | **Pressure Monitoring Lines - 200cm** (Male/Female) | Lot | |
| **Q043(25SR2)/24** | **Polypropylene Monofilament/ Blue –**<br>(01) No. 5/0/ 3/8C/Cutting/ 16 mm 75cm,<br>(02) 4/0 Cutting 3/8C 19mm 75cm,<br>(03) 7/0 taper 3/8c 10mm & 60cm,<br>(04) No.01, 1/2C, RB 48mm,<br>(05) 2/0 cutting26m3/8c 75cm,<br>(06) 3/0 cutting 3/8c 24mm 75cm,<br>(07) 5/0 cutting 3/8C 19mm 75cm,<br>Yellow Monofilament Pvdf<br>(08) 4/0 premium revers cutting 45cm,<br>(09) 6/0 premium revers cutting 45cm,<br>(10) 7/0 premium revers cutting 45cm | Lot | 24.10.2024 |

முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை வைத்தியசாலையின் வழங்கல்கள் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் மற்றும் பரீட்சித்துப் பார்க்கலாம் அல்லது பின்வரும் இணையதள இணைப்பிலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இணைப்பு: https://sjgh.health.gov.lk/tenders.php. மேலதிக விபரங்களுக்கு வைத்தியசாலையின் வழங்கல்கள் அதிகாரி - மருத்துவம் அவர்களைத் தொடர்புகொள்ளவும். தொலைபேசி: 0112778624, 0112778610 - நீடிப்பு 3143

02. வைத்தியசாலையால் வழங்கப்பட்ட படிவங்களில் மட்டுமே விண்ணப்பங்களை தயாரித்தல் வேண்டும். வைத்தியசாலையால் வழங்கப்படாத வேறு படிவங்களில் மற்றும் தரப்பட்டுள்ள விலைக்கோரல் நிபந்தனைகளின் பிரகாரம் அல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

03. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் மேற்கூறிய திகதியில் மு.ப. 10.00 மணிக்கு கேள்விகள் முடிவுறுத்தப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரரின் பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

04. எந்தக் கேள்வியையும் அல்லது எல்லாக் கேள்விகளையும் நிராகரிக்கவோ/ கேள்வியின் எந்தப் பகுதியையும் ஏற்கவோ திணைக்கள கேள்வி குழுத் தலைவருக்கு சுய உரிமை உண்டு.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய,**
**நுகேகொடை.**



Daily News Classifieds, the Housewives’ companion

# கேள்வி அழைப்பு

## 2024-2025ம் ஆண்டிற்காக உணவகத்தை குத்தகைக்கு விடல் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை - புத்தளம்

2024.11.01 முதல் 2025.10.31 வரையான காலத்திற்கு புத்தளம் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் கீழ் உள்ள மாரவில ஆதார வைத்தியசாலையின் உணவகத்தை நடத்திச் செல்வதற்காக தகைமையுள்ள நபர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

01. கேள்விப் பத்திரங்கள் மற்றும் ஏனைய விபரங்கள் 2024.10.03 முதல் 2024.10.22 வரை அலுவலக நாட்களில் மு.ப. 09.00 முதல் பி.ப. 3.30 வரை இவ் அலுவலகத்தின் கணக்குப் பிரிவிற்கு வருகைதந்து பெற்றுக் கொள்ளலாம்.
02. கேள்வி மாதிரிகளை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான பிணை வைப்பு விபரம்

| நிறுவனம் | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூ) |
|---|---|
| ஆதார வைத்தியசாலை மாரவில | 3000.00 |

03. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வேண்டுதல் கடிதத்துடன் தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் போட்டோப் பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. இரு பிரதிகளுடன் பூர்த்தி செய்யப்பட்ட உங்களது கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை கடித உறையில் இட்டு பொறியிட்டு இடதுபக்க மேல் மூலையில் "உணவத்தை குத்தகைக்கு விடல் - ஆதார வைத்தியசாலை மாரவில 2024/2025" என்று குறிப்பிட்டு, 2024.10.23 பி.ப. 10.00 இற்கு முன்பு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து இவ் அலுவலகத்தின் கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைகப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். (மேலதிக விபரங்களுக்கு மின்னஞ்சல் : rdhs.puttalam.acc@gmail.com / தொ.பே. இல.: 032-2248855)
05. 2024.10.23 மு.ப. 10.30 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
06. இவ்வேலை சம்பந்தமான இறுதித் தீர்மானம் எடுத்தல் பெறுகைக் குழுவிற்கு உரித்தாகும்.

**தலைவர்**
**பிரதேச பெறுகைக்குழு,**
**பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை,**
**புத்தளம்**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## கடற்றொழில் அமைச்சு

## வடக்குப் பிராந்தியத்தில் கடற்றொழில் துறையை மேம்படுத்தல் யாழ்ப்பாணம் மாவட்டம் கட்டம் - I (நிலை II)

**ஒப்பந்த இல.: MF/SD/PROC/09/2024/12**

1. தோராயமாக 62 மில்லியன் ரூபா (எதிர்பாராச் செலவுகள் மற்றும் வரிகள் தவிர்த்து) மதிப்பிடப்பட்ட செலவைக் கொண்டதும் கீழே சுருக்கமாக விபரிக்கப்பட்டதுமான யாழ்ப்பாணம் மாவட்டம் கட்டம் - I (நிலை II), வடக்குப் பிராந்தியத்தில் கடற்றொழில் துறையை மேம்படுத்தலுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கடற்றொழில் அமைச்சின் சார்பில் அமைச்சு பெறுகைக் குழு (MPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

   திட்டத்தின் இடம்: யாழ்ப்பாணம் மாவட்டம்

   **"வரைபடங்கள் மற்றும் அளவுப் பட்டியலில் தரப்பட்டுள்ள, விபரக்குறிப்புகளின்படி நிலக்கீழ் கொங்கிறீட் வீதிகள் மற்றும் ஹியூம் குழாய் கால்வாய்களை பூர்த்தி செய்தல்"** முன்மொழியப்பட்ட இந்தத் திட்டத்தில் அடங்கும். ஒப்பந்தக் காலம் நாற்பத்து ஐந்து (45) நாட்காட்டி தினங்களாகும்.
2. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) கீழ் நெடுஞ்சாலைத் துறையில் C4 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் செல்லுபடியான பதிவைப் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்குத் தேவையான தகைமையில் உள்ளடங்குவன,
   - இறுதித் திகதியில் இருந்து முந்தைய ஏழு (07) ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலையின் சராசரி ஆண்டுப் புரள்வு குறைந்து 102 மில்லியன் ரூபாவாக இருத்தல் வேண்டும்.
   - கடந்த ஏழு (07) ஆண்டு காலத்தில் குறைந்தது 48 மில்லியன் ரூபா பெறுமதியில் ஒன்றரை (1.5) மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட்ட பிரதான ஒப்பந்ததாரராக முன்மொழியப்பட்ட வேலையை ஒத்த பண்பு மற்றும் சிக்கற்பாடுடைய குறைந்தது ஒரு வேலையை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
   - இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எந்த ஒரு முற்கொடுப்பனவுகளையும் தவிர்த்து மற்ற ஒப்பந்தக் கடப்பாடுகளின் நிகர திரவச் சொத்துகள் மற்றும்/ அல்லது கடன் வசதிகளின் குறைந்தபட்சத் தொகை மூன்று மாத பண உள்ளீட்டுக்கான ஆவண அத்தாட்சியுடன் 64 மில்லியன் ரூபாவுக்கு குறையாதிருத்தல் வேண்டும்.
   - 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 8 இன் பிரகாரம் விலைமனுதாரர் நிறுவன பொது ஒப்பந்தத்தின் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியான சான்றிதழ் ஒன்றை (PCA 3) வைத்திருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் கொழும்பு 10, மாளிகாவத்தை, புதிய செயலகம், 1ஆவது மாடி, கடற்றொழில் அமைச்சு, பணிப்பாளர் (பொறியியலாளர்) இடமிருந்து மேலதிக விபரங்களைப் பெறலாம் என்பதோடு அதே முகவரியில் 2024 ஒக்டோபர் 03 ஆம் திகதி தொடக்கம் 2024 ஒக்டோபர் 23 ஆம் திகதி வரை எந்த ஒரு வேலை நாட்களிலும் 09.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை விலைமனு ஆவணங்களைப் பரீட்சிக்க முடியும். தொடர்பு இலக்கங்கள் - தொலைபேசி: 0718023883, தொலைநகல்: 0112322416, மின்னஞ்சல் முகவரி: social@fisheries.gov.lk
6. கடற்றொழில் அமைச்சின் 7ஆவது மாடியில் அமைந்துள்ள அபிவிருத்திப் பிரிவுக்கு பன்னிரண்டு ஆயிரத்து ஐந்நூறு ரூபா (ரூபா 12,500.00) மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி 2024 ஒக்டோபர் 3 ஆம் திகதி தொடக்கம் 2024 ஒக்டோபர் 23 ஆம் திகதி வரை 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை கொழும்பு 10, மாளிகாவத்தை, புதிய செயலகம், கடற்றொழில் அமைச்சு, செயலாளருக்கு கோரிக்கைக் கடிதம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்களை 2024 ஒக்டோபர் 24 ஆம் திகதி 14.00 மணி அல்லது அதற்கு முன்னர் செயலாளர், கடற்றொழில் அமைச்சு, புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரி இடப்பட்டு கடற்றொழில் அமைச்சின் 2ஆவது மாடியில் அமைந்துள்ள நிதிப் பிரிவுக்கு இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2024 ஜனவரி 23 ஆம் திகதி வரை (91 நாட்கள்) செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
9. அனைத்து விலைமனுக்களும் கொழும்பு 10, மாளிகாவத்தை, புதிய செயலகம், கடற்றொழில் அமைச்சு, செயலாளரின் பெயரில் வரையப்பட்ட பிரிவு 9 - நிலையான வடிவங்களில் (விலைமனு பிணை) உள்ளடக்கப்பட்ட வடிவத்தில் 2024 பெப்ரவரி 20 ஆம் திகதி வரை செல்லுபடியான எண்ணூற்று இருபத்து ஐயாயிரம் ரூபா (ரூபா 825,000.00) விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையானது நாட்டுக்குள் இயங்கும் இலங்கை மத்திய வங்கியின் கீழ் உரிமம் பெற்ற வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
10. விலைமனுவுக்கு முந்தைய தளப்பயணம் 2024 ஒக்டோபர் 14 ஆம் திகதி 09.00க்கு இடம்பெறும்.

    **இடம்: யாழ்ப்பாணம், மாவட்ட கடற்றொழில் அலுவலகம்**
11. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு பின்வருமாறு இடம்பெறும்:

    திகதி மற்றும் நேரம்: 2024 ஒக்டோபர் 16 ஆம் திகதி 15.00 மணி

    இடம்: கேட்போர்கூடம்,

    5ஆவது மாடி, கடற்றொழில் அமைச்சு,

    புதிய செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10.
12. அனைத்து விலைமனுதாரர்களும் முரண்பாடுகளை தவிர்ப்பதற்கு விலைமனுவைச் சமர்ப்பிப்பதற்கு முன் 2007 ஜனவரி - இரண்டாம் பாகம் மற்றும் 2009 ஒக்டோபர் மற்றும் 2011 பெப்ரவரியில் திருத்தி வெளியிடப்பட்ட ICTAD/SBD/01 இன் ITB இனை கவனமாக வாசிப்பதற்கு கோரப்படுகின்றனர்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**வடக்குப் பிராந்தியத்தில் கடற்றொழில் துறையை மேம்படுத்தல்**
**கடற்றொழில் அமைச்சு,**
**2ஆவது மாடி,**
**புதிய செயலகம்,**
**மாளிகாவத்தை, கொழும்பு - 10**

# கேள்வி மனு கோரல்

## இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்

## 2024/2025ஆம் ஆண்டிற்கான தனியார் பாதுகாப்பு சேவையை வழங்குதல்

**ஒப்பந்த இல. SU/GA/GS3/2024/2025**

1. இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் 2024/2025ஆம் ஆண்டிற்கான தனியார் பாதுகாப்பு சேவையை வழங்குவதற்காக தகுதியான கேள்விதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.
2. உத்தேசிக்கப்பட்ட சேவைக்காலம் 365 நாட்கள்.
3. தேசிய போட்டிக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. பாதுகாப்பு அமைச்சின் உரிமம் பெற்றுள்ள கேள்விதாரர்களே இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்திற்கு ஒரு வருடத்திற்கு தனியார் பாதுகாப்பு சேவையை வழங்குவதற்கு தகுதியுடையவர்களாவர்.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **"சிரேஷ்ட உதவிப் பதிவாளர், நிர்வாகப் பிரிவு, இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்"** எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் -045-2280027) இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்வதோடு கேள்விமனு ஆவணங்கள் தொடர்பான தகவல்களைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் 04.10.2024 முதல் 24.10.2024 வரை எந்த வேலை நாளிலும் காலை 09.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை பெற்றுக்கொள்ளமுடியும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மனுப்பத்திரங்களை கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்துவடிவ விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலமும், ரூபா இருபதாயிரத்தை மீளளிக்கப்படாத கட்டுப்பணமாக செலுத்துவதன் மூலமும் 04.10.2024 முதல் 24.10.2024 வரை வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் பணத்தினைச் செலுத்த முடியும்.
7. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 10.10.2024 அன்று பி.ப 10.00 மணிக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அலுவலக அறையில் நடைபெறும். அனைத்து கேள்விதாரர்கள்/கேள்விதாரர்களின் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்துகொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்.
8. கேள்வி மனுக்களானது கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு 25.10.2024 ம் திகதி பிப 2.00இற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விமனுக்கள் முத்திரையிடப்பட்ட பதிவுத்தபால் உறையிலிடப்பட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் **"இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகத்தின் 2024/2025 ஆண்டிற்கான தனியார் பாதுகாப்பு சேவை வழங்குதல்"** எனக் குறிப்பிட்டு அனுப்பப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விமனுக்களானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. இறுதி முடிவானது கேள்விச்சபையினால் தீர்மானிக்கப்படும்.
10. கேள்வி மனுவானது கேள்வி மனுவை சமர்ப்பிப்பதற்கான முடிவுத்திகதியிலிருந்து 91 நாட்களுக்குச் செல்லுபடியாகும்.
11. ஒவ்வொரு கேள்விமனுவும் கேள்வி ஆவணங்களில் கொடுக்கப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் செலுத்தப்படவேண்டிய கேள்விப் பிணையுடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிகளாவன:

**கேள்வி ஆவணங்களை ஆய்வு செய்தல், கேள்வி ஆவணங்களுக்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் மற்றும் கேள்வி ஆவணங்களை வழங்குதல்.**

சிரேஷ்ட உதவிப் பதிவாளர்
நிர்வாகப் பிரிவு
இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் த.பெ.எண். - 02
பெலிஹுல் ஓய

**கேள்வி மனு திறப்பு**
பதிவாளர் அலுவலகம்
இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் த.பெ.எண். 02 பெலிஹுல் ஓய

**தலைவர்/கேள்விச்சபை**
இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் பெலிஹுல் ஓய

**பதிவாளர்**
**இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்**
**03.10.2024**

# காணி சுவீகரித்தல் சட்ட மூலத்தின் (460 ஆம் அத்தியாயம்) 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்.

**தொடர்பு இலக்கம்:- 3/2/3/10/269A-11**

**சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் தொடர்பு இலக்கம்:- 4/3/9/2016/WS/417**

இங்கு உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2371/59 இலக்கத்தையுடையதும் 2024.02.17ஆந் திகதியுடையதுமான இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அதி விஷேட வர்த்தமானியின் 1A பகுதியை பார்வை இடவும்.

**உப அட்டவணை**

| | | |
|---|---|---|
| மாகாணம் | :- | மேல் மாகாணம் |
| மாவட்டம் | :- | கம்பஹா |
| பிரதேச செயலகப் பிரிவு | :- | அத்தனகல்லை |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | :- | இல 363, வெலிக்கட முல்லை |
| கிராமத்தின் பெயர் | :- | வெலிக்கட முல்லை |
| காணியின் பெயர் | :- | ஹப்பு கஹ ஒவிட்ட கும்புற மற்றும் வெட்ட கெயா பொத்து கும்புற |
| ஆரம்ப காணிப் பிரித்தெடுப்பு இல | :- | கம்/4229 |
| காணித்துண்டு இல | :- | 87 |
| சுவீகரித்த காணியின் பரப்பளவு | :- | 3.9975 ஹெக்டயார் |

**எஸ்.பி. குணவர்தன**
**பிரதேச செயலாளர், அத்தனகல்லை**
**முகவரி:- அத்தனகல்லை பிரதேச செயலகம், நிட்டம்புவை**
**2024.10.03**






# கேள்வி அறிவித்தல்

## இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

## PORTABLE MULTI CAMERA PRODUCTION SYSTEM ஒன்றிற்கான உபகரணங்களின் பெறுகை

**கேள்விமனு இல.: 125/2024.10.30**

PORTABLE MULTI CAMERA PRODUCTION SYSTEM ஒன்றிற்காக பின்வரும் உபகரணத்தின் பெறுகைக்காக இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தினால் (SLRC) முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனுக்கள் கோரப்படுகின்றன.

| PORTABLE MULTI CAMERA PRODUCTION SYSTEM இற்கான உபகரணங்களின் பெறுகை | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 4K Camera System including<br>• Camera<br>• Zoom Demand<br>• Focus Demand<br>• Camera Control Unit<br>• CAT 6 Cable (100 m x 2 )<br>• Lens Cap for Camera Body<br>• Carry Case for 03 Cameras<br>• Intercom Head sets | 03 Nos | 05 | Camera Lens 3 (75-300 mm; f/4.8 to f/6.7; f/22)<br>Carrying Cases (for item no.03,04 & 05) | 01 No |
| | | | 06 | Vision Mixer including<br>• Multi View Monitor<br>• Waveform/Vector scope/Video Monitor<br>• Laptop Computer for control, configuration and Graphics | 01 No |
| | Intercom Head set (for producer) | 01 No | 07 | File Based Video Recorder | 01 No |
| 02 | Tripods | 03 Nos | 08 | Wireless Video Transmission system with accessories | 02 Nos |
| 03 | Camera Lens 1 (14-42 mm, f/5.6; f/22) | 02 Nos | | | |
| 04 | Camera Lens 2 (45-175 mm, f/4 to f/5.6; f/22) | 03 Nos | | | |

உயர் தரமான ஒளிபரப்பு உபகரணத்தின் உற்பத்தியாளர், அங்கீகாரம் பெற்ற முகவர்கள், அங்கீகாரம் அளிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு இந்த அழைப்பு திறந்திருக்கும்.

கேள்விமனு ஆவணங்களை 2024.10.29 ஆம் திகதி பி.ப. 3.00 அல்லது அதற்கு முன்னர் தம்மால் தயாரிக்கப்பட்ட கோரிக்கை கடிதம் ஒன்றை சமர்ப்பித்து இ.ரூ.கூ. இன் பெறுகை உதவிப் பணிப்பாளரிடம் இருந்து கேள்விமனு ஆவணங்களை பெற முடியும்.

கேள்விமனு ஆவணத்தை பெறுவதற்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000 இலங்கை ரூபாவை தலைமை கணக்காளருக்கு செலுத்துதல் வேண்டும்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விமனுக்களை 2024.10.30 ஆம் திகதி பி.ப. 3.00 அல்லது அதற்கு முன்னர் தலைவர், பெறுகைக் குழு, இ.ரூ.கூ., சுதந்திர சதுக்கம், கொழும்பு 07 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு வகை செய்தல் வேண்டும். கேள்விமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் 2024.10.30 ஆம் திகதி பி.ப. 3.00க்குப் பின்னர் கேள்விமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்/ பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், சுதந்திர சதுக்கம்,**
**கொழும்பு 07**
**இ.ரூ.கூ. இணையதளம் - http://www.rupavahini .lk**


OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# இலங்கை புகையிரத சேவைகள்

## விலைமனுக்கோரல்

**03 டொன் ஃபோர்க் லிஃப்ட் (Fork Lift) ஆறு (06) வழங்குவதற்கான கொள்முதல்**

**IFB இலக்கம் - SRS F.8036**

1. கொழும்பு இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள கொள்வனவுக் குழுவின் (மேஜர்) தவைரினால் த.பெ.இல. 355, புகையிரத தலைமையகம், கொழும்பு திணைக்களத்திற்கு 03 டொன் ∴போர்க் லி∴ப்ட் (Fork Lift) ஆறு (06) வழங்குவதற்கு தகுதிவாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரை வைக்கப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.
2. கேள்விகோரல் **தேசிய போட்டி நடைமுறை மூலம் நடத்தப்படும் (NCB)**
3. மேலதிக தகவல்கள் மற்றும் மனு ஆவண பரிசீலனையினை வேலைநாட்களில் **மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 வரை** கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் செய்ய முடியும்.

**பிரதிப் பொது முகாமையாளர் (கொள்முதல்),**
**புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,**
**ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.**
**தொலைபேசி இல : +94(11) 2438078, அல்லது +94(11) 2436818**
**தொலைநகல் இல : +94 (11) 2432044**
**மின்னஞ்சல் : srs.slr@gmail.com**
**இணையத்தளம் : www.railway.gov.lk**

4. விலைமனுதாரர்கள் ∴போர்க் லி∴ப்ட்களை வழங்குவதில் 10 ஆண்டு அனுபவத்துடன் கடந்த 10 ஆண்டுகளில் குறைந்தது 20 எண்ணிக்கையிலான பளுதூக்கிகளை (fork-lifts) விற்பனை செய்திருத்தல் வேண்டும் அத்துடன் குறைந்தபட்சம் 5 ஆண்டுகளுக்கு அந்தந்த உற்பத்தியாளரின் உள்ளூர் முகவர்களைக் கொண்டு ஏலம் எடுக்கத் தகுதியுடையவர்கள்

   இதேபோன்ற பிராண்ட் பளுதூக்கிகளை (fork-lifts) தயாரித்து வழங்குவதில் 10 வருட அனுபவம் உள்ள உற்பத்தியாளர்கள் மற்றும் பளுதூக்கிகளை (fork-lifts) வடிவமைத்து தயாரிப்பதற்கான அங்கீகாரம் பெற்ற ISO 9001:2008 தர உத்தரவாதச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
5. ஆர்வமுள்ள மனுதாரர்கள் இலங்கை புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவில் மீளச்செலுத்தப்படாத **ரூ.6,650/-** கொள்முதல் கட்டணத்தை செலுத்தி **2024.10.03** ஆம் திகதி முதல் **2024.10.28** ஆம் திகதி **பி.ப.3.00** மணிக்கு அலுவலகத்தில் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
6. அனைத்து மனுக்களுக்கும் மனுப் பாதுகாப்புடன் இருத்தல் வேண்டும். மனுப் பாதுகாப்புத் தொகையாக **ரூ.300,000.00** இருத்தல் வேண்டும், மேலும் இலங்கையில் இயங்கும் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமாக இருத்தல் வேண்டும்.
7. மனுக்கள் **2024.10.29** ஆம் திகதி **பி.ப.2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்** கீழே உள்ள முகவரியில் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றலாம். தாமதமான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

**தலைவர்,**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
**புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10.**

**தலைவர்,**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**
**கொள்முதல் இல : SRS/F.8036**

SELACINE

# இலங்கை புகையிரத சேவைகள்

## விலைமனுக்கோரல்

**05 டொன் ஃபோர்க் லிஃப்ட் (Fork Lift) ஒன்றினை (01) வழங்குவதற்கான கொள்முதல்**

**IFB இலக்கம் - SRS F.8035**

1. கொழும்பு இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள கொள்வனவுக் குழுவின் (மேஜர்) தவைரினால் த.பெ.இல. 355, புகையிரத தலைமையகம், கொழும்பு திணைக்களத்திற்கு 05 டொன் ∴போர்க் லி∴ப்ட் (Fork Lift) ஒன்றினை (01) வழங்குவதற்கு தகுதிவாய்ந்த மனுதாரர்களிடமிருந்து முத்திரை வைக்கப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது.
2. கேள்விகோரல் **தேசிய போட்டி நடைமுறை மூலம் நடத்தப்படும் (NCB)**
3. மேலதிக தகவல்கள் மற்றும் மனு ஆவண பரிசீலனையினை வேலைநாட்களில் **மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 வரை** கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் செய்ய முடியும்.

**பிரதிப் பொது முகாமையாளர் (கொள்முதல்),**
**புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,**
**ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.**
**தொலைபேசி இல : +94(11) 2438078, அல்லது +94(11) 2436818**
**தொலைநகல் இல : +94 (11) 2432044**
**மின்னஞ்சல் : srs.slr@gmail.com**
**இணையத்தளம் : www.railway.gov.lk**

4. விலைமனுதாரர்கள் ∴போர்க் லி∴ப்ட்களை வழங்குவதில் 10 ஆண்டு அனுபவத்துடன் கடந்த 10 ஆண்டுகளில் குறைந்தது 20 எண்ணிக்கையிலான பளுதூக்கிகளை (fork-lifts) விற்பனை செய்திருத்தல் வேண்டும் அத்துடன் குறைந்தபட்சம் 5 ஆண்டுகளுக்கு அந்தந்த உற்பத்தியாளரின் உள்ளூர் முகவர்களைக் கொண்டு ஏலம் எடுக்கத் தகுதியுடையவர்கள

   இதேபோன்ற பிராண்ட் பளுதூக்கிகளை (fork-lifts) தயாரித்து வழங்குவதில் 10 வருட அனுபவம் உள்ள உற்பத்தியாளர்கள் மற்றும் பளுதூக்கிகளை (fork-lifts) வடிவமைத்து தயாரிப்பதற்கான அங்கீகாரம் பெற்ற ISO 9001:2008 தர உத்தரவாதச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
5. ஆர்வமுள்ள மனுதாரர்கள் இலங்கை புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவில் மீளச்செலுத்தப்படாத **ரூ.4,400/-** கொள்முதல் கட்டணத்தை செலுத்தி **2024.10.03** ஆம் திகதி முதல் **2024.10.28** ஆம் திகதி **பி.ப.3.00** மணிக்கு அலுவலகத்தில் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
6. அனைத்து மனுக்களுக்கும் மனுப் பாதுகாப்புடன் இருத்தல் வேண்டும். மனுப் பாதுகாப்புத் தொகையாக **ரூ.75,000.00** இருத்தல் வேண்டும், மேலும் இலங்கையில் இயங்கும் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமாக இருத்தல் வேண்டும்.
7. மனுக்கள் **2024.10.29** ஆம் திகதி **பி.ப.2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்** கீழே உள்ள முகவரியில் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றலாம். தாமதமான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

**தலைவர்,**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
**புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10.**

**தலைவர்,**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
**இலங்கை புகையிரத சேவைகள்.**
**கொள்முதல் இல : SRS/F.8035**

SELACINE


# மத்திய மாகாண சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## கட்டிட நிர்மாணங்கள் மற்றும் வழங்கல் சேவைகள் 2025

**நிதியளிப்பு: மாகாண சபை நிதியம்/ மாகாண நிலையான அபிவிருத்தி நிதியம்**

## ஆயுர்வேதத் திணைக்களம் மத்திய மாகாணம்

01. பின்வரும் 01ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வழங்கல் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் 02ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வேலைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் மத்திய மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் தகைமை வாய்ந்த வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2021-02-18ஆம் திகதிய 4/2016(iii)ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் தேசிய போட்டி ரீதியிலான நடைமுறையின் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாத கேள்விதாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

02. 02ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கு இயைபான பொறியியல் அளவுப்பத்திர தொகையும் ஒப்பந்தக் காலமும் கீழே தரப்பட்டுள்ளன என்பதுடன் அந்த ஒப்பந்தங்களை கையளிக்கப் பெறுவதற்கு வேலைகளுக்கு இயைபான வகையில் கீழே தரப்பட்டுள்ள தரத்தில் நாளது தரவேற்றம் செய்யப்பட்ட CIDA பதிவு இருக்க வேண்டும்.

03. கேள்விக்கு இயைபான மேலதிகத் தகவல்களை பல்லேகலை, குண்டசாலை எனும் முகவரியிலுள்ள மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தின் கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 081-2423932)

04. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 01 முதல் 06 வரையான வழங்கல்கள் / நிர்மாணங்களுக்கு இயைபான கேள்விப் படிவங்களுக்காக மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணத்தை கண்டி, பல்லேகலை, குண்டசாலை எனும் முகவரியிலுள்ள மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவிற்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை அந்த அலுவலகத்தின் கணக்குப் பிரிவிற்குச் சமர்ப்பிப்பதன் பேரில் 2024-10-03ஆம் திகதி முதல் 2024-10-22ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை சிங்கள மொழியில் அச்சிடப்பட்டுள்ள கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

05. முறையாகப் பூரணப்படுத்தி, முத்திரை பொறிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2024-10-23ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கண்டி, பல்லேகலை, குண்டசாலை எனும் முகவரியிலுள்ள மாகாண ஆயுர்வேதத் திணைக்கள அலுவலகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது அந்த அலுவலகங்களின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

06. இரு பிரதிகளில் பூரணப்படுத்தப்பட்ட சகல கேள்விகளையும் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என வெவ்வேறான இரு உறைகளில் இட்டு அவ்வுறைகளின் இடதுபக்க மேல் மூலையில் வேலை/ சேவையின் பெயரைக் குறிப்பிட்டு முத்திரைக் குறி பொறித்து வேறொரு உறையில் இட்டு அனுப்புதல் வேண்டும் என்பதுடன் அதன் இடதுபக்க மேல் மூலையில் வேலை/ சேவையின் பெயரைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

07. கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்ததும் அவை உடன் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

08. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில், இலங்கை காப்புறுதிச் சபையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனமொன்றில், நிர்மாணப் பாதுகாப்பு நிதியத்தில் கண்டி, பல்லேகலை, குண்டசாலை எனும் முகவரியிலுள்ள மாகாண ஆயுர்வேதத் திணைக்கள ஆணையாளரின் பெயரிலும் வழங்கப்பட்ட பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி மற்றும் கால எல்லையைக் கொண்ட கேள்விப் பிணை முறியொன்றை கேள்விகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பிணை முறியை ரொக்கப் பணமாகச் செலுத்துவதானால் கண்டி, பல்லேகலை, குண்டசாலை எனும் முகவரியிலுள்ள மாகாண ஆயுர்வேதத் திணைக்கள அலுவலகத்தின் நிதி உதவியாளருக்கும் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையான பணத் தொகையை ரொக்கப் பணமாக வைப்புச் செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் சான்றுபடுத்திய பிரதியொன்றை கேள்விப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

09. இந்தக் கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கூட்டமொன்று 2024-10-15ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு மத்திய மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்தில் இடம்பெறும்.

10. சகல கேள்விகளும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்படும் என்பதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

| தொ. இல. | கேள்வி இல. | பொருள் மற்றும் சேவை வழங்களின் பெயர் | மதிப்பீட்டுப் பெறுமதி (ரூபா மில்லியன்) (வெட் இன்றி) | கேள்விப் பிணை முறி | | கேள்வியின் செல்லுபடிக் காலம் (நாட்கள்) | கேள்விப் பிணை முறியின் செல்லுபடிக் காலம் (நாட்கள்) | மீளளிக்கப் படாத கேள்வி ஆவணக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | கேள்விப் பிணை முறியின் பெறுமதி (ரூபா) | ரொக்கப் பண வைப்பு (ரூபா) | | | |
| 1 | CPC/AYU/2/2/2024/1 | **மத்திய மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்திற்குரித்தான வைத்தியசாலைகளுக்கு சமைத்த உணவு வழங்குதல்** | | | | | | |
| | | 1. மாகாண ஆயுர்வேத வைத்தியசாலை, பல்லேகலை | 18,500,000.00 | 370,000.00 | 185,000.00 | 77 | 105 | 4,625.00 |
| | | 2. ஆயுர்வேத ஆதார வைத்தியசாலை, தொலுவ. | 6,100,000.00 | 122,000.00 | 61,000.00 | 77 | 105 | 2,000.00 |
| | | 3. ஆயுர்வேத ஆதார வைத்தியசாலை, கொத்மலை | 4,300,000.00 | 86,000.00 | 43,000.00 | 63 | 91 | 1,500.00 |
| | | 4. ஆயுர்வேத ஆதார வைத்தியசாலை, மாத்தளை வடக்கு | 3,100,000.00 | 62,000.00 | 31,000.00 | 63 | 91 | 1,000.00 |
| | | 5. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை, பன்வில | 4,150,000.00 | 83,000.00 | 41,500.00 | 63 | 91 | 1,500.00 |
| | | 6. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை, கெலிஓய | 1,700,000.00 | 34,000.00 | 17,000.00 | 63 | 91 | 1,000.00 |
| | | 7. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை, ஹந்தகனாவ | 3,550,000.00 | 71,000.00 | 35,500.00 | 63 | 91 | 1,250.00 |
| | | 8. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை, தென்ன | 2,050,000.00 | 41,000.00 | 20,500.00 | 63 | 91 | 1,000.00 |
| | | 9. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை, நில்தண்டாஹின்ன | 1,800,000.00 | 36,000.00 | 18,000.00 | 49 | 77 | 1,000.00 |
| | | 10. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை, லக்கல | 3,700,000.00 | 74,000.00 | 37,000.00 | 63 | 91 | 1,250.00 |
| 2 | CPC/AYU/2/2/2024/1 | **மத்திய மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்திற்குரித்தான வைத்தியசாலைகளுக்கு அழுக்குத் துணிகளை சலவை செய்யும் சேவையை வழங்குதல்** | | | | | | |
| | | 1. ஆயுர்வேத ஆதார வைத்தியசாலை, கொத்மலை | 135,000.00 | 2,700.00 | 1,350.00 | 49 | 77 | 500.00 |
| | | 2. ஆயுர்வேத ஆதார வைத்தியசாலை, மாத்தளை வடக்கு | 75,000.00 | 1,500.00 | 750.00 | | | 500.00 |
| | | 3. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை, பன்வில | 300,000.00 | 6,000.00 | 3,000.00 | | | 500.00 |
| | | 4. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை, கெலிஓய | 90,000.00 | 1,800.00 | 900.00 | | | 500.00 |
| | | 5. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை, ஹந்தகனாவ | 360,000.00 | 7,200.00 | 3,600.00 | | | 500.00 |
| | | 6. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை, தென்ன | 72,000.00 | 1,500.00 | 1,250.00 | | | 500.00 |
| | | 7. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை, நில்தண்டாஹின்ன | 105,000.00 | 2,100.00 | 1,050.00 | | | 500.00 |
| | | 8. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை, லக்கல | 120,000.00 | 2,400.00 | 1,200.00 | | | 500.00 |
| | | 9. ஆயுர்வேத ஆதார வைத்தியசாலை, தொலுவ | 810,000.00 | 16,200.00 | 8,100.00 | | | 500.00 |
| 3 | CPC/AYU/2/2/2024/1 | **மத்திய மாகாண ஆயுர்வேதத் திணைக்களத்திற்குரித்தான வைத்தியசாலைகளுக்கு உலர்ந்த விறகு வழங்குதல்** | | | | | | |
| | | 1. மாகாண ஆயுர்வேத வைத்தியசாலை, பல்லேகலை | 420,000.00 | 8,400.00 | 4,200.00 | 49 | 77 | 500.00 |
| | | 2. ஆயுர்வேத ஆதார வைத்தியசாலை, தொலுவ. | 140,000.00 | 2,800.00 | 1,400.00 | | | 500.00 |
| | | 3. ஆயுர்வேத ஆதார வைத்தியசாலை, கொத்மலை | 280,000.00 | 5,600.00 | 2,800.00 | | | 500.00 |
| | | 4. ஆயுர்வேத ஆதார வைத்தியசாலை, மாத்தளை வடக்கு | 280,000.00 | 5,600.00 | 2,800.00 | | | 500.00 |
| | | 5. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை, பன்வில | 280,000.00 | 5,600.00 | 2,800.00 | | | 500.00 |
| | | 6. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை, ஹந்தகனாவ | 252,000.00 | 5,100.00 | 2,550.00 | | | 500.00 |
| | | 7. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை, தென்ன | 112,000.00 | 2,250.00 | 1,125.00 | | | 500.00 |
| | | 8. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை, நில்தண்டாஹின்ன | 140,000.00 | 2,800.00 | 1,400.00 | | | 500.00 |
| | | 9. ஆயுர்வேத கிராமிய வைத்தியசாலை, லக்கல | 280,000.00 | 5,600.00 | 2,800.00 | | | 500.00 |
| 4 | CPC/AYU/2/2/2024/1 | பன்வில ஆயுர்வேத கிராம வைத்தியசாலைக்குரித்தான போசணை இல்லத்தை நடாத்திச் செல்லல். | 30,000.00 | 600.00 | 300.00 | 49 | 77 | 500.00 |
| 5 | CPC/AYU/2/2/2024/1 | பல்லேகலை மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைக்குரித்தான சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் செல்லல். | 120,000.00 | 2,400.00 | 1,200.00 | | 77 | 500.00 |

| தொ. இல. | கேள்வி இல. | திட்டம் | பதிவு | பதிவுக் கட்டணம் | கேள்விப் பிணை முறியின் பெறுமதி | | அளவுத் பத்திர தொகை | ஒப்பந்தக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | CIDA | (ரூபா) | வங்கிப் பிணை முறியாக (ரூபா) | ரொக்கப் பணமாக (ரூபா) | (ரூபா) | நாட்கள் |
| 6 | CPC/AYU/2/2/2024/ PSDG/ XXV | Repair of Drug Production unit at Rural Hospital Handaganawa | C7 & C6 | 3,500.00 | 108,000.00 | 54.000.00 | 5,354,763.22 | 77 |

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**ஆயுர்வேதத் திணைக்களம்,**
**மத்திய மாகாணம்.**
**2024-10-03.**


**For classified advertisements and for replies**

**received in response to advertisements published under Lake House box numbers**

**+ 94 112429342**
**+ 94 112429343**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.



# மகளிர் டி20 உலகக் கிண்ணம் இன்று ஆரம்பம்: முதல் போட்டியில் இலங்கை அணி களத்தில்

மகளிர் டி20 உலகக் கிண்ணம் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இன்று (03) ஆரம்பமாகவுள்ளது.

பங்களாதேஷில் நடைபெறவிருந்த போட்டிகள் அங்கு நிலவும் அரசியல் பதற்றத்திற்கு மத்தியிலேயே ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு மாற்றப்பட்டது. ஷார்ஜா கிரிக்கெட் அரங்கு மற்றும் டுபாய் சர்வதேச அரங்கில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

மொத்தம் 10 அணிகள் பங்கேற்கும் இம்முறை தொடரில் ஐந்து அணிகளாக பிரிக்கப்பட்டு ஏ மற்றும் பி குழுக்களாக ஆரம்பச் சுற்றுப் போட்டிகள் நடைபெறவுள்ளன. குழுநிலையில் ஒரு அணி மற்ற அணியுடன் ஒரு முறை மோத விருப்பதோடு இரு குழுக்களிலும் முதல் இரு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

இந்தத் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் ஒக்டோபர் 20 ஆம் திகதி டுபாயில் நடைபெறவுள்ளது.

இதில் சமரி அத்தபத்து தலைமையிலான இலங்கை மகளிர் அணி ஏ குழுவில் இடம்பெற்றுள்ளது. ஆரம்ப நாளான இன்று இலங்கை அணி தனது முதல் போட்டியில் பாகிஸ்தான் அணியை எதிர்கொள்ளவுள்ளது. ஷார்ஜாவில் நடைபெறும் இந்தப் போட்டி இலங்கை நேரப்படி இரவு 7.30 இற்கு ஆரம்பமாகும்.

இதனைத் தொடர்ந்து நடப்புச் சம்பியனான அவுஸ்திரேலியாவை எதிர்வரும் சனிக்கிழமை (05) எதிர்கொள்ளும் இலங்கை அணி தொடர்ந்து இந்தியா (ஒக். 09) மற்றும் நியூசிலாந்து (12) அணிகளுடன் பலப்பரீட்சை நடத்தும்.

ஒப்பீட்டளவில் பாகிஸ்தான் தவிர்த்து இலங்கை மகளிர் அணிக்கு எஞ்சிய மூன்று போட்டிகளும் அதிக சவால் கொண்டதாக உள்ளது. எவ்வாறாயினும் இலங்கை அணி அண்மைக் காலத்தில் தொடர்ந்து சோபித்து வெற்றிகளைக் குவித்து வரும் நிலையில் எதிரணிக்கு சவால் கொடுக்க அதிக வாய்ப்பு உள்ளது.

குறிப்பாக அணித் தலைவி சமரி அத்தபத்துவின் ஆட்டம் முக்கியமானது என்பதோடு விஷ்மி குணரத்ன, ஹர்ஷிதா சமரவிக்ரம, கவிஷா டில்ஹாரி போன்ற வீராங்கனைகள் அண்மைக்காலத்தில் சோபித்து வருகின்றனர்.

டி20 உலகக் கிண்ணத்திற்கு முன்னதாக நடைபெற்ற பங்களாதேஷ் மற்றும் ஸ்கொட்லாந்து அணிகளுக்கு எதிரான இரு பயிற்சிப் போட்டிகளிலும் வெற்றியீட்டிய உற்சாகத்துடனேயே இலங்கை அணி இந்தத் தொடரில் களமிறங்கவுள்ளது.



## சர்வதேச செய்திகள்

# இஸ்ரேல் மீதான ஈரானின் ஏவுகணை வீச்சை அடுத்து இரு தரப்பும் பரஸ்பரம் எச்சரிக்கை

## ஹிஸ்புல்லாவுடன் இஸ்ரேலியப் படை தரைவழி மோதல்

இஸ்ரேல் மீது சரமாரி ஏவுகணைகளை வீசியதற்கு ஈரானுக்கு 'பதிலடி' கொடுக்கப்படும் என்று இஸ்ரேல் எச்சரித்திருப்பதோடு தம்மீது தாக்குதல் நடத்தப்பட்டால் இதனை விடவும் மிகப்பெரிய தாக்குதல் முன்னெடுக்கப்படும் என்று ஈரான் பதிலுக்கு எச்சரித்துள்ளது.

ஈரான் வரலாற்றில் இரண்டாவது முறையாக இஸ்ரேல் மீது கடந்த செவ்வாக்கிழமை (01) இரவு அது நேரடித் தாக்குதலை நடத்தியது. இதன்போது ஹைப்பர்சோனிக் ஆயுதங்கள் உட்பட 200 ஏவுகணைகளை வீசியதாக ஈரான் கூறியது. இதனால் இஸ்ரேலிய பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓட்டம் பிடித்ததோடு பிராந்தியத்தில் உள்ள பல நாடுகளும் தமது வான்வெளியை மூடின.

தமது நிலத்தின் மீது 180 ஏவுகணைகள் வீசப்பட்டதாக குறிப்பிட்ட இஸ்ரேல், ஈரானின் கூட்டணியான லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்புக்கு எதிராக மேலும் கடுமையாக தாக்குதல்களை நடத்தியது. தெற்கு பெய்ரூட்டில் நேற்றுக் காலை இஸ்ரேலின் தாக்குதல்கள் உக்கிரமாக இருந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இஸ்ரேல் தனது போர் நடவடிக்கையை காசாவில் இருந்து ஹிஸ்புல்லா மீது தீவிரப்படுத்தி உள்ளது. இதன்மூலம் தனது வடக்கு எல்லையின் பாதுகாப்பை பலப்படுத்த முயல்வதாக அது கூறுகிறது.

இஸ்ரேல் மீது தொடர்ச்சியாக அச்சுறுத்தல்களை விடுத்த நிலையிலேயே கடந்த ஏப்ரலுக்குப் பின்னர் ஈரான் இந்த ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தி இருந்தது. இது இஸ்ரேல் மற்றும் பிராந்தியம் எங்கும் போர் பதற்றத்தை ஏற்படுத்தியது.

இதில் பெரும்பாலான ஏவுகணைகளை இஸ்ரேல் வான் பாதுகாப்பு அமைப்பு இடைமறித்ததோடு அதன் கூறிய பாகங்கள் விழுந்து இருவர் காயமடைந்ததாக இஸ்ரேல் மருத்துவ வட்டாரம் தெரிவித்தது.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் ரொக்கெட் பாகம் ஒன்று விழுந்ததில் பலஸ்தீனர் ஒருவர் கொல்லப்பட்டதாக அந்த நகர ஆளுநர் ஹுஸைன் ஹமயல் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்துள்ளார்.

### பரஸ்பரம் எச்சரிக்கை

'ஈரான் இன்று மிகப்பெரிய



தவறைச் செய்திருக்கிறது. அதற்கு பதிலடி கொடுக்கப்படும்' என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரித்துள்ளார். 'யார் எம்மைத் தாக்கினாலும் நாம் அவர்களைத் தாக்குவோம்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஈரான் ஏவுகணைகளை இடைமறித்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு நிலையத்தில் இருந்த இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லன்ட், பழிதீர்க்கப்படும் என்று எச்சரித்தார். 'இஸ்ரேலின் மீது தாக்குதல் நடத்துபவர்கள் கடுமையாக விலை ஒன்றை கொடுக்க வேண்டி இருக்கும் என்ற சாதாரண பாடத்தைக் கூட ஈரான் கற்கவில்லை' என்றார்.

கடந்த வாரம் ஹிஸ்புல்லா தலைவர் ஹஸன் நஸ்ரல்ல கொல்லப்பட்டது அதேபோன்று கடந்த ஜூலையில் டெஹ்ரானில் வைத்து ஹமாஸ் தலைவர் இஸ்மைல் ஹனியே படுகொலை செய்யப்பட்டதற்கு பதிலடியாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரான் புரட்சிக் காவல் படை தெரிவித்துள்ளது.

இது ஈரான் புரட்சிக் காவல் படையின் முதல் தாக்குதல் என்று ஈரான் பாராளுமன்றத்தின் தேசிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் குழுத் தலைவர் இப்ராஹிம் அஸிஸி தெரிவித்துள்ளார்.

'இஸ்ரேலின் இராணுவ மையங்கள் மற்றும் தளவாடங்களே எங்கள் இலக்காக இருந்தன. கணிப்புகள் ஒருவேளை தவறானால் பொதுமக்களும் கூட பாதிப்புகளை சந்திக்கும் நிலையும் வரலாம். இஸ்ரேல் மீண்டும் தவறிழைத்தால் அடுத்தக் கட்டமாக இரண்டாவதாக நடத்தப்படும் தாக்குதல் பேரழிவை ஏற்படுத்துவதாக இருக்கும்' என்று அவர் மிரட்டல் விடுத்தார்.

ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி எக்ஸ் சமூகதளத்தில் வெளியிட்ட பதிவில், 'இஸ்ரேலிய அரசு மேலும் பதிலடிக்கு தூண்டும் வரை நடவடிவக்கை நிறைவுக்கு வந்துள்ளது' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஏவுகணைத் தாக்குதலை அடுத்து இஸ்ரேலுக்கு அமெரிக்கா முழு ஆதரவை வழங்குவதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் குறிப்பிட்டுள்ளார்.

### தரைவழி மோதல்

லெபனானில் தரைவழி படை நடவடிக்கையை ஆரம்பித்ததாக இஸ்ரேல் குறிப்பிட்டபோதும் லெபனானுக்குள் ஊடுருவ முயன்ற இஸ்ரேலிய துருப்புகளுடன் கடுமையாகச் சண்டையிட்டதாக ஹிஸ்புல்லா கூறியது.

இதன்போது இரு தரப்புக்கும் இடையே தரை வழியே மோதல் இடம்பெற்றிருப்பது இது முதல் முறையாகும். இந்த மோதல்கள் நேற்று லெபனான் நிலப்பகுதிக்குள்ளேயே இடம்பெற்றுள்ளது.

வழக்கமான காலாட்படை மற்றும் கவசப் பிரிவுகள் லெபனானில் தரைவழி நடவடிக்கையில் இணைந்திருப்பதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது. லெபனானில் இஸ்ரேலிய இராணுவ கமாண்டர் ஒருவர் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது. தெற்கு லெபனானில் இஸ்ரேல் நடத்திய ஆளில்லா விமானத் தாக்குதலில் லெபனான் படை வீரர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கடந்த செப்டெம்பர் நடுப்பகுதியில் லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல்களை தீவிரப்படுத்தியதோடு இதனால் லெபனானில் இதுவரை 1000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பதோடு பல்லாயிரம் பேர் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் லெபனான் தலைநகர் பெய்ரூட்டில் உள்ள ஹிஸ்புல்லா இலக்குகள் மீது நேற்று தாக்குதல்களை நடத்தியதாக இஸ்ரேல் குறிப்பிட்டது. தெற்கு பெய்ரூட்டில் இருந்து சுமார் 20 வெடிப்புச் சத்தங்கள் கேட்டதாகவும் அங்கிருந்து கரும் புகை எழுந்ததாகவும் அங்கிருக்கும் ஏ.எப்.பி. செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

தெற்கு லெபனானில் இருந்து இடம்பெயர்ந்து தற்போது மத்திய பெய்ரூட்டில் வசிக்கும் யூசப் ஆமிர் என்பவர், 'இந்தப் போரினால் நான் வீடு மற்றும் உறவினர்களை இழந்திருக்கிறேன். அவற்றையெல்லாம் லெபனானுக்காகவும் ஹிஸ்புல்லாவுக்காகவும் தியாம் செய்கிறேன்' என்று குறிப்பிட்டார்.

பெய்ரூட் குடியிருப்பாளரான 27 வயது எலி ஜபூர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் கூறும்போது, 'ஹிஸ்புல்லாவின் அரசியலை நான் எதிர்த்தபோதும், எல்லையை பாதுகாப்பதற்காக நான் அவர்களுக்கு ஆதரவு வழங்குகிறேன்' என்றார்.

வடக்கு இஸ்ரேலில் நேற்றுக் காலையில் லெபனானில் இருந்து வீசப்பட்ட ரொக்கெட் குண்டுகளால் அபாய ஒலி எழுப்பப்பட்டது. இஸ்ரேல் மற்றும் லெபனான் எல்லையை ஒட்டி இருக்கும் ஹைபா மற்றும் கலிலி பகுதிகளில் இஸ்ரேலிய பாதுகாப்புப் படை இந்த எச்சரிக்கையை விடுத்தது.

நேற்றுக் காலை வரை லெபனானில் இருந்து 100க்கும் அதிகமான ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டதாக இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மறுபுறம் இஸ்ரேலிய பாதுகாப்புப் படை தெற்கு லெபனானில் மேலும் 25 கிராமங்களில் இருக்கும் மக்களுக்கு புதிய வெளியேற்ற உத்தரவு ஒன்றை நேற்று பிறப்பித்தது.

# இஸ்ரேலிய டாங்கிகள் முன்னேறி தாக்குதல்: காசாவில் 60 பேர் பலி



காசாவெங்கும் இஸ்ரேல் நடத்திய கடுமையான தாக்குதல்களில் குறைந்தது 60 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதோடு தெற்கில் கான் யூனிஸ் நகரின் பல பகுதிகளை நோக்கி இஸ்ரேலிய டாங்கிகள் முன்னேறி வருவதாக பலஸ்தீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கான் யூனிஸின் கிழக்கு மற்றும் மத்திய பகுதியில் இஸ்ரேலிய டாங்கிகள் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு கடும் தாக்குதல்களை நடத்தியதை அடுத்து அங்கிருந்து பகுதி அளவு பின்வாங்கி உள்ளன. இதன்போது குறைந்தது 40 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்ததாக பலஸ்தீன வானொலி மற்றும் ஹமாஸ் ஊடகம் தெரிவித்துள்ளது.

மறுபுறம் கடந்த செவ்வாய் இரவு தொடக்கம் நடத்திய தாக்குதல்களில் காசா நகரில் குறைந்தது 22 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன. இதில் காசா நகரில் உள்ள இடம்பெயர்ந்த மக்கள் தங்கி இருக்கும் பாடசாலை ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 17 பேர் பலியாகி இருப்பதோடு இடம்பெயர்ந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் அல் அமல் அனாதை இல்லத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் மேலும் ஐந்து பேர் பலியானதாக காசா மருத்துவ வட்டாரம் கூறியது.

காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் ஆரம்பித்து ஓர் ஆண்டு நெருங்கி இருக்கும் நிலையில் பலஸ்தீன போராளிகள் தொடர்ந்து இஸ்ரேலியப் படையுடன் போரிட்டு வருவதோடு அவ்வப்போது இஸ்ரேல் மீது ரொக்கெட் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். எனினும் இஸ்ரேலின் 'அயர்ன் டோம்' வான் பாதுகாப்பு அமைப்பு அவ்வாறான ரொக்கெட் குண்டுகளை இடைமறித்து வருகிறது.

காசாவில் இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 41,600ஐ தாண்டியுள்ளது.

# எண்ணெய் விலை உயர்வு



இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து மசகு எண்ணெய் விலை ஒரு டொலருக்கு மேல் ஏற்றம் கண்டுள்ளது.

சர்வதேச சந்தையில் பிரென்ட் மசகு எண்ணெய் விலை பீப்பாய் ஒன்றுக்கு 1.08 டொலர்கள் அதிகரித்து 74.64 டொலர்களாக உயர்ந்துள்ளது. இதேநேரம் அமெரிக்க மேற்கு டெக்ஸாஸ் இடைநிலை, மசகு எண்ணெய் 1.12 டொலர்கள் அதிகாரித்து பீப்பாய் ஒன்று 70.95 டொலர்களாக உச்சம் பெற்றுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை (01) வர்த்தகத்தின் நடுவே இந்த இரு மசகு எண்ணெய் விலைகளும் 5 வீதத்திற்கும் மேல் அதிகரித்தது.

உலகின் ஏழாவது மிகப்பெரிய மசகு எண்ணெய் உற்பத்தியாளராக ஈரான் உள்ளது. ஓபெக் எனப்படும் மசகு எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டமைப்பில் உள்ள நாடுகளில் மூன்றாவது பெரிய மசகு எண்ணெய் உற்பத்தியாளராகவும் அது உள்ளது.

இந்நிலையில் மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் போர் பதற்றம் அதிகரித்திருப்பதோடு மோதல் மேலும் தீவிரமடைந்தால், ஹார்முஸ் கடல் வழியாக எண்ணெய் கப்பல் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படக்கூடும் என அஞ்சப்படுகிறது. ஓமன் மற்றும் ஈரான் இடையே உள்ள ஹார்முஸ் நீரிணை வழியே உலக வர்த்தகத்தில் 25 வீதமான மசகு எண்ணெய் விநியோகம் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# டெல் அவிவ் துப்பாக்கிச் சூடு கத்திக் குத்தில் ஏழு பேர் பலி



இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு மற்றும் கத்திக் குத்துத் தாக்குதல்களில் ஏழு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஜப்பா பகுதியில் உள்ள பொது மக்கள் மீது நேற்று முன்தினம் (01) துப்பாக்கிதாரி கண்மூடித்தனமாக சூடு நடத்தியதில் மேலும் பலர் காயமடைந்திருப்பதோடு சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக இஸ்ரேல் உறுதி செய்துள்ளது.

ரயில் வண்டியில் அரம்பமான இந்தத் தாக்குதல் தொடர்ந்து நடைமேடையிலும் இடம்பெற்றதாக உள்ளூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சடலங்கள் வீதியில் சிதறி இருக்கும் படங்கள் சமூக ஊடகத்தில் வெளியாகியுள்ளன.

துப்பாக்கிதாரி மற்றும் கத்தி வைத்திருந்த இரு தாக்குதல்தாரிகளும் பொதுமக்களால் சுட்டுக் கொல்லப்பட்டதாக பொலிஸ் தரப்பு குறிப்பிட்டது.

இதனை ஒரு பயங்கரவாதத் தாக்குதலாக இஸ்ரேல் குறிப்பிட்டபோதும் இந்தத் தாக்குதலுக்கு எந்த பலஸ்தீன தரப்பம் உடன் பொறுப்பேற்கவில்லை. இந்தத் தாக்குதல் இடம்பெற்ற விரைவிலேயே இஸ்ரேல் மீது ஈரான் ஏவுகணை தாக்குதலை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒக்டோபர் மாதம் 3ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# அளக்கும் அலகுகள், தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்
## இலங்கை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## விஞ்ஞான உபகரணங்களின் வழங்கல், விநியோகம் மற்றும் நிறுவுதலுக்கான பெறுகை

மாஹேனவத்த, பிட்டிபன, ஹோமாகமவில் அமைந்துள்ள தேசிய அளத்தல் ஆய்வுகூடத்திற்குத் தேவையான பின்வரும் ஆய்வுகூட உபகரணங்களின் வழங்கல், விநியோகம் மற்றும் நிறுவுதலுக்கான பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து அளக்கும் அலகுகள், தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன. அனைத்து விபரங்களும் விலைமனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. **PROCUREMENT NO. MS/F/2/PROC/2024/02/I- DIMENSION LABORATORY**

| வரிசை இலக்கம் | உருப்படி | அளவு | விலைமனு பிணை |
|---|---|---|---|
| 01 | Travelling Microscope | 1 | ரூபா 125,000.00 |
| 02 | Linear Measurement Bench with a High-Resolution Microscope | 1 | |
| 03 | Depth Micro Checker | 1 | |
| 04 | Micrometer Stand | 3 | |
| 05 | Set of Long Gauge Blocks: Grade K | 1 | |

**PROCUREMENT NO. MS/F/2/PROC/2024/02/II - TIME, ELECTRICAL, GAS& FORCE LABORATORIES**

| வரிசை இலக்கம் | உருப்படி | அளவு | விலைமனு பிணை |
|---|---|---|---|
| 01 | Cesium Primary Frequency Standard | 1Unit | ரூபா 607,000.00 |
| 02 | High Resolution Universal Time Interval and Frequency Counter | 2 Unit | |
| 03 | Calibration Gas Mixtures | 2 units from each gas mixture | |
| 04 | Gas Analyzer | 2 Units | |
| 05 | Gas flow meter | 2 Units | |
| 06 | 1 Ohm Resistance Standards | 3 | |
| 07 | 10 kilo Ohm Resistance Standards | 3 | |
| 08 | Force standard calibration system | 1 Unit | |
| 09 | Torque standard calibration system | 1 Unit | |

**PROCUREMENT NO. MS/F/2/PROC/2024/02/III –VOLUME LABORATORY**

| வரிசை இலக்கம் | உருப்படி | அளவு | விலைமனு பிணை |
|---|---|---|---|
| 01 | 2’ inch Flowmeter | 1 | ரூபா 50,000.00 |
| 02 | 1’ inch Flowmeter | 1 | |
| 03 | 3’ inch Flowmeter | 1 | |
| 04 | Syringe Pump | 1 | |
| 05 | Digital Pressure Gauge (Hydraulic) | 1 | |
| 06 | Oil free- Air Compressor | 1 | |

**PROCUREMENT NO. MS/F/2/PROC/2024/02/IV - TEMPERATURE LABORATORY**

| வரிசை இலக்கம் | உருப்படி | அளவு | விலைமனு பிணை |
|---|---|---|---|
| 01 | Hand-held Precision Digital Thermometer | 02 | ரூபா 84,000.00 |
| 02 | Multifunction loop calibrator (Handheld) for Calibration of temperature controller | 03 | |
| 03 | IR radiation Thermometer | 02 | |
| 04 | Automatic level Telescope | 01 | |
| 05 | High Temperature Data Logger | 20 | |
| 06 | Semi Standard Thermocouple Thermometer | 02 | |
| 07 | High Precision Standard Platinum Resistance Thermometer | 01 | |
| 08 | Dry block calibration bath for ultra-low Temperatures | 02 | |
| 09 | Dry block calibration bath for low Temperatures | 01 | |

**PROCUREMENT NO. MS/F/2/PROC/2024/02/V- PRESSURE LABORATORY**

| வரிசை இலக்கம் | உருப்படி | அளவு | விலைமனு பிணை |
|---|---|---|---|
| 01 | Vacuum measurement Controller with gauge sensor | 1 | ரூபா 60,000.00 |
| 02 | Automatic display of the pistons floating position using laser displacement which operating with portable computer control and a floating position monitoring software | 1 | |

1. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
2. மேல் குறிப்பிடப்பட்ட பெறுகை இலக்கங்களின் கீழ் வெவ்வேறாக பெறுகைக்காக விலைமனு படிவங்கள் வழங்கப்படும்.
3. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதியைப் பெறுவதற்கு விலைமனுதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாத விலைமனுதாரர்களாக இருத்தல் வேண்டும்.
4. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற தகுதி பெற்ற விலைமனுதாரர்களுக்கு ஆங்கில மொழியில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு படிவங்களை, மீளளிக்கப்படாத 5,000 ரூபா தொகையை (ஒரு விலைமனு படிவத்திற்காக) செலுத்தி மாஹேனவத்த, பிட்டிபன, ஹோமாகமவில் அமைந்துள்ள அளக்கும் அலகுகள், தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு, 2024 ஒக்டோபர் மாதம் 09 ஆம் திகதி தொடக்கம் 2024 ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.30 தொடக்கம் பி.ப. 3.00 வரை விலைமனு படிவங்கள் வழங்கப்படும்.
5. 2024 டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
6. இலங்கையில் இயங்கும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதம் ஒன்றின் மூலம், விலைமனு பிணை ஒன்றுடன் சமர்ப்பித்தல் வேண்டும். (விலைமனு பிணைப் பெறுமதி மேலுள்ள ஒவ்வொரு அட்டவணையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது). 2025 ஜனவரி 30 ஆம் திகதி வரை விலைமனு பிணை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
7. பூர்த்தி செய்யப்பட்டு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள், மாஹேனவத்த, பிட்டிபன, ஹேமாகமவில் அமைந்துள்ள அளக்கும் அலகுகள், தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் திட்டமிடல் பிரிவில் உள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இடுவதற்கு அல்லது கீழ் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் 2024 ஒக்டோபர் 30 ஆம் திகதி பி.ப. 02.00க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.
8. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என இரு உறைகளில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு, அந்த உறைகளில் “**ORIGINAL**” மற்றும் “**COPY**” என்று குறிப்பிடுதல் வேண்டும்.
9. குறிப்பிட்டவாறு பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இடுகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் “விஞ்ஞான உபகரணங்களின் வழங்கல், விநியோகம் மற்றும் நிறுவுதல்” மற்றும் “குறித்த பெறுகை இலக்கத்தைக்” குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.
10. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2024 ஒக்டோபர் 15 ஆம் திகதி மு.ப. 10.30க்கு அளக்கும் அலகுகள், தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.
11. விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற உடன் விலைமனுக்களைத் திறப்பது 2024 ஒக்டோபர் 30 ஆம் திகதி பி.ப. 02.00க்கு அளக்கும் அலகுகள், தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறுவதோடு, அதற்காக விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் குறித்த நேரத்திற்கு பங்கேற்றல் வேண்டும். தாமதித்துக் கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
12. எந்த ஒரு விலைமனுவையும் நிராகரிப்பது அல்லது எந்த ஒரு காரணமும் கூறாது விலைமனுக் கோரலின் முழுமையான செயற்பாடுகளையும் இரத்துச் செய்யும் உரிமை பெறுகைக் குழு வசமானது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அளக்கும் அலகுகள், தரங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம்,**
**மாஹேனவத்த, பிட்டிபன,**
**ஹோமாகம,**
**இலங்கை.**

**தொலைபேசி இல.: 011-2182255 / 0112182250**
**தொலைநகல் இல.: 011-2182255 / 0112182254**
**மின்னஞ்சல் முகவரி: measurementunit101@gmail.com**

# கமத்தொழில், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சு

SARP Smallholder Agribusiness & Resilience Project

IFAD Investing in rural people

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB 01)

## கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கூட்டிணைவுடன் சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழுதல் செயற்றிட்டம் (SARP)

### IFAD Loan No: 2000003227

1. சிறியளவிலான விவசாய வணிகம் மற்றும் மீண்டெழுதல் செயற்றிட்டத்தின் (SARP) செலவை நோக்கி விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திடம் (IFAD) இருந்து இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கு கடன் ஒன்று கிடைக்கப்பெற்றிருப்பதோடு, குருநாகல் மாவட்டத்திலுள்ள எஹெட்டுவெவ பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் சிறு நீர்ப்பாசன திட்டங்களை புனரமைப்பதற்கான ஒப்பந்தங்களின் கீழான கொடுப்பனவுகளுக்கு இந்த கடனின் பகுதியை பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. அளவுப் பத்திர அடிப்படையில் ஒவ்வொரு மற்றும் அனைத்து திட்டங்களுக்காகவும் (ஒப்பந்தம்) ஒவ்வொன்றிற்கும் ஒரு விலைமனுவாக இருக்கும் வகையில் 05 சிறிய நீர்ப்பாசன திட்டத்தின் புனரமைப்பை நிறைவேற்றுதல் மற்றும் பூர்த்தி செய்வதற்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து தொழில்வழங்குநரான குருநாகல் மாவட்ட ‘‘கமநல அபிவிருத்தித் திணைக்கள பிரதி ஆணையாளர்’’ (செயற்படுத்துதல்) முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன. கீழுள்ள அட்டவணையில் விபரங்கள் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

